




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:248 | 24-03-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

24.03.2026 பங்குனி 10
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.16

திதி:
இன்று இரவு 7.30 வரை சஷ்டி பின்பு சப்தமி

நட்சத்திரம்:
இன்று இரவு 10.10 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்

யோகம் :
இன்று காலை 11.57 வரை ப்ரீதி பின்பு ஆயுஷ்மான்.

கரணம்
இன்று காலை 8.42 வரை கௌலவம் பின்பு இரவு 7.30 வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று இரவு 10.10 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 10.10 வரை சுவாதி பின்பு விசாகம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது

## மக்களவையில் பிரதமர் மோடி தகவல்



**புதுடெல்லி, மார்ச் 24:**

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், இந்தியாவில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளதாகவும், 41 நாடுகளில் இருந்து இந்தியா எரிபொருள் இறக்குமதியில் ஈடுபடுவதாகவும் மக்களவையில் பிரதமர் மோடி கூறினார்.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டு வரும் பதற்றம் குறித்தும், அதனால் நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், அதைப் போக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் இன்று உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர், "கடந்த பத்தாண்டுகளில், நெருக்கடி காலங்களுக்காக கச்சா எண்ணெயைச் சேமித்து வைப்பதற்கு இந்தியா முன்னுரிமை அளித்துள்ளது. இன்று, இந்தியா வசம் 53 லட்சம் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. மேலும், இதை 65 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 11 ஆண்டுகளில் எரிபொருள் இறக்குமதி ஆதாரங்களைப் பன்முகப்படுத்துவதன் மூலம், இந்தியா தனது பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக, நாம் 27 நாடுகளில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்து வந்தோம். ஆனால் இன்று 41 நாடுகளில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்கிறோம். கடந்த பத்தாண்டுகளில், கச்சா எண்ணெய் சேமிப்பிற்கு நாங்கள் முன்னுரிமை அளித்துள்ளோம். அதனால் நம்மிடம் இப்போது பெரியளவில் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது.

மேலும், நமது சுத்திகரிப்புத் திறனும் தற்போது அதிகரித்துள்ளது. சீரான விநியோகத்தைப் பராமரிக்க இந்தியா உலகளாவிய கூட்டாளிகளுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட்டு வருகிறது.

நாங்கள் பல நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். எரிவாயு மற்றும் எண்ணெய் தேவைகளின் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்த எங்களால் முடிந்தவரை முயற்சித்து வருகிறோம்.

இருப்பினும், அப்பகுதியில் நிலவும் சூழ்நிலையால் அபாயங்களும் ஏற்படுகின்றன. கச்சா எண்ணெய், எரிவாயு, உரம் மற்றும் பல எரிபொருள் இறக்குமதியின் பெரும் பகுதி ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே வருகிறது.

இந்த வழித்தடம் தடுக்கப்பட்டிருந்த போதிலும், நமது தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை நாங்கள் உறுதிசெய்து வருகிறோம்.

நாங்கள் 60 சதவிகிதம் எல்பிஜி-யை இறக்குமதி செய்கிறோம். ஆனாலும், வீட்டுத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம்" என்று அவர் கூறினார்.

# அ.தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு: பா.ஜ.க. -27, பா.ம.க.-18, அ.ம.மு.க. -11 தொகுதிகளில் போட்டி



**சென்னை, மார்ச் 24:**

தமிழகத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல் ) 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்த வகையில், தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. அதேபோல், வேட்புமனு தாக்கல் வரும் 30-ந் தேதி தொடங்க உள்ளது.

வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது.

இந்த நிலையில், தமிழக பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் பியூஷ் கோயல் இன்று சென்னை வந்துள்ளார். சென்னை விமான நிலையம் வந்த பியூஸ் கோயலை பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணை மந்திரி எல். முருகன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு அ.தி. மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய மந்திரி பியூஷ் கோயல், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி. வி.தினகரன், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி(என். டி.ஏ.) கட்சிகளின் தலைவர்கள் நேற்று வருகை தந்தனர்.

தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள 3 முக்கிய கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி பா.ஜ.க. 27 தொகுதிகளிலும், பா.ம.க. 18 தொகுதிகளிலும், அ.ம.மு.க. 11 தொகுதிகளிலும் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து என். டி.ஏ. கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்ற சிறிய கட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதிகள் தொடர்பான விவரங்கள் அடுத்தடுத்து வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாத்தான்குளம் வழக்கு: 9 பேரும் குற்றவாளிகள்!

**சாத்தான்குளம், மார்ச் 23:**

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் வணிகர் ஜெயராஜ் (58). இவரது மகன் பென்னிக்ஸ் (31). இவர்கள் இருவரும் அதே பகுதியில் கைப்பேசி விற்பனை, பழுது நீக்கம் செய்யும் கடை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், கடந்த 2020-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் கரோனா பொது முடக்கம் அமலில் இருந்த போது, கைப்பேசி கடையை தாமதமாக அடைத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதன் காரணமாக, காவல் துறையினர் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கியதில் இருவரும் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், காவலர்கள் முத்துராஜ், சாமிதுரை, செல்லதுரை உள்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. இந்த வழக்கு மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

வழக்கு விசாரணையில், சிபிஐ தரப்பு வழக்குரைஞர் விஜயன் தனது இறுதி வாதங்களை முன்வைத்துவிட்டார். மேலும், கைது செய்யப்பட்ட முன்னாள் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர் ரகு கணேஷ், காவலர்கள் முத்துராஜ், சாமிதுரை, செல்லதுரை ஆகியோர் தரப்பில் இறுதி வாதங்கள் நிறைவடைந்தன. வழக்கு தொடர்பாக அனைத்துத் தரப்பினரின் இறுதி வாதங்களும் நிறைவு பெற்றன.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 9 காவலர்களும் மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் இன்று மாலை ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், நீதிபதி முத்துக்குமரன் தீர்ப்பை வாசித்தார். "ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் காவல்துறையினர் தாக்கியதால் தான் காயம் ஏற்பட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. உயிரிழந்த ஜெயராஜுக்கு இதயம் மற்றும் நுரையீரல் பிரச்னை இருந்தது. ஆனால், நோய் காரணமாக உயிரிழக்கவில்லை.



கம்பி போன்ற ஆயுதங்களால் தாக்கியதால்தான் இருவரும் உயிரிழந்ததாக உடற்கூராய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உத்தரவின் பேரில் மற்ற காவலர்கள் தாக்கியுள்ளனர். கைகளை கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு தாக்கியிருப்பது உடற்கூராய்வில் தெரியவந்துள்ளது. இரவு முழுவதும் இடைவெளி விட்டுவிட்டு காவல்துறையினர் இருவரையும் தாக்கியுள்ளனர். தந்தை, மகனை வைத்து அடித்துப் பழகலாம் எனக் காவல்துறையினர் அவர்களுக்குள் பேசிக் கொண்டது சிபிஐ குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று நீதிபதி தெரிவித்தார்.

மேலும், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உள்பட 9 பேரும் குற்றவாளிகள் என்று நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

தொடர்ந்து 9 பேருக்கும் தண்டனை விபரங்கள் மார்ச் 30 ஆம் தேதி அறிவிக்கப்படும் எனவும் நீதிபதி முத்துக்குமரன் தெரிவித்தார்.

# போர்ப் பதற்றத்தால் செஸ் போட்டியிலிருந்து கொனேரு ஹம்பி விலகல்!



**சென்னை, மார்ச் 24:**

மேற்கு ஆசியாவில் நிலவும் போர் மற்றும் பதற்றமான சூழல் காரணமாக ஹம்பி விலகியதைத் தொடர்ந்து அவருக்கு பதிலாக உக்ரைனின் அன்னா முசிசுக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஃபிடே மகளிர் கேண்டிடேட்ஸ் சதுரங்கப் போட்டியில் கொனேரு ஹம்பி பங்கேற்கும் போட்டி சைப்ரஸ் நாட்டின் பாபோஸ் நகரில் வரும் 28 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

ராபிட் செஸ் போட்டியில் இரண்டு முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற ஹம்பி, தற்போது சாம்பியனாக உள்ள ஜூ வென்ஜுனுக்கு எதிராக இப்போட்டியில் பங்கேற்க இருந்தார்.

இந்நிலையில் மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றம் காரணமாக போட்டியில் இருந்து விலகுவதாக கொனேரு ஹம்பி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக எந்தவொரு முக்கியமான போட்டியாக இருந்தாலும் தனிப்பட்ட பாதுகாப்பிற்கு முன்பு பெரிதல்ல. தற்போதைய சூழ்நிலையில் முழுமையான பாதுகாப்பை என்னால் உணர முடியவில்லை. எனப் பதிவிட்டுள்ளார்.

# தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனை: இதுவரை ரூ.151 கோடி பறிமுதல்

**சென்னை, மார்ச் 24:**

தமிழகத்தில் ஏப்.23-ம் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் வந்துள்ளதால் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதை கட்டுப்படுத்தும் வகையில், தேர்தல் கமிஷன் 50,000 ரூபாய்க்கு மேல் கொண்டு செல்லும்போது உரிய ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிட்டது.

இதை கண்காணிக்க, மாவட்டம் முழுவதும் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது வரை தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய அதிரடி சோதனையில் ரூ.151 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் நடைபெறும் தேர்தல் பறக்கும் படையினரின் வாகன சோதனையில் இதுவரை ரூ.151 கோடி பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பாக சி-விஜில் செயலி மூலம் இதுவரை 794 புகார்கள் பெறப்பட்டுள்ளன. 20 புகார்கள் பரிசீலனையில் உள்ளன, மற்ற அனைத்து புகார்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிதாக வாக்காளர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 50 சதவீதம் பேருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளை கணக்கிடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## வாக்காளர்களுக்கு மேம்பட்ட வசதிகள்

தமிழ்நாடு சட்டசபை தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களின் வசதியை உறுதி செய்யவும், மேம்பட்ட வாக்குப்பதிவு அனுபவத்தை வழங்கவும் இந்திய தேர்தல் ஆணையம் பல முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

1. வாக்காளர் தகவல் சீட்டை (Voter Information Slip) மேலும் எளிதாக்கும் வகையில், அதில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பாகம் எண் ஆகியவை தெளிவாக தெரியும் வண்ணம் தேர்தல் ஆணையம் மாற்றியமைத்துள்ளது. இதன் மூலம் வாக்காளர்கள் தங்களது வாக்கு சாவடியை கண்டறிவதும், இதர விவரங்களை தெரிந்து கொள்வதும் எளிதாகும்.

ஈரான் அணு உலை மீது 5 நாட்களுக்கு தாக்குதல் இல்லை: டிரம்ப் திடீர் அறிவிப்பு

2. வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களின் வசதிக்காக, வாக்கு சாவடிகளில் கைபேசிகளை (Mobile Phones) ஒப்படைக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குச்சாவடியின் நுழைவாயில் அருகே மிகவும் எளிமையான 'புறா கூண்டு போன்ற ' (Pigeon hole) பெட்டி அல்லது சணல் பைகள் அமைக்கப்படும்; அங்கு வாக்காளர்கள் தங்களது கைபேசிகளை பாதுகாப்பாக வைத்து செல்லலாம்.

3. இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற 'ECINET' என்ற ஒருங்கிணைந்த ஒற்றை இணையதளத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இதில் ஆணையத்தின் 40-க்கும் மேற்பட்ட செயலிகள் மற்றும் இணையதளங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வாக்காளர்கள் பின்வரும் சேவைகளை பெறலாம், வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்தல், வாக்காளர் அடையாள அட்டையில் (EPIC) திருத்தங்கள் மேற்கொள்வது, வாக்குப்பதிவு சதவீத விவரங்களை பார்த்தல், வாக்கு சாவடி விவரங்களை அறிதல் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான உதவிகளை பெறுதல், தேர்தல் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவைகள் ஆகும். ECINET செயலியை கூகுள் பிளே ஸ்டோர் (Google Play Store) அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோர் (Apple App Store) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

4. பணம், மதுபானம், போதை பொருள் மற்றும் இதர தடை செய்யப்பட்ட பொருட்களை கண்காணித்து தடுக்க மாநிலம் முழுவதும் கண்காணிப்பு மற்றும் அமலாக்க குழுக்கள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றன என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்து உள்ளார்.








## திருக்குறள் குறள்-568

**இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு**



அமைச்சர் முதலான தன் இனத்தாரிடம் கலந்து எண்ணாத அரசன், சினத்தின் வழியில் சென்று சீறி நிற்பானானால், அவனுடைய செல்வம் சுருங்கும்.

## சிந்திக்க ஒரு நொடி



சிரிக்கும்போது நான்கு பேர்
உன்னுடன் சேர்ந்து
சிரிப்பார்கள்
ஏனென்றால்....
உலகம் ஜாலியானது
அதே அழும்போது
தனியாகத்தான்அழுவாய்.
ஏனென்றால் உலகம்
போலியானது....

**உஷா முத்துராமன்**

## நம் வாசவி அம்மன் வசந்த நவராத்திரி விழா 4-ஆம் நாள் உற்சவம்





**சென்னை, மார்ச் 24:**

திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி உற்சவம் 4-ஆம் நாள் ஸ்ரீ சிம்ஹ வாகனம் அலங்காரமும் உற்சவருக்கும், மூலவருக்கும், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வெண்பா வேந்தர் விருது



உரத்தை சிந்தனை அமைப்பு இவ்வாண்டில் சிறந்த வேண்பா எழுதியமைக்காக வெண்பா வேந்தர் விருது மற்றும் பொற்கிழியைப் பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களுக்கு அமைப்பின் தலைவர் உதயம்ராம் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

## ராஜலட்சுமி வேம்பு " இலக்கிய விருது" வழங்கும் விழா




"இலக்கியபீடம்" மாத இதழும் மாம்பலம் சந்திரசேகர் அவர்களும் இணைந்து வழங்கிய "ராஜலட்சுமி வேம்பு இலக்கிய விருது, " எழுத்தாளர், பதிப்பாளர்,பத்திரிகையாளர், ஆன்மிகச் சொற்பொழி வாளர் என பன்முகச் சாதனையாளரான, முனைவர், இடைமருதூர் கி. மஞ்சுளா அவர்களுக்கு சென்னையில் 22.3.2026 அன்று வழங்கப்பட்டது.

**செய்தி: குடந்தை பரிபூரணன்.**


## வசந்த நவராத்திரி 4-ஆம் நாள் உற்சவம், மற்றும் கிருத்திகை வழிபாடு

**திருவண்ணாமலை , மார்ச் 24:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 4-ஆம் நாள் (கல்வி வளர்ச்சி) ஸ்ரீமீனாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை, அபிஷேகங்கள், ரோஜாப்பூ, சாமந்திப்பூ மாலைகளால் அலங்கரித்து, தாமரைப் பூக்களால் அலங்காரங்கள், பிரசாதம், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

கிருத்திகை முருகப்பெருமானுக்கும் சிறப்பு அபிஷேகங்கள் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது.

முருகப் பெருமானுக்கும் பூஜைகளும் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ மீனாட்சி அம்மனை, முருகப்பெருமானையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.







**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அதிநவீன வீடியோ வாகனம் வாயிலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு






**திருவண்ணாமலை மார்ச் 24:**

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்பு துறை அதிநவீன வீடியோ வாகனம் வாயிலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாகனத்தை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க.தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து தேர்தல் விழிப்புணர்வு குறும்படத்தை பார்வையிட்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 'போதையால் ஓட்டு மொத்த சமுதாயத்தையும் சீரழித்து விடும்' ! செய்யாறில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் துருவன் செல்வமணி ஆவேசம் !

**செய்யாறு, மார்ச் 24:**

தமிழகத்தில் 'போதையால் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் சீரழித்து விடும்' என, செய்யாறில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் அறிமுக பொதுக் கூட்டத்தில் இக்கட்சியில், மாநில கொள்கை பரப்பு செயலாளர் துருவன் செல்வமணி ஆவேசமாக பேசினார். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டசபை தொகுதிக்கான நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக குத்தனூர் கிராமத்து சேர்ந்த தமிழ்ச்செல்வன் (24) அறிவிக்கப் பட்டுள்ளார். வேட்பாளருக்கான அறிமுக பொதுக்கூட்டம் செய்யாறில் நடந்தது.

இக்கட்சியின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் துருவன் செல்வமணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, வேட்பாளர் தமிழ்ச்செல்வனை மேடையில் அறிமுகப்படுத்தி அவர் பேசியதாவது;

'தேர்தல் எந்த நாட்டில் உண்மையாக நடக்கிறதோ அந்த நாடு தான் செழிப்பாக இருக்கும். தமிழகத்தில் தேர்தல் ஆணையம் - பொதுத் தேர்தல்களை ஏதோ கடமைக்காகவே நடத்தி முடிக்கிறது. சில கட்சியினர் அண்டா - குண்டாக்களை




கொடுத்து ஓட்டுக்களை விலைக்கு வாங்குகின்றனர். இதை நாம் தமிழர் கட்சியினர் தடுத்து வருகிறோம்.

ஆனால், தேர்தல் ஆணையம் இதை வேடிக்கை பார்த்து வருகிறது. விவசாயிகள் சிறுக சிறுக சேர்த்து வைத்த பணத்தை, வெளியில் எடுத்துச் சென்றால், தேர்தல் ஆணையம் தகுந்த 'பில்'லை கேட்கிறது. எந்த 'பில்'லை கொடுக்கப்பார்கள் விவசாயிகள்.

தமிழகத்தில் அடிப்படை கூட தெரியாமல் தேர்தல் விதிமுறைகள் வகுக்கப்படுகிறது. குடிப்பழக்கம் - போதையால் ஒட்டு மொத்த சமுதாயத்தையும் சீரழித்து விடுகிறது. தி.மு.க., - அ.தி.மு.க.,விற்கு மாறி மாறி ஒட்டு போட்டு ஜெயிக்க வைத்தால் கொஞ்ச நாட்களில் தமிழகம் பாதாளத்திற்கு சென்றுவிடும்.

இதை தடுக்க வேண்டும் என்றால், செய்யாறில் 'களம்' இறக்கப்பட்டுள்ள நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு விவசாயி சின்னத்தில் வாக்களித்து வெற்றிப் பெறச் செய்யுங்கள். 24 வயதுடைய இவர், ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர், பட்டப் படிப்பையும் முடித்துள்ளார்;

இவ்வாறு துருவன் செல்வமணி பேசினார்.

இக்கூட்டத்தில் மண்டல செயலாளர் சுகுமார், மாநில இளைஞரணி பாசறை ஒருங்கிணைப் பாளர்களான கதிரவன், பஞ்சமூர்த்தி, ராஜசேகர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வேலூரில் வாக்கு என்னும் மையத்தில் தேர்தல் அலுவலர்கள் திடீர் ஆய்வு !



**வேலூர், மார்ச் 24:**

வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையம் அமைய உள்ள வேலூர் தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு திடீர் ஆய்வு செய்தார். இந்த திடீர் ஆய்வின் போது தேர்தல் பொது பார்வையாளர்கள் ஸ்ரீமன் சுக்லா, யுகல் கிஷோர் பண்ட் ,மிர் தாரிக் அலி, சந்தீப் குமார், தேர்தல் காவல் பார்வையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களுடன் வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்ரமணியன், குடியாத்தம் கோட்டாட்சியர் சுபலட்சுமி, குடியாத்தம் வட்டாட்சியர் சந்தோஷ் குமார் ஆகியோரும் கலந்துகொண்டு பார்வையிட்டனர்.

## வெப்பவாதம் மற்றும் நீர்ச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க தமிழக அரசு மருத்துவமனைகளில் சிறப்பு வார்டு



தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், வெப்பவாதம் மற்றும் நீர்ச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க தமிழக அரசு மருத்துவமனைகளில் சிறப்பு வார்டுகளை அமைக்க சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.

ஆண்டுதோறும் வெப்ப அலையால் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு, மயக்கம் மற்றும் உடல்நலக் கோளாறுகளுக்கு தீர்வு காண இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மருந்துகள் மற்றும் தேவையான உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் செவ்வாடை அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

**வேலூர்,மார்ச் 24:**

வேலூர்மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது





குறிப்பிடத்தக்கது. திங்கள் கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. இதைத்தொடர்ந்து ஸ்ரீ ராகவேந்திரா ஸ்வாமி செவ்வாடை அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பலித்தார்.

தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர்.

இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

## அறிஞர் சங்கரவள்ளி நாயகம் அறக்கட்டளை சார்பில் மகளிர் தின விழா

**கோவில்பட்டி, மார்ச் 24:**

விளாத்திகுளம் பாரதி இலக்கிய மன்றம் மற்றும் கோவில்பட்டி அறிஞர் சங்கரவள்ளி நாயகம் அறக்கட்டளை சார்பில் மகளிர் தின விழா விளாத்திகுளம் TNDTA பள்ளியில் நடைபெற்றது. தமிழாசிரியை புளோரா பேரின்ப மணி வரவேற்றார்.தமிழ் ஆர்வலர் சம்பகுளம் மனோகர். தலைமை தாங்கினார். பாரதி இலக்கிய மன்றத் தலைவர்



கவிஞர் இப்ராஹிம், கழுகுமலை திருவள்ளுவர் மன்றத் தலைவர் பொன்ராஜ் பாண்டியன் முன்னிலை வகித்தனர். கல்வி, கலை இலக்கியம் மற்றும் சமூகப் பணிகளில் சாதனை படைத்த மகளிருக்கு "மிளிரும் நட்சத்திரம்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

மூத்த தமிழறிஞர் திருமலை முத்துச்சாமி விருதுகளை வழங்கி வாழ்த்திப் பேசினார். பனையூர் நாடார் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மரிய அனிதா, பட்டிமன்றப் பேச்சாளர் காயத்ரி வினோத்குமார், வழக்கறிஞர் முத்து செல்வராணி, விளாத்திகுளம் நூலகர் சுமித்ரா, தலைமைக் காவலர் கருப்பாயி, ஆசிரியை பொன்மலர் ஷீலா ஆகியோர் விருது பெற்றனர்

தொடர்ந்து கோவில்பட்டி சுப்புலட்சுமி தலைமையில் பாரதி பட்டி மன்றக் குழுவின் மகளிர் தின சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது. மன்றத்தின் நிறுவனர் முத்துப்பாண்டி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். மன்றச் செயலாளர் நாகராஜன் நன்றி கூறினார். நிறுவனர். தமிழ் ஆர்வலர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### 'டெல்லி மட்டுமல்ல, அமெரிக்காவே மிரட்டினாலும் மு.க.ஸ்டாலின் பணியமாட்டார்' - ஓ.பன்னீர்செல்வம்

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சமீபத்தில் தி.மு.க.வில் இணைந்தார். தொடர்ந்து, 20206 சட்டமன்ற தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வரும் ஓ.பன்னீர்செல்வம், பல்வேறு மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், சிவகங்கையில் ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம் 'எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றாலே மு.க.ஸ்டாலின் பயந்துவிடுகிறார்' என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் கூறியது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு ஓ.பன்னீர்செல்வம் கூறியதாவது;-

"தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லி மட்டுமல்ல, அமெரிக்காவே மிரட்டினாலும் பணியமாட்டார். தமிழகத்திற்கு பல நல்ல திட்டங்களை தந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பதை மக்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். தமிழக முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் இருக்கும் வரை தமிழ்நாடு யாருக்கும் தலைகுனியாது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### சட்டப்பேரவை தேர்தலில் வைகோ போட்டி?



சட்டப்பேரவைத் தேர்தலில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ போட்டியிட வேண்டும் என்று கட்சியினர் வலியுறுத்துகின்றனர். திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு விருப்பமான 10 தொகுதிகளின் பட்டியலை திமுகவிடம் கொடுத்துள்ளனர்.

மேலும் ஒதுக்கப்பட்ட நான்கு தொகுதிகளில் மூன்றில் உதயசூரியன் சின்னத்திலும், ஒரு தொகுதியில் தனி சின்னத்திலும் மதிமுக போட்டியிட உள்ளது. கட்சியின் பதிவை பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தொகுதியில் தனி சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக தனி சின்னத்தில் போட்டியிடும் தொகுதியில் நிச்சயம் வெற்றி பெற வேண்டும் என்ற நிர்பந்தமும் மதிமுகவுக்கு உள்ளது. எனவே, தனி சின்னத்தில் பிரபலமான வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்றும் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ போட்டியிட வேண்டும் எனவும் பெரும்பாலான மதிமுகவினர் வலியுறுத்தியுள்ளதாகவும் இறுதி முடிவை வைகோ எடுப்பார் என்றும் கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

### வாக்குக்கு பணம் தரும் வேட்பாளரை புறக்கணிப்போம்: மீனவ கிராமத்தில் எச்சரிக்கை பதாகை

வாக்குக்கு பணம் கொடுக்கவேண்டாம்; பெறவும் வேண்டாம்; பணம் கொடுக்கும் வேட்பாளரை புறக்கணிப்போம் என காரைக்கால் பகுதி கடலோர கிராமத்தினர் முடிவு செய்து பதாகை வைத்துள்ளனர்.

புதுவை சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெறவுள்ளது. தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும் நடைபெற இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

அந்தவகையில், செலவினங்களை கண்டறியவும், பொதுப்பார்வையாளர்கள், செலவினப்பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. அவர்களும் தேர்தல் ஆணைய வழிகாட்டுதலின்படி பணியாற்றிவருகிறார்கள்.

தேர்தல் என்றாலே வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது, பரிசுப்பொருட்கள் அளிப்பது இயல்பாகிவிட்டது.

பணம் பெற்றுக்கொண்டு வாக்களித்தால், நமக்கான உரிமையை மக்கள் பிரதிநிதிகளிடம் கோரமுடியாது என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், அவற்றை வாக்காளர்கள் பெரும்பான்மையினர் தேர்தல் சமயத்தில் பொருட்படுத்துவதில்லை. தேர்தல் வந்தாலே, போட்டியிடுவோர் பலரும் செலவுகளை நினைத்து கவலைப்படும் நிலையும் நிலவுவதை மறுக்க முடியாது.

இந்நிலையில், காரைக்கால் மாவட்டம், கடலோர மீனவ கிராமமான கிளிஞ்சல்மேடு செட்டியார் கிராமம், பஞ்சாயத்தார்கள், ஊர் பொதுமக்கள் சார்பில் பொதுஇடத்தில் டிஜிட்டல் பதாகை வைக்கப்பட்டுள்ளது.

'எச்சரிக்கிறோம் என்ற தலைப்பில்' வைக்கப்பட்டுள்ள அந்த பதாகையில், இக்கிராமத்தினருக்கு வாக்குக்கு பணம், பொருள் வழங்கக்கூடாது. மக்களும் அதனை வாங்கக்கூடாது. மீறினால் ஊர் கடுமையாக நடவடிக்கை எடுக்கும். வேட்பாளர்கள் யாரும் எங்கள் வாக்குக்கு விலை பேசவேண்டாம். எங்கள் வாழ்வாதாரத்துக்கு வழி செய்துகொடுங்கள். வாக்குக்கு பணம் கொடுக்கும் வேட்பாளரை புறக்கணிப்போம் என கூறப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரை நடைபெற்றுவரும் நிலையில், காரைக்காலில் கடலோர கிராமத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்த பதாகை வேட்பாளர்கள் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, பிற பகுதி மக்களிடமும் பேசுபொருளாகியுள்ளது.

## வேட்பாளர் பெயரின்றி சுவரெழுத்து விளம்பரங்கள்!




சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், விழுப்புரம் மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதிகளில் தங்கள் கட்சிகளுக்கான சுவா் விளம்பரங்களை வரைவதிலும், அதற்கான இடம் பிடிப்பதிலும் அரசியல் கட்சிகள் ஆா்வம் காட்டி வருகின்றன.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தோ்தல் ஏப்.23-ஆம் தேதி நடைபெறவள்ளது. இதற்கான வேட்புமனுதாக்கல் மாா்ச் 30ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. பேரவைத் தோ்தல் தேதி மாா்ச் 15-ஆம் தேதி அறிவிக்கப்பட்டவுடன் தோ்தல் நடத்தை விதிகள் உடனடியாகஅமலுக்கு வந்துவிட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி, மயிலம், வானூா், திண்டிவனம், விக்கிரவாண்டி, விழுப்புரம், திருக்கோவிலூா் ஆகிய 7 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளிலும் பேரவைத் தோ்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால், சட்டப்பேரவை உறுப்பினா் அலுவலகங்கள் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளன. தோ்தல் தேதி அறிவிப்பின் காரணமாக, மாவட்டத்திலுள்ள 7 தொகுதிகளின் நகரப் பகுதிகளில் பல்வேறு அரசியல் கட்சிகளின் சாா்பில் வரையப்பட்டிருந்த சுவா் விளம்பரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர கட்சிகளின் சாா்பில் பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்த கட்சி சாா்ந்த பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன.

தோ்தல் தேதி அறிவிக்கப்பட்டாலும் கூட்டணியில் தொகுதிகள் ஒதுக்கீடு, வேட்பாளா் பெயா் அறிவிப்பு போன்ற நிகழ்வுகள் இதுவரை நடைபெறவில்லை. இதனால் தோ்தல் களம் இன்னும் சூடுபிடிக்க தொடங்காமல் மந்தமான நிலையிலேயே காணப்படுகிறது. அதே நேரத்தில் கிராமப்புறங்களில் தங்கள் கட்சிக்கான சுவா் விளம்பரங்களை வரைவதற்காக இடம்பிடித்தல், சுவா் விளம்பரம் செய்தல் போன்ற பணிகளில் அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தியுள்ளன.

நகரப் பகுதிகளிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் வீட்டின் உரிமையாளா் அனுமதியின்றி சுவா் விளம்பரங்கள் செய்யக்கூடாது என்பது தோ்தல் ஆணைய விதியாகும். குறிப்பாக நகரப் பகுதிகளில் சுவா் விளம்பரங்கள் என்பது அரிதாகிவிட்ட நிலையில், கிராமப்புறங்களில் சுவா் விளம்பரங்கள் தற்போது அதிகமாகி வருகின்றன.

குறிப்பாக விழுப்புரம்சட்டப்பேரவைத்தொகுதிக்குள்பட்ட சாலை அகரம், கோலியனூா், வளவனூா உள்ளிட்ட பகுதிகளில் சுவா விளம்பரங்களில் திமுக மற்றும் அதிமுகவினா் அதிகளவில் வரைந்துள்ளனா். இரு கட்சிகளின்சாா்பில் தங்கள் கட்சிகளின் சின்னங்களை சுவா்களில் வரைந்துள்ள அவா்கள், கட்சி சாா்பில் போட்டியிடும் வேட்பாளா் பெயரை மட்டும் குறிப்பிடாமல் உள்ளன. பல இடங்களில் கூட்டணிக் கட்சிகளின் கொடி வண்ணத்தை தங்கள் கட்சி சின்னத்தில் வரைந்து, வாக்கு கோரியிருப்பது வித்தியாசத்தை ஏற்படுத்தியுள்ளது.

எங்கள் கட்சி சாா்பில் வேட்பாளராக யாா் அறிவிக்கப்பட்டாலும், அவரின் வெற்றிக்குப் பாடுபடுவதுதான் எங்கள் பணி. அந்த வகையில் தோ்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே பல இடங்களில் சுவா்களை முன்பதிவு செய்து, இடம்பிடித்துதற்போது சின்னத்தை வரைந்துள்ளோம். வேட்புமனுத் தாக்கல் தொடங்கிய பின்னா தோ்தல் பணி தீவிரமாகிவிடும் என எதிா்பாா்க்கிறோம் என்கின்றனா் திமுக, அதிமுகவினா்.

### 'த.வெ.க.வில் உளவாளிகள் ஊடுருவியுள்ளனர்: ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் தாக்கு



தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவன தலைவரான ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் நேற்று பழனிக்கு வந்தார். அப்போது அவர் திருஆவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமி கோவிலுக்கு சென்று தனது வேட்புமனுவை முருகப்பெருமான் சன்னதி, தட்சிணாமூர்த்தி சன்னதியில் வைத்து சிறப்பு பூஜை செய்து வழிபட்டார். தொடர்ந்து கோவில் வளாகத்தில் விளக்கு ஏற்றி வழிபட்ட அவர், சிறிது நேரம் தியானம் செய்தார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

புதுச்சேரியில் என். ரங்கசாமி தலைமையில் பா.ஜனதா, அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சிகள் கூட்டணி அமைந்துள்ளது. எங்கள் கூட்டணியில் தெளிவு உள்ளது. எனவே மாற்றத்தை கொண்டு வர தீவிரமாக வேலை செய்து வருகிறோம். த.வெ.க. ஏதாவது ஒரு கூட்டணியில் இணைந்திருக்க வேண்டும். ஆனால் விஜய்யுடன் இருக்கும் அந்த குழு சரியான வழியில் நடத்தப்படாமல் உள்ளது. தி.மு.க. உளவாளிகள் த.வெ.க.வில் ஊடுருவி இருப்பதால், அவர்கள் கூட்டணிக்கு செல்ல விடமாட்டார்கள்.

அவர்களின் அஜண்டா என்னவென்றால், த.வெ.க.வை தனியாக நிற்க வைத்து தோற்கடிப்பதுதான். அதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### சட்டசபை தேர்தல்: திமுக வேட்பாளர் நேர்காணல் நிறைவு



தமிழகம், புதுச்சேரியில் தி.மு.க. சார்பில் போட் டியிட விருப்பம் தெரிவித்தவர்களுக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடைபெற்று வருகிறது. கடந்த 17-ந்தேதி புதுச்சேரி மாநிலத்தில் போட்டியிட விரும்புகிறவர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது. தொடர்ந்து தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான நேர்காணல் கடந்த 18-ந்தேதி தொடங்கியது.

கட்சியில் மாவட்டங்கள் வாரியாக 18-ந்தேதி தென்மாவட்டங்களுக்கு உட்பட்ட மாவட்டங்க ளுக்கும், 19-ந்தேதி கொங்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கும், 20-ந்தேதி ராணிப் பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி உள்பட 41 மாவட்டங்களுக்கு உட்பட்ட தொகுதிகளுக்கான நேர்காணல் நடைபெற்றது.

நேற்று முன்தினம் 5-வது நாளாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடைபெற்றது. காலையில் கடலூர் கிழக்கு, விழுப்பு ரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சீபுரம் தெற்கு மாவட்டங்களுக்கான நேர்காணல் நடைபெற்றது. மாலையில் திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சீபுரம் வடக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு நேர்காணல் நடைபெற்றது.

தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேர்காணலை நடத்தினார். பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச்செயலாளர் கே.என். நேரு, அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் உடன் இருந்தனர்.

போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்தவர்களை தொகுதி வாரியாக அழைத்து மு.க.ஸ்டாலின் நேர்காணல் செய்தார். நேர்காணலில் பங்கேற்றவர்களிடம் தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்பு குறித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், திமுக வேட்பாளர் நேர்காணல் நேற்று (திங்கட்கிழமை) நிறைவு பெறுகிறது.

காலை 9 மணி திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களுக்கும், மாலை 4 மணி புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டத்துக்கான நேர்காணலும் நடைபெறுகிறது.

### திருப்தியடையும் வகையில் தொகுதி பங்கீடு அமையும்: பியூஷ் கோயல்



தமிழகத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்த வகையில், தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. அதேபோல், வேட்புமனு தாக்கல் வரும் 30-ந் தேதி தொடங்க உள்ளது. அதை வைத்து பார்க்கும்போது, வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது.

அ.தி.மு.க. கூட்டணியில் இன்னும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை முடியவில்லை. தொடர்ந்து இழுபறி நிலையே நீடித்து வருகிறது. இந்த நிலையில்தான், தமிழக பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் பியூஸ் கோயல் இன்று சென்னை வந்துள்ளார். சென்னை விமான நிலையம் வந்த பியூஸ் கோயலை பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணை மந்திரி எல்.முருகன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அதன்பின்னர் மத்திய மந்திரி பியூஸ் கோயல் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தொகுதிப்பங்கீடுக்கு காலக்கெடு நிர்ணயிக்கவில்லை. கூட்டணி கட்சித் தலைவர்கள் அனைவரும் அமர்ந்து பேசி தொகுதிப் பங்கீட்டு விவரங்களை அறிவிப்போம். அனைவரும் மகிழ்ச்சி மற்றும் திருப்தியடையும் வகையில் தொகுதிப் பங்கீடு அமையும். நாங்கள் அனைவரும் ஒன்றாக ஒரே குடும்பமாக உள்ளோம். தேர்தல் பிரசாரம் தொடங்கியதும் பிரதமர் மோடியின் தமிழ்நாடு வருகை குறித்து முடிவு செய்யப்படும்.

திமுக அரசின், முடிவு தொடங்கியுள்ளது. தமிழகம் மட்டுமல்ல நாடு முழுவதும் காங்கிரசை மக்கள் புறக்கணிக்கின்றனர்.

ஈபிஎஸ் உடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த உள்ளோம். திமுகவை எதிர்க்க தயாராக உள்ளோம். எடப்பாடி பழனிசாமி முதல்வராக வர வேண்டும் தமிழ்நாட்டு மக்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தேர்தலில் நானும், எனது மனைவி ராதிகாவும் போட்டியிடப் போவதில்லை: சரத்குமார்




செய்தியாளர்களிடம் சரத்குமார் கூறியதாவது: இந்தச் சந்திப்பில் நிர்வாகிகள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். குறிப்பாக, பாஜகவில் எனக்கு இது வரை எந்தப் பொறுப்பும் வழங்கப்படாதது குறித்து அவர்கள் கேள்வி எழுப்பினர். தேர்தல் நெருங்கும் வேளையில், உரிய பொறுப்புகள் இல்லாமல் எப்படித் தேர்தல் களத்தில் பணியாற்ற முடியும் என்பதே அவர்களின் பிரதான கேள்வி.

எங்கள் மாநில நிர்வாகிகளுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில், 'தலை வருக்கே (சரத்குமார்) பொறுப்பு இல்லாதபோது, எங்களுக்கு மட்டும் பொறுப்புகள் இருந்து என்ன பயன்?' என்ற கருத்தை நிர்வாகிகள் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர். கடந்த 2024 மார்ச் 12-ம் தேதி நாங்கள் பாஜகவில் இணைந்தோம்.

தேசிய அளவில் எனக்கு முக்கியப் பொறுப்பு வழங்கப்படும் என்று அப்போது உறுதியளிக்கப்பட்டது. ஆனால், தற்போது வரை எந்த பொறுப்பும் வழங்கப்படவில்லை. கார் ஓட்டத் தெரிந்தும், ஓட்டுநர் உரிமம் இருந்தும், காரை ஓட்ட அனுமதிக்கவில்லை என்றால் அதில் என்ன நியாயம் இருக்கிறது? கட்சியில் ஒரு பொறுப்பு இருந்தால் மட்டுமே என்னால் முழுமையாகச் செயல்பட முடியும்.

திருச்சி மாநாட்டில் எனது புகைப்படம் கூட மேடையில் இடம்பெறாதது நிர்வாகிகளிடையே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. பாஜகவில் பொறுப்பு வழங்க வேண்டும் என்ற எங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, பாஜக மாநிலத் தலைவருக்கும், தேசியத் தலைமைக்கும் கடிதம் அளிக்கவுள்ளேன். தலைமை எங்களது நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஒருவேளை பொறுப்புகள் வழங்கப்படவில்லை என்றால், மீண்டும் ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தி எனது அடுத்தகட்ட நிலைப்பாட்டை அறிவிப்பேன்.

தற்போதைய சூழலில் சமத்துவ மக்கள் கட்சியை மீண்டும் தொடங்கும் எண்ணம் எனக்கு இல்லை. அதேபோல், நடைபெறவுள்ள தேர்தலில் நானும், எனது மனைவி ராதிகாவும் போட்டியிடப் போவதில்லை. தற்போது வரை பாஜக எத்தனை இடங்களில் போட்டியிடுகிறது என்ற தெளிவு கூட இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# டிஜிட்டல் கைது மோசடி: ரூ.15 கோடிக்கு மேல் இழந்த கர்நாடக தொழிலதிபர்!

**பெங்களூரு, மார்ச் 23:**

கர்நாடகத்தில் சிபிஐ அதிகாரிகள் போல் நடித்து 81 வயது தொழிலதிபரிடம் இருந்து ரூ.15 கோடிக்கும் அதிகமான பணத்தை மோசடி கும்பலைச் சேர்ந்தவர்கள் ஏமாற்றியுள்ளனர்.

இதுகுறித்து அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அந்த தொழிலதிபருக்கு கடந்த ஆறு வாரங்களாக விடியோ அழைப்புகள் உட்பட பல தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. பாதிக்கப்பட்டவர் ரூ.25 லட்சத்தை சட்டவிரோதமாகப் பணமாக்கியதற்காக ரூ.5 லட்சம் கமிஷன் பெற்றதாகவும், சட்டவிரோத நிதி நடவடிக்கைகளுக்காக அவர் மீது புகார்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் மோசடிக்காரர்கள் கூறியுள்ளனர்.

பணமோசடி வழக்கில் அவரைக் கைது செய்யப்போவதாக மிரட்டிய அந்த குமபல், தொழிலதிபரை வற்புறுத்தி அவரது வங்கி கணக்கு விவரங்களைப் பெற்றுள்ளனர். தொடர்ந்து, பணத்தைப் பாதுகாப்பான அல்லது அரசு கணக்கிற்கு மாற்றச் சொல்லியுள்ளனர். விசாரணை முடிந்ததும பணம் திருப்பித் தரப்படும் என்று அவருக்கு அந்த கும்பல் உறுதியளித்துள்ளனர்.

ஆனால், அதன் பிறகு அந்த கும்பலிடமிருந்து எந்தத் தகவலும் வராததால் அவர்கள் பயன்படுத்திய எண்களைத் தொழிலதிபர் தொடர்புகொண்டுள்ளார். அதனையும் தொடர்புகொள்ள முடியாததால் பாதிக்கப்பட்டவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, அவர் கடந்த வாரம் போலீஸில் புகார் அளித்தார்.

சைபர், பொருளாதார மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீஸார் நடத்திய விசாரணையில், பணம் மாற்றப்பட்ட கணக்கைக் கண்டறிந்தனர். எனினும், அதிலிருந்து ரூ.90 லட்சத்தை மட்டுமே அவர்களால் மீட்க முடிந்தது. இந்த மோசடியில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து கைது செய்ய பெலகாவி போலீஸ் ஆணையர் ஒரு தனிப்படையை அமைத்துள்ளார். இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

# தமிழ்நாடு சுங்கச்சாவடிகளில் ஏப். 1 முதல் கட்டண உயர்வு!

தமிழ்நாட்டில் உள்ள 68 சுங்கச்சாவடிகளில் வருகின்ற ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படவுள்ளது. சுமார் 3 முதல் 5 சதவிகிதம் வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்படவுள்ளதால், கார்களுக்கான கட்டணம் ரூ. 5 வரையும், கனரக வாகனங்களுக்கான கட்டணம் ரூ. 40 வரையும் உயர வாய்ப்புள்ளது. இதனால், அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

சென்னை - கன்னியாகுமரி, திருச்சி - சேலம் மற்றும் சேலம் - கோயம்புத்தூர் உள்ளிட்ட முக்கியதேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள 60 சுங்கச்சாவடிகள், 60 கி.மீ நீளமுள்ள வண்டலூர் - மிஞ்சூர் வெளிவட்டச் சாலையில் நான்கு, மதுரை வெளிவட்டச் சாலையில் இரண்டு, நாவலூர் உள்ளிட்ட மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 8 சுங்கச்சாவடிகளில் இந்த கட்டண உயர்வு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளது.

# அண்ணாமலையார் கோயிலில் மீண்டும் பிரசாதம்: விறகு அடுப்பை பயன்படுத்தி லட்டு தயாரிப்பு

**திருவண்ணாமலை, மார்ச் 24:**



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்ட இலவச லட்டு பிரசாதம் மீண்டும் வழங்கும் பணி தொடங்கியது.

அண்ணாமலையார் கோயிலுக்கு வணிக காஸ் சிலிண்டர் கிடைக்காததால் பிரசாதம் தயாரிக்க முடியாமல் இலவசமாகப் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த லட்டு பிரசாதம் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று இந்து சமய அறநிலையத் துறையின் உத்தரவின்படி, கோயில் வளாகத்தில் இலவச லட்டு பிரசாதம் தொடர்ந்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டு, விறகு அடுப்பு மூலமாக லட்டு தயாரிக்கும் பணி நடைபெற்று, நேற்று காலை முதல் மீண்டும் பக்தர்களுக்கு இலவச லட்டு பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் பிரசாத விற்பனை நிலையத்தில் புளி சாதம் மற்றும் சர்க்கரை பொங்கல் மட்டுமே பக்தர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

லட்டு, அதிரசம், முறுக்கு, மிளகு வடை ஆகியவை வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் தயாரிக்க முடியாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

# மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் வெண்ணைத்தாழி திருவிழா: பக்தர்கள் வழிபாடு

**திருவாரூர், மார்ச் 24:**



திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் பங்குனி பெருவிழாவின் முக்கிய திருவிழாவான வெண்ணைத்தாழி உற்சவம் விமரிசையாக நடைபெற்றது.

கடந்த மார்ச் 8 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய பங்குனி பெருவிழாவின் ஒவ்வொரு நாள் இரவும், பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா நிகழ்ச்சிகள் நடைபெற்ற நிலையில், நேற்று இரவு கோரதத்தில் சுவாமி வீதி உலா நடைபெற்றது. தொடர்ந்து இன்று காலை 7.30 மணி அளவில் வெள்ளி குடத்தில் வெண்ணெய்திருடும் கண்ணன் அலங்காரத்தில் எழுந்தருளி ராஜகோபால சுவாமி வீதியுலா வந்த போது, பக்தர்கள் சுவாமி மீது வெண்ணை வீசிவழிபட்டனர்.

தொடர்ந்து ராஜகோபால சுவாமி கோயிலின் நான்கு வீதிகளையும் சுற்றி வந்து, பந்தலடி வழியாக வெண்ணைத்தாழி மண்டபத்தை வந்தடைந்தது.

இந்த திருவிழாவில் மன்னார்குடி மட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பக்தர்களும் மன்னார்குடி சுற்றுப்புற கிராம மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுராஜகோபாலசுவாமி மீது வெண்ணை வீசி வழிபட்டனர். இரவு வெட்டும் குதிரை திருவிழா நடைபெறுகிறது. நாளை தேரோட்ட விழா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்குனி உத்திர திருவிழா: சபரிமலை ஐயப்பன் கோயிலில் கொடியேற்றம்!

**சபரிமலை, மார்ச் 24:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் பங்குனி உத்திர திருவிழா மற்றும் ஆராட்டு விழாவை முன்னிட்டு மார் 23 (நேற்று) காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

ஐயப்பன் கோயிலில் மண்டல மகர விளக்கு காலங்களிலும், தமிழ் மாதங்களிலும் கோயில் நடை திறக்கப்படுவது வழக்கம். அப்போது லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

இந்த நிலையில், தற்போது பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு மார்ச் 22 மாலை 5 மணியளவில் தந்திரி மற்றும் மேல்சாந்தி முன்னிலையில் கோயில் நடை திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மார்ச் 23(இன்று) காலை கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 10 நாள்கள் சிறப்புப் பூஜைகள் மற்றும் விழாக்கள் நடைபெறவுள்ளன.

பங்குனி உத்திர திருவிழா சபரிமலையில் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த விழா காலத்தில் தினமும் சிறப்பு பூஜைகள், அபிஷேகம் மற்றும் அலங்காரங்கள் நடைபெறும். மேலும், திருவிழாவின் நிறைவு நாளாக ஏப்ரல் 1 ஆம் தேதி பம்பைக் கரையில் ஐயப்பனுக்கு ஆராட்டு விழா நடைபெற உள்ளது.

பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக முன்பதிவு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தரிசனத்திற்கு ஆன்லைன் முன்பதிவு செய்ய தேவஸ்வம் வாரியம் அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தங்கும் அறைகள், முன்பதிவுக்கு sabarimala.org.in www.onlinetdb.com ஆகிய இணையதளங்களை பயன்படுத்திக்கொள்ளலாம்.

பங்குனி உத்திர திருவிழாவிற்கு அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து வசதிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் கேரள அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

# கண்களுக்கு ஏன் சத்தான உணவு அவசியம்?

வெறும் கேரட் சாப்பிட்டால் மட்டும் கண் பார்வை சரியாகிவிடும் என்று நினைக்காமல், சத்துக்கள் நிறைந்த உணவுகளை சேர்த்துக் கொள்வது அவசியம். அந்த வகையில், கண் பார்வையை மேம்படுத்தும் உணவுகள் என்னென்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்..

முறையான சத்துக்கள் நிறைந்த உணவை உட்கொள்வது என்பது வெறும் உடல் எடையை குறைப்பதற்கோ அல்லது தசை வளர்ச்சிக்கோ மட்டுமல்ல, அது நம் கண்களின் நீண்டகால ஆரோக்கியத்திற்கும் மிக முக்கியமானது. நாம் உண்ணும் உணவில் உள்ள ஆன்டி-ஆக்சிடண்ட்கள் மற்றும் வைட்டமின்கள், வயது முதிர்வால் ஏற்படும் பார்வை குறைபாடு, கண்புரை (CATARACTS), மற்றும் குளுக்கோமா போன்ற தீவிரமான நோய்கள் வராமல் தடுக்க உதவுகின்றன. ஆரோக்கியமான உணவோடு சேர்த்து, போதிய அளவு தண்ணீர் குடிப்பது, நீண்ட நேரம் திரைகளைப் பார்ப்பதை தவிர்ப்பது மற்றும் அவ்வப்போது கண் பரிசோதனை செய்து கொள்வது நம் பார்வையை தெளிவாக வைத்திருக்க உதவும்.

மீன் உணவுகளின் மகத்துவம்

ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் அதிகம் உள்ள மீன் வகைகளான மத்தி, சூரை மற்றும் சால்மன் போன்றவற்றை உணவில் சேர்த்து கொள்வது கண்களுக்கு பெரும் நன்மையை அளிக்கும். இந்த ஆரோக்கியமான கொழுப்புகள் நம்முடைய விழித்திரை (RETINA) வளர்ச்சிக்கும், அதன் செயல்பாட்டிற்கும் அடிப்படைத் தேவையாக இருக்கின்றன. குறிப்பாக, கண்கள் வறண்டு போகும் 'டிரை ஐ' (DRY EYE) பிரச்சினையை தடுப்பதில் மீன் எண்ணெய் முக்கிய பங்கு வகிக்கிறது. பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன்களை விட இயற்கை நீர்நிலைகளில் பிடிபடும் மீன்களை குறைந்த காரத்துடன் சமைத்து சாப்பிடுவது கண்களுக்கு அதிக ஊட்டச்சத்தை கொடுக்கும்.

முட்டையின் ஊட்டச்சத்து பலன்கள்

முட்டை என்பது கண்களுக்கு தேவையான ஒரு முழுமையான ஊட்டச்சத்து களஞ்சியம் என்று சொல்லலாம். முட்டையின் மஞ்சள் கருவில் வைட்டமின் ஏ, லுடீன், ஜியாக்சாந்தின் மற்றும் துத்தநாகம் (ZINC) போன்ற அத்தியாவசிய சத்துக்கள் அதிகளவில் நிறைந்துள்ளன.

இதில் உள்ள வைட்டமின் ஏ நம்முடைய கருவிழியைக் (CORNEA) பாதுகாக்கிறது, மேலும் லுடீன் போன்ற சத்துக்கள் வயது அதிகரிப்பதால் ஏற்படும் பார்வை குறைபாடுகளை தடுத்து நிறுத்துகின்றன. துத்தநாக சத்து நம்முடைய விழித்திரையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, இரவு நேரங்களில் தெளிவாக பார்ப்பதற்கு துணைபுரிகிறது. **(தொடரும்)**

# இனிமே OI தான்... லேப் மூளைகள்தான் உலகத்தை ஆளப்போகுது!


சமீப காலமாக எங்கு திரும்பினாலும் செயற்கை நுண்ணறிவு பற்றிய பேச்சு தான் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஏஐ தொழில்நுட்பம்தான் மனித குலத்தின் உச்சபட்ச கண்டுபிடிப்பு என நாம் நினைத்துக்கொண்டிருக்கும் வேளையில், அறிவியலாளர்கள் இன்னொரு பெரிய குண்டை தூக்கிப் போட்டுள்ளார்கள்.

அதுதான் ஆர்கனாய்டு இன்டெலிஜென்ஸ் (ORGANOID INTELLIGENCE). சுருக்கமாக இதனை OI என்று அழைக்கிறார்கள். இது ஏஐ தொழில்நுட்பத்தையே ஓரம்கட்டிவிடும் அளவுக்கு ஒரு பிரம்மாண்டமான ஒன்றாக அமையப்போகிறது. அப்படி இந்த புதிய OI தொழில்நுட்பத்தில் என்ன ஸ்பெஷல் ஒளிந்திருக்கிறது என்பதை இப்போது பார்க்கலாம்.

OI என்றால் என்ன?

கணினிகளுக்குள் இருக்கும் சிலிக்கான் சிப்களுக்கு பதிலாக, மனித மூளையின் செல்களைப் பயன்படுத்தி ஒரு உயிரியல் கணினியை உருவாக்குவதுதான் இந்த OI தொழில்நுட்பத்தின் அடிப்படை. இதற்காக மனிதனின் ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி, ஆய்வகங்களில் மிகச் சிறிய அளவிலான மூளை ஆர்கனாய்டுகளை (BRAIN ORGANOIDS) உருவாக்குகிறார்கள்.

இந்தச் சிறிய திசுக்கள் உண்மையான மனித மூளையைப் போலவே செயல்படும் திறன் கொண்டவை. இவற்றை நேரடியாக எலக்ட்ரானிக்



மைக்ரோசிப்களுடன் இணைத்து, தகவல்களைச் சேமிக்கவும், பகுப்பாய்வு செய்யவும் பயன்படுத்தும் ஆய்வுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. சுருக்கமாகச் சொல்லப்போனால், இது இயந்திரங்களுக்குக் கொடுக்கப்படும் ஒரு செயற்கையான உயிருள்ள மூளை.

AI-ஐ விட இது எப்படி சிறந்தது?

இன்றைய ஏஐ சிஸ்டம்கள் வேலை செய்ய பல ஆயிரம் கணினிகளும், அவற்றை குளிர்விக்க ஏக்கர் கணக்கில் டேட்டா சென்டர்களும், பல மெகாவாட் மின்சாரமும் தேவைப்படுகிறது. ஆனால், நமது மனித மூளை வெறும் ஒரு சிறிய LED பல்பு எரியும் அளவுக்கு குறைவான ஆற்றலை மட்டுமே எடுத்துக்கொண்டு பல கோடி கணக்கீடுகளைச் செய்யும் ஆற்றல் கொண்டது.


இந்த உயிருள்ள மூளை செல்களை நேரடியாகக் கணினிகளில் பயன்படுத்தும்போது, மின்சார செலவு பல மடங்கு குறைவதோடு மட்டுமல்லாமல், ஏஐ-யை விட பல ஆயிரம் மடங்கு வேகமாகவும் துல்லியமாகவும் செயல்பட முடியும். மனித மூளையின் உள்ளுணர்வு மற்றும் எதையும் சுயமாகக் கற்றுக்கொள்ளும் அபாரமான திறனை இந்த ஆர்கனாய்டுகள் இயந்திரங்களுக்கு மிக எளிதாக வழங்கும். இந்தத் தொழில்நுட்பம் முழுமையாகப் பயன்பாட்டுக்கு வரும்போது, மருத்துவ உலகிலும் விண்வெளி ஆராய்ச்சியிலும் நாம் இதுவரை கற்பனை கூட செய்து பார்க்காத பல பெரிய மாற்றங்கள் நிகழும். அல்சைமர் போன்ற மூளை சம்பந்தப்பட்ட கடுமையான நோய்களுக்கு மிக எளிதாக மருந்து கண்டு பிடித்துவிடலாம்.

இருப்பினும், ஒரு உயிருள்ள மனித மூளை செல்களைக் கணினியில் பயன்படுத்துவது என்பது பல சிக்கல்களைக் கொண்டுள்ளது. மனிதர்களைப் போலவே அந்தச் செயற்கை மூளைக்கும் சொந்தமாக உணர்வுகள் வந்துவிடுமா என்ற ஒரு பெரிய அச்சமும் பல அறிவியலாளர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது.

தொழில்நுட்பம் எந்த அளவுக்கு அசுர வேகத்தில் வளர்கிறது என்பதைப் பார்க்கும்போது ஒருபக்கம் ஆச்சரியமாகவும் மறுபக்கம் சற்று பயமாகவும் இருக்கிறது. பல நூறு ஆண்டுகளாக அறிவியல் திரைப்படங்களில் பார்த்து வியந்த விஷயங்கள் எல்லாம் இப்போது நமது கண் முன்னே நிஜமாக மாறத் தொடங்கியுள்ளன.

செயற்கை நுண்ணறிவு ஒரு இயந்திரத்தனமான மூளை என்றால், இந்த ஆர்கனாய்டு இன்டெலிஜென்ஸ் என்பது கிட்டத்தட்ட ஒரு உயிருள்ள மூளைக்கு சமம். மனித மூளைக்கும் இயந்திரங்களுக்கும் இடையிலான அந்த மெல்லிய கோடு இப்போது மிக வேகமாக அழிந்து வருகிறது. இது எந்த மாதிரியான ஒரு எதிர்காலத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# காசியாத்திரை



உடன்பிறப்புகள் அனைவரும் வாட்ஸ்ஆப் குழுக்களின் மூலமாக ஒரு மாதம் முன்பாகவே காசி செல்வதற்கு, ஆயத்த பணிகளில் ஈடுபட்டுவிட்டனர்.
ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து அம்மாவின் மனது மகிழும்படி செய்தனர். சாஸ்திரிகள், தங்க இடம்,உணவு, ஃபிளைட் டிக்கெட் என்று அவரவர் பங்கிற்கு செய்தனர்.
அவர்களுக்கு வேலையே ஓடவில்லை... காசி செல்லும் நாளை "வழிமேல் விழி" வைத்து காத்திருந்தனர். கணவன் கண்டிப்பாக சொல்லிவிட்டார். காசிக்கு போயே ஆகவேண்டும் என்று..... தன் மனைவிக்காகவே... ஒரு மாதமாகவே பஞ்சகச்சம் கட்ட பயிற்சி பெற்று விட்டார்...
"என்னங்க எத்தனை முறை சொல்றது இன்னும் பஞ்சகச்சம் கட்ட தெரியல"...அவ்வப்போது மனைவி கண் முன் வந்து மிரட்டி விட்டு சென்றாள்....
"ஏய். பசங்களா... வெங்காயம் சாப்பிடாதீங்க... பானி பூரிக்கு "நோ"..தலைக்கு தண்ணீர் ஊற்றிக் கொள்ளணும்... மறந்துடாதீங்க... வேஷ்டி எடுத்து வச்சுக்கோங்க...
அயன் பண்ணியாச்சா?
வெளி சாப்பாடு முடியாது... கைக்கு சப்பாத்தி,புளி சாதம் ரெடி பண்ணனும்..
சாஸ்திரிகள் சில்லறை கேட்பார்கள். 50,100 ரூபாய் நோட்டுகள்.. அம்மாவிற்கு புதிய நோட்டுகள் என்றால் மிகவும் பிடிக்கும்..

கடந்த ஒரு வருடமாகவே கணவருக்கு பொறுப்பு அதிகம் வந்துவிட்டது..
உடுத்திக் கொள்ள புடவை, டவல், ஈரத்துணி போட தனிக்கவர்... மறந்துடாதீங்க... பிஃபோர், ஆஃப்டர் மாத்திரைகள்...
தலைவலிக்கு டார்ட்,பாராசிட்டமால்,மாத்திரைகள் குளிர் அதிகமா இருக்குமாம்.. சளிக்கு கண்டங்கத்தரி லேகியம், அவரவர்கள் பாடி வாஷ், பேஸ்ட் பிரஷ் எல்லாம் மறக்காம எடுத்து வச்சுக்கோங்க...

அம்மா, அப்பா மூன்று தலைமுறை பெயர்கள், கோத்திரம் இவற்றையெல்லாம் கணவர் இப்பொழுது நினைவில் வைத்துக் கொண்டு விட்டார்.
கடைசியாக காசி போகும் நாளும் வந்தது. அவரவர்கள் பேக்குகள் தயாராகின....
அம்மாவின் பேக்கை அப்பா தான் எப்போதும் எடுத்துக் கொள்வார்... இந்த முறையும் அம்மாவின் பேக்கை சேர்த்து அப்பாதான் தூக்கி கொண்டார். அம்மாவின் பேக்கில் அனைத்தையும் மறக்காமல் எடுத்து வைத்து விட்டாரா என்பதை "போட்டோவில்" இருந்து அம்மா கண்காணித்துக் கொண்டே இருந்தாள்....
ஆமாம்..திடும் என்று "ஹார்ட் அட்டாக்கில்"கடந்த வருடம் இறந்துவிட்டாள்..அம்மாவின் கடைசி ஆசையை தீர்க்க... "வருஷத் திவசத்தையாவது" காசியில் நிகழ்த்த வேண்டும் என்று குழந்தைகளும் கணவரும் முடிவுசெய்துவிட்டனர். ஆழ்ந்த துக்கத்தில், அம்மாவின் நினைவுகளுடன்...
யாரும் பேசாமல்... அம்மாவின் நினைவுகளை... அசைப் போட்டுக்கொண்டு விமானத்தில் பறந்து கொண்டு இருந்தனர் காசி யாத்திரையாக..



-ம. முத்துலெட்சுமி
ஒசூர்.

# அன்னையடி நீ எனக்கு !



பூஜா அந்த இளங்காலைப்பொழுதில் கண் விழித்ததும் தன் அம்மா சொல்லிக்கொடுத்த " கராக்ரே வஸதே லஷ்மி ! கரமத்யே ஸரஸ்வதி ! கரமூலேது கோவிந்தன் ! ப்ரபாதே கரதர்ஸனம் ! " என்ற ஸ்லோகத்தை கண்மூடி சொல்லி, இரு கரங்களையும் தேய்த்துவிட்டு,கண்ணைத் திறந்து இருகரங்களையும் கண்கொண்டு தரிசித்து, படுக்கையிலிருந்து அந்த நாளை இனிமையாகத் தொடங்க புறப்பட்டாள்.
கணவனைப் பிரிந்து தனிமனுஷியாய், தன் இனிய மகன் மற்றும் மகளுக்கு உறுதுணையாய், அரும் தாயாய் வாழப்பழகி வரும் பூஜா, இயல்பிலேயே நல்ல மனப்பக்குவம் கொண்டு தாய் தந்தையரின் அரவணைப்பில், தாய் தந்தையாருக்கு ஒரே செல்லமகளாக வளர்க்கப்பட்டவள்.

போட்டி, பொறாமையின்றி, தாய் தந்தையின் ஒருமித்த அன்பு, கண்டிப்பு கலந்த பாசத்தையும் ஏகபோகமாக அனுபவித்து நேர்த்தியாக பள்ளி,கல்லூரிப் படிப்புகளை திறம்பட படித்து தேர்ச்சிபெற்று பிறந்த வீட்டில் ராணிபோல வாழ்க்கை வாழ்ந்து வந்திருந்தாள் பூஜா. இருந்தும் அவள் அப்பா, காலத்தை வீணடிக்காமல் மேற்கொண்டு, உனக்கு எந்த துறையில் ஆர்வமோ, அதில் ஏதாவது படித்துக்கொண்டே, வேலைக்குச்செல்ல ஆர்வமிருந்தால், அதையும் முயற்சிக்க அறிவுறுத்தினார்.
கல்லூரியில் வணிகவியல் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின் பூஜா, வேலைக்குச்செல்ல உத்தேசித்து, மாலையில் கணிணியில் ப்ரோக்ராமிங் கோர்ஸ் சேரலாம் என்று முடிவு செய்து, வேலைக்கு அப்ளை செய்யத்துவங்கி, கணிணி வகுப்பிலும் சேர்ந்தாள்.

நல்ல ஒரு ஏற்றுமதி வணிகம் செய்யும் கம்பெனியில், சென்னையில், அக்கவுண்டன்டாக தேர்வு செய்யப்பட்டு நல்ல சம்பளத்தில் பொறுப்பேற்று வேலைக்குச்சென்றுகொண்டே கணிணிப் பயிற்சியிலும் தேர்வு பெற்று சிறப்பாக தன் வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டிருந்தாள் பூஜா. அவள் தாய், தந்தையருக்கு , ஒரே மகளான பூஜாவிற்கு, உரிய காலத்தில் நல்ல பையனாகப்பார்த்து திருமணம் செய்துவைக்க, பூஜாவின் சம்மதத்தோடு, முடிவு செய்தனர் பூஜாவின் பெற்றோர்.

கல்யாண ப்ரோக்கர் மூலமாக கிடைத்த ஜாதகங்களில், மிகவும் பொறுத்தமானதாக அமைந்த பிரவீண் என்ற பையனின் ஜாதகத்தைப்பார்த்து தேர்வு செய்து, பையனைப்பற்றி தெரிந்த இடங்களில் விசாரித்து நல்ல பையன், சென்னையில், தேசிய வங்கியில் பொறுப்பான வேலையில் இருக்கிறான், தாய்-தந்தையிடம் பாசமாக இருப்பான், வீட்டுக்கு ஒரே பையன் என்று எல்லா விவரங்களையும் அறிந்து கொண்டு, மேற்கொண்டு பிரவீண் பெற்றோரிடம் முறையாக பேச்சு வார்த்தை நடத்திமுடித்து தன் பெண் பூஜாவை - பிரவீணுக்கு மணமுடிக்க பூஜாவின் பெற்றவரும், பிரவீணின் பெற்றோரும் தீர்மானித்து நிச்சயம் செய்துகொண்டனர்.
இரு மாதத்தில், ஒரு சுபயோக சுபதினத்தில், சென்னையில் ஒரு பெரிய திருமண மண்டபத்தில், முறைப்படி பூஜா-பிரவீண் திருமணம் இனிதே நடந்தேறியது.

பூஜா- பிரவீண் வாழ்க்கை இனிமையாகத்தொடங்கியது. பிரவீணின் பெற்றோரும் பூஜாவை அவர்களுக்கு மகளில்லாத குறையில், மகளுக்கு இணையாக பூஜாவை அன்பொழுக நடத்தினார்கள். பூஜா மனம் நெகிழ்ந்து அம்மா வீட்டில் இருந்தது போலே மாமியாரின் வீட்டிலும், பிரவீணின் அன்பும் அளப்பரிய கிடைக்க, பூஜா வாழ்க்கை இனிமையாக போய்கொண்டிருந்தது. கல்யாண முடிந்த அடுத்த வருடமே இல்லறத்தின் நல்லறப்பேறாக பூஜா-பிரவீணுக்கு ஆண்குழந்தை பிறந்து " அருண்" என்று மகனுக்கு பெயர் வைத்து சீராட்டி பாராட்டி வளர்த்தார்கள் பிரவீண்-வீணா தம்பதியர். பாட்டி-தாத்தா, மற்றும் அம்மா-அப்பா அரவணைப்பில் குதூகலமாக வளர்ந்து வந்தான் அருண்.

அருணுக்கு 3 வயது நடந்துகொண்டிருந்தபோது பிரவீண்-வீணா தம்பதியருக்கு அடுத்த வரமாக பிறந்தாள் அனன்யா ! அழகான முகத்தில் திராட்சையை போன்ற குண்டு விழிகளுடன் பூப்பந்து போல் கன்னத்தில் குழி விழ அழகு தேவதையாக பார்ப்பவர் மனத்தை கொள்ளை கொள்ளும் அழகுடன், அன்பு, பண்பு பாசமிக்க பெண்குழந்தையாக வளர்ந்து பள்ளி செல்ல ஆரம்பித்துவிட்டாள் அனன்யா குட்டி. அருணும், அனன்யாவும், அம்மா-அப்பாவிடம் பாசமழை பொழிந்து பாட்டி-தாத்தாவிடமும் கொள்ளை பிரியத்துடன்வளர்ந்து வந்தார்கள்.

இனிமையான வாழ்க்கை ஓட்டத்தில், விதி வீணா வாழ்க்கையில் விளையாட ஆரம்பித்தது! அன்று குழந்தைகளுக்கான எல்லாவற்றையும் தயார் செய்து அவர்களை பள்ளிக்கு வேனில் ஏற்றி அனுப்பிவிட்டு,மாமியார்-மாமனாருக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்துவைத்துவிட்டு, பிரவீண் அலுவலக வேலையாக பாம்பே செல்வதற்கு கிளம்பியதை வழி அனுப்பிவிட்டு, வீணா தன் காலை உணவைமுடித்துக்கொண்டு, லன்ச் பேக்குடன் ஆட்டோ பிடித்து அவள் அலுவலகம் சென்றடைந்தாள்.

மதியம் ஒருமணி யளவில் வீணா கைப்பேசி அழைப்பில் ஒரு பெண் குரல் பதட்டமாக "பிரவீண் மனைவியா நீங்க ? உங்க கணவர் பிரவீண் சென்ற விமானம் பழுதாகி தரையிறங்கமுடியாமல் தத்தளிக்கும் நேரத்தில் ஒரு மேசிவ் அட்டாக் வந்து உங்கள் கணவர் உயிர் பிரிந்துவிட்டது. உடனடியாக நீங்க கிண்டி அரசினர் மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் வந்து பார்மாலிட்டிஸ் முடித்து, உங்க கணவர் உடலைப் பெற்றுக்கொண்டு செல்லலாம்" என்று கூறியது கேட்டதும் பதறி மயக்கமாய் விழுந்துவிட்டாள். வீணா போனில் பதட்டமாய் பேசிக்கொண்டிருக்கும்போதே அவள் கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் வருவதைப்பார்த்த தோழி கல்பனா, மயக்கமுற்ற வீணாவை ஓடிவந்து தூக்கி எழுப்பி சிறிது சிறிதாக விவரம் அறிந்து, "கிளம்பு, நானும், ரமாவும், ரமேஷும் உன் கூட வருகிறோம், வா" என்று கிளம்பி ஹாஸ்பிடல் வந்து மேற்கொண்டு எல்லா பார்மாலிட்டிஸையும் முடித்து, பிரவீண் உடலைப் பெற்றுக்கொண்டு, வீடு வந்து சேர்ந்தார்கள்.
பிரவீணின் இறுதிப்பயணத்தை உரிய முறையில் நடத்தி முடித்து குழந்தைகளை நன்கு வளர்க்கவேண்டும் என்று மனத்தை திடப்படுத்திக்கொண்டு,வாழ்க்கையை திரும்ப தனிமனுஷியாய் தொடர, வீணா வேலைக்குச்செல்ல ஆரம்பித்து 2 மாத இடைவெளியில், புத்ர சோகத்தில் தத்தளித்து வந்த மாமியார் திடீரென்று ஏற்பட்ட நெஞ்சு வலியால் இயற்கை எய்தினார். மாமியார் இறந்த துக்கத்தில், மாமனாரும், ஒரு மாத இடைவெளியில் தூக்கத்திலேயே உயிரிழந்தார். வீடே வெறிச்சோடி, தனித்து விடப்பட்ட வீணாவுக்கு ஆறுதலாக வீணாவின் தாய்-தந்தையர் அவளுடன் சேர்ந்து பள்ளி செல்லும் பேரன் அருண் மற்றும் பேத்தி அனன்யாவிற்கு துணையாக வந்து சேர்ந்து வாழத் தொடங்கினார்கள்.

ஆயிற்று காலச்சக்கரம் சுழன்று வருடங்கள் பல ஓடி தனி மனுஷியாக மனோதைர்யத்தை வளர்த்துக்கொண்டு உழைப்பில் முழு கவனத்தையும் செலுத்தி வீணா அவள் வேலை பார்க்கும் அலுவலகத்திலேயே Vice President ஆக Promotion பெற்று இப்போது மகன் அருண் Medicine படித்து முடித்து டாக்டராகி Specialization மேல்படிப்பிற்காக London சென்று படித்து முடித்து Heart Surgeon ஆக Kauvery Hospital இல் பணியாற்றுகிறான். மகள் அனன்யா படித்து முடித்து வக்கீலாக High Court இல் Practise செய்து வருகிறாள்.

வீணா 25 வருடங்களுக்கு முன் கணவன் பிரவீண் இறந்த உடனேயே தானும் உயிர் வாழப் பிடிக்காமல் உள்ளம் துவண்டு இறந்துவிடலாம் என்று ஒரு நாள் முடிவெடுத்து தூக்கமாத்திரைகளை போட்டுக்கொண்டு தன்னை மாய்த்துக்கொள்ளலாம் என்று முயற்சித்து மாத்திரைகளை வாயில் போடும் தருணம், மகள் அனன்யா ஓடிவந்து அம்மா, அம்மா , டி.வி.ல காட்டற மாதிரி நீயும் எங்களை தனியாக விட்டு விட்டு இறக்க முயற்சி செய்றியா அம்மா ? என்று கதறி அழுதுகொண்டே - வேண்டாம்மா... "நீ எங்களுக்கு வேணும்மா" என்று அம்மாவை கட்டிக்கொண்டு அழுத நொடியில், மகனும் சேர்ந்து அம்மா, அம்மா என்று சேர்ந்து அழத்தொடங்க, வீணா சுதாரித்து தன்னையே நொந்துகொண்டு, "சீ எவ்வளவு சுயநலமாக நான் பெற்ற குழந்தைகளைக்கூட மனதில் நினைக்காமல், சாகத்துணிந்தேன் ? " பிரவீண் இறந்தது ஒரு விபத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியால். ஆனால், பிரவீண் இப்போது உயிருடன் இல்லாத நேரத்தில், அம்மாவாகவும்-அப்பாவாகவும், நான் பெற்ற குழந்தைகளுக்கு கடமையாற்ற வேண்டிய பொறுப்பு கூட இல்லாமல் என்னை மாய்த்துக்கொள்ள நினைத்தேனே என்று வருந்தி - தான் பெற்ற மகளே தனக்கு அன்னை போல் தக்க சமயத்தில் அறிவுறுத்தாதிருந்தால் என்ன நடந்திருக்கும் ? என்று இப்போது யோசிக்கையில, அன்றைய தன் முட்டாள்தனத்தை எண்ணி வருந்தி, "அன்னையடி நீ எனக்கு" என்று தன் வக்கீல் மகளை வாரி அணைத்துக்கொண்டாள் வீணா.
மகன் அருணும் "அம்மா நீ ஒரு சிங்கிள் பேரண்ட்டாக இருந்து ஒரு Heart Specialist ஆக என்னையும், ஒரு வக்கீலாக அனன்யாவையும் வளர்த்த பெருமைமிகு அம்மாம்மா நீ" என்று ஆதுரமாகப்பேசி அம்மாவைக் கட்டி அணைத்துக்கொண்டான் அருண் !



கதாசிரியர்-உமா வெங்கடேசன்

# அகத்தியனின் பயணம் 15



- கயப்பாக்கம் இரா.இரமேஷ்

## முடிவில்ல இடையூருகள்.

"சரி அகத்தியன். நீங்கப் போயிட்டு வேலையைப் பாருங்க. அது என்னன்னு பார்த்துட்டு, மீண்டும் உங்களைக் கூப்பிடுறேன். நீங்க முடியுமா முடியாதாங்கிறது சொல்லுங்க" என்று முடித்தார்.

அகத்தியன் எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். வெளிய வந்த அகத்தியனை உதவியாளர் உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வையில் ஆயிரம் கேள்விகளுக்கு அகத்தியன் பதில் சொல்ல வேண்டிய சூழல் உருவாகப்போகிறது என்று உதவியாளர் புரிந்து வைத்திருந்தார்.

நேற்று மையம் கொண்டிருந்த புயலின் வேகம் இன்று அதிகரித்து இருப்பது போலவே அகத்தியன் உணர்ந்தான். நேற்றைய சூழல், சிக்கல் தீர்க்கப்படாமலேயே தொடர்ந்து கொண்டிருக்கும்போது, புதியதாக ஒரு புதிர் நிர்வாக இயக்குனர் மூலமாக வந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டவன், ஒன்றும் புரியாமல் நடைபினமாய் நடந்தான்.

அதே சிந்தனையில் அவனுடைய பகுதிக்குச் சென்று மௌனமாக உட்கார்ந்திருந்தபோது, அனைவருடைய பார்வையும் அவனைக் நோக்கி இருந்தது.

என்ன நடந்தது என்று எழிலழகியால் தீர்மானிக்க முடியவில்லை. உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஆனால் நாம் சொன்னச் சொல்தான் அவரைக் காயப்படுத்தி இருக்குமோ என்று நினைத்துக்கொண்டாள்


அதே நோக்கத்தோடு சிந்தித்தவள், இசையழகி அவசரப்பட்டுச் சொல்லியிருக்கக் கூடாது, இன்னும் கொஞ்ச நாள் நாம அமைதியா இருந்துட்டு, நாமளே நேரடியாகச் சொல்லியிருந்தா நல்லாயிருந்திருக்கும் என்று யோசித்தாள்.

"என்ன சொல்லப் போறாங்களோ, என்மேல் அதிக நம்பிக்கை வச்சிருக்காங்க. ஒருவேளை நேத்து தேநீர் கடையிலே இவங்க ரெண்டு பேரையும் சந்தித்தது மேடத்துக்கு தெரிந்திருக்குமோ ? அதனால்தான் நம்மள கூப்பிட்டுக் கண்டிக்கப் போறாங்களோ, இது வேலை செய்யற இடம். இது மாதிரியான சந்திப்புகள் எல்லாம் தவறுன்னு சொல்லப் போறாங்களோ" என்று யோசித்துக்கொண்டிருந்தான் அகத்தியன்.

அன்று மாலைவரை மேடத்திடமிருந்து அழைப்பு வரவில்லை. எழிலழகியும் இசையழகியும், அகத்தியனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லாததால் சலிப்புற்றவர்களாக முக இருக்கத்தோடு அமைதியாக வெளியே சென்றார்கள்.

வானம் மேகமூட்டத்தோட காணப்பட்டது. கருமேகங்கள் வானத்தில் ஒன்று திரண்டிருந்தன. காற்றின் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. அனைவரும் அறையை நோக்கி மழை வருவதற்குள் சென்று விடவேண்டும் என்ற எண்ணத்தில் விரைந்து நடந்தார்கள்.

எதைப் பற்றியும் கவலைப்படாமல், இங்கு நடக்கின்ற



சூழ்நிலை எப்படி கையாளுவது என்ற சிந்தனையோடு அகத்தியன் நடந்தான். தூறல்கள் அவன்மீது விழத்தொடங்கியன. அந்தத் தூறல்கள் அவனுடைய சிந்தையில் பட்டது. ஆனால், அவனது சிந்தையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அவனுடைய உடல் சிலிர்க்கவில்லை. ஏற்கனவே அவனுடைய உடல் இங்குள்ள மனிதர்கள் அமைதியாக மூட்டுகின்ற தீ மூலமாக எரிந்து கொண்டிருப்பதை, இந்த தூறலுக்கு உடலின் வெப்பத்தை தணிக்கக் கூடிய ஆற்றல் இல்லை என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

நடந்து வந்து அறையினுள் நுழைந்தான். மேலாடையை கழட்டி, கை கால்கள் முகத்தைக் கழுவிக்கொண்டு, கட்டிலில் உட்கார்ந்தான். ஜன்னல் ஓரத்திலிருந்து புகுந்த மழையின் ஈரக்காற்று அவன் முகத்தில் பட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அப்படியே மல்லாக்காகச் சாய்ந்தான். கண்மூடி நன்றாகத் தூங்கினான். இரவு உணவை மறந்தான்.

தூக்கம் அவனை மெல்ல அவனுடைய சொந்த கிராமத்திற்கும், அமுதருவியோடு பழகிய பழைய நினைவுகளுக்கும், இயற்கை காட்சியின் ஒப்பற்ற அழகியலுக்கும் அழைத்துச் சென்றது. அமுதருவி வரப்பில் நடந்து வருவதையும், அவள் மாமா என்று அழைத்ததையும், முதல் முதலில் அவள் முகம் பார்த்து காதலைச் சொன்னதையும், அவளின் முகமுழுவதும் படர்ந்த வெட்கத்தைப் பார்த்து மகிழ்ச்சியில் திளைத்ததை கனவாக, அவன் கண்முன்னே காட்சியாக ஓடிக்கொண்டேயிருந்தது.

நேற்று பேசுவதாக மேடம் அவருடைய ரூமுக்கு அழைத்துப் பேசாமல் விட்டதை, இன்று நிச்சயமாகச் சொல்வார் என்று எதிர்பார்த்து இருந்தான் அகத்தியன். ஆனால் கடைசிவரையில் மேடத்திடமிருந்து அழைப்பு வரவே இல்லை. அது என்னவாக இருக்கும், எதற்காக நம்மை அழைத்தார்கள், என்ன சொல்லப் போகிறார்கள். அப்படி அவர் என்மீது நம்பிக்கை வைத்துச் சொல்லவேண்டிய அவசியம் என்ன, என்றெல்லாம் அவன் யோசித்தான்.

ஒருவித இறுக்கம் வேலை செய்கின்ற இடத்தில் பரவியது. அமைதி நிலவியது. முன்பிருந்த கலகலப்பும், சிரிப்பொலியும் காணாமல் போனது. அருகில் சென்று ஆலோசனை வழங்கிய நடைமுறையை மெல்ல கட்டுப்படுத்திக் கொண்டான். வேலை செய்கிறார்களா என்பதை பார்ப்பதற்காக மட்டுமே, யாரிடத்திலும் பேசாமல் நடந்துபோவதும் வருவதுமான செயல்மட்டுமே பின்பற்றினான்.

உணவு நேரத்திலும், மாலை நேரத்திலும் எந்தவித சொற்களையும் தேவை இல்லாமல் பேசுவதைத் தவிர்த்தான். கட்டுப்பாடோடு வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு அவனுக்குள் இருந்தது. அதையும் மீறி எழிலழகியும் இசையழகியும் ஏற்படுத்திய அந்தத் தாக்கம் அவன் நெஞ்சுக்குள் ஒரு மிகப்பெரிய போராட்டத்தை உருவாக்கியது. அதனோடு சேர்த்து மேடம் தன் மீது நம்பிக்கை வைத்து, ஏதோ சொல்ல வந்ததும், இன்னும் சொல்லாமல் அப்படியே நிறுத்தி வைத்திருப்பதும் இன்னொரு போராட்டத்தோடு இந்தப் போராட்டமும் சேர்ந்து ஒரு நிம்மதியற்ற நிலையை உருவாக்கியதை நினைத்து அகத்தியன் யாரிடமும் பேசாமல் மௌனமாகிப் போனான்.

(தொடரும்)

# திருக்கடையூர் மயானம்: எமதர்மன் உயிர் பெற்ற திருமெய்ஞானம்!

திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலுக்குச் செல்பவர்கள் பலரும் அறியாத, ஆனால் மிக முக்கியமான ஒரு தலம் 'திருக்கடையூர் மயானம்'. மார்க்கண்டேயன் கதையின் நிறைவுப் பகுதி இங்கேதான் நிகழ்ந்தது...

பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனை உதைத்துச் சங்காரம் செய்த ஈசன், உலக நியதிப்படி மீண்டும் எமதர்மனுக்கு உயிர் கொடுத்த புனிதமான இடம் இதுவே. அநீதி அழிந்து, நீதி தழைத்த தலம்!

'மயானம்' என்றால் பொதுவான சுடுகாடு அல்ல. மெய்ஞானம் என்பதே மயானமாக மருவியிருக்கிறது

நம்முள் இருக்கும் ஆணவம் அழிந்து, 'மெய்ஞானம்' (உண்மையான அறிவு) பிறக்கும் இடம் என்பதால் இது 'திருமெய்ஞானம்' என்று அழைக்கப்படுகிறது.

சித்தர்கள் மற்றும் ஞானிகள் ரகசியமாகத் தவம் செய்யும் அதிர்வுகள் நிறைந்த தலம்.

பெரிய கோவிலின் பரபரப்பு



எதுவுமின்றி, பழமையான வன்னி மரம், அரச மரம் மற்றும் பிரம்மாண்டமான திருக்குளம் சூழ்ந்த ஒரு தியான பூமி.

இங்கு அமர்ந்து ஒரு நிமிடம் தியானம் செய்தாலே மன அழுத்தம் நீங்கிப் பேரமைதி கிட்டும்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட 'தேவாரப் பாடல் பெற்ற தலம்' இது.

சுமார் 1300 ஆண்டுகாலப் பழமை வாய்ந்த வரலாற்றுச் சின்னம்!

"ஆணவம் அழியும் இடத்தில் தான் மெய்ஞானம் பிறக்கும் - அந்த ஞானம் தரும் தலம் திருக்கடையூர் மயானம்!"



தினம் ஒரு தலைவர்கள்

# சந்திரசேகர ஆசாத் வரலாறு

சந்திரசேகர ஆசாத் 23 சூலை 1906 27 பெப்ரவரி 1931) என அழைக்கப்படும் சந்திரசேகர சீதாராம் திவாரி இந்திய விடுதலை போராட்ட வீரர்களில் ஒருவர். இந்துசுத்தான் குடியரசு அமைப்பு மீளுருவாக்கம், ககோரி ரயில் கொள்ளை, பகத் சிங் போன்றவர்களை வழிநடத்துதல், இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு உருவாக்கம், பிரித்தானிய அதிகாரி சான்டர்சு கொலை போன்றவற்றைச் செய்தவர்.

## வாழ்க்கை வரலாறு

சிறுவயது

ஆசாத் 23 சூலை 1906ல் பண்டிட் சீதாராம் திவாரி மற்றும் ஜக்ரானி தேவி என்ற தம்பதியருக்கு உத்தரப் பிரதேசம் மாநிலத்திலுள்ள பதர்க்கா என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை அலிஜார்பூரில் பணியாற்றிய போது இவர் தன் இளமைப்பருவத்தை மத்திய பிரதேச சபூவா மாவட்டத்தில் கழித்தார். அப்போது அவர் அம்மாவட்ட பில் பழங்குடிகளிடம் முறையாக வில்வித்தை கற்றார். அது அவருக்கு போராட்டக் காலத்தில் உதவியது.

இவரது தாயான தேவி இவரை காசியிலுள்ள வித்யா பீடத்தில் சமசுகிருதம் கற்க அனுப்புமாறு அவருடைய தந்தையிடம் கூறி ஏற்கச் செயதார். இவரது 15ஆவது வயதில் இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்ததற்காகக் கைது செய்யப்பட்டு குற்றவியல் நடுவரிடம் கொண்டு செல்லப்பட்டார். நடுவர் அவரிடம் அவரது பெயர், தந்தைப்பெயர் மற்றும் அவரது முகவரியை அடுத்தடுத்து கேட்க அதற்கு அவர் முறையே விடுதலை (இந்தி - ஆசாத்), சுதந்திரம் மற்றும் சிறை என்று பதிலளித்தார். உடனே நடுவர் அவருக்கு மிகுந்த தண்டனையுடன் கூடிய சிறை செல்லுமாறு உத்தரவிடவே நான் அப்படிக்கூறினால் தான் நீங்கள் என்னைச் சிறைக்கு அனுப்புவீர்கள் என்றுதான் கூறினேன் என்று கூற அந்நடுவரகத்தில் உள்ளவர்கள் அனைவரும் சிரித்து விட்டனர். அதற்கு நடுவர் மிகவும் கோபமடைந்து அவருக்கு 15 பிரம்படி கொடுக்கக் கட்டளையிட ஒவ்வொரு அடிக்கும் அவர் பாரத் மாதா கி ஜெ எனக்கூறினார். அதுவரை சந்திரசேகர சீதாராம் திவாரி என்ற பெயருடன் அறியப்பட்டவர் அதற்குப் பிறகு சந்திரசேகர ஆசாத் என்று அழைக்கப்பட்டார்.

## இளமைப்பருவம்

காந்தி, 1922ல் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்ட பின்னரும் ஆசாத் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். முழுச் சுதந்திரத்தை எந்த வழியினும் அடைய வேண்டும் என்பதற்காக தன்னைத்தானே அர்பணித்துக் கொண்டார். இவரது இளம்வயதில் இவரை பிரன்வேசு சாட்டர்ச்சி என்பவர் இந்துசுத்தான் குடியரசு அமைப்பை ஆரம்பித்த ராம் பிரசாத் பிசுமில் என்றவரிடம் அறிமுகப்படுத்தினார். விளக்குத்தீயில் தன் கையை எரித்துத் தனது தேசபக்தியை வெளிப்படுத்திய பின் பிசுமில் அவரைத் தன் அமைப்பில் சேர்த்துக் கொண்டார். சாதி, மத பணப் பேதமில்லாத அனைவருக்கும் சுதந்திரம் என்ற இந்துசுத்தான் குடியரசு



அமைப்பின் கொள்கை ஆசாத்தை மிகவும் ஈர்த்தது. அதன்பின் அந்த அமைப்பை வளர்ப்பதற்காக பிரித்தானிய அரசாங்க பொருட்களை அவர் கூட்டாளிகளுடம் சேர்ந்து பிசுமிலின் சொந்த ஊரான சாசகான்பூர் வட்டாரத்திலேயேக் கொள்ளை அடிக்க ஆரம்பித்தார். அதில் 1925ல் நடந்த ககோரி ரயில் கொள்ளையும் ஒன்று. மேலும் சோசியலிச வழியிலேயே நாளைய இந்தியாவும் இந்திய சுதந்திரமும் இருக்க வேண்டுமென எண்ணினார்.

## ஜான்சி

ஆசாத் ஜான்சியையே தன் அமைப்பின் தலைமைச் செயலகமாக சிறிது காலம் வைத்திருந்தார். ஜான்சியை அடுத்து 15 கிலோமீட்டர் தூரமுள்ள ஆர்ச்சா காடுகளையே தன் அமைப்பின் சண்டைப் பயிற்சிக் கூடமாகப் பயன்படுத்தினார். மேலும் அவரே தன் அமைப்பினருக்குப் போர்பயிற்சிகளைக் கற்றும் கொடுத்தார். ஆர்ச்சா காடுகளுக்குப் பக்கம் சதார் ஆற்றங்கரையிலுள்ள அனுமன் கோயிலில் கூடாரம் அமைத்து அதையே வசிப்பிடமாகப் பயன்படுத்தினார். அப்போது தர்மபுரம் கிராமத்தின் குழந்தைகளுக்குப் போர்ப்பயிற்சி அளிப்பதன் மூலம் அம்மக்களின் நன்மதிப்பை பெற்றார். அக்கிராமத்தின் பெயரான தர்மபுரம் பின் மத்திய பிரதேச அரசாங்கத்தால் ஆசாத்புரம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அவர் ஜான்சியில் வசித்தபோது சதார் சந்தையிலுள்ள பண்டல்கண்ட் மோட்டார் கேரேஜில் வாகனம் ஓட்டும் பயிற்சி பெற்றார். சதாசிவ மல்கபுர்கார், விசுவநாத வைசம்பாயன், பகவன் தாசு மகவுர், ஜான்சி பண்டிட் ரகுநாத் விநாயக் துளேகர், பண்டிட் சீதாராம் பாசுகர் பகவத் போன்றோர் இவரின் அமைப்பில் இணைந்தனர். மேலும் நய் பசுத்தியிலுள்ள ருத்ர நாராயண சிங் மற்றும் நாக்ராவிலுள்ள சீதாராம் பாசுகர் பகவத் வீடுகளிலும் சிறிது காலம் தங்கியிருந்தார்.

பகத்சிங்கும் ஆசாத்தும் இந்துசுத்தான் குடியரசு அமைப்பு 1924ல் ராம் பிரசாத் பிசுமில், யோகேசு சந்தர் சேட்டர்ஜி, சசிந்திரநாத் சன்யால், சசிந்திரநாத் பக்ச்சி போன்றவர்களால் ஒத்துழையாமை இயக்கத்தை அடுத்த 2 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. 1925ல் இவ்வமைப்பால் நடத்தப்பட்ட ககோரி ரயில் கொள்ளையை அடுத்து பிரித்தானிய அரசாங்கம் புரட்சியாளர்களை அழிக்கத் தீவிரப்படுத்தப்பட்டது. பிரசாத், அசஃபகுலா கான், தகூர் ரோசன் சிங், ராசேந்திர நாத் லகரி போன்றவர்கள் இக்கொள்ளையில் சம்பந்தப்பட்டதால் அவர்கள் கொல்லப்பட்டனர். ஆசாத், சக்ரவர்த்தி, மற்றும் முராரி சர்மா போன்றவர்கள் பிடிக்கப்பட்டனர். ஆசாத் மீண்டும் இந்துசுத்தான் குடியரசு அமைப்பை மீளுருவாக்கினார். மேலும் ஆசாத்திற்கு பகத் சிங், சுக்தேவ், ராஜ்குரு போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த பகவதி சரன் அரோரா என்றவருடன் பழக்கம் இருந்தது. அவர்கள் அனைவரும் இணைந்து இந்துசுத்தான் குடியரசு அமைப்பை இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு என்ற பெயருடன் மறு உருவாக்கம் செய்தனர். அதன்படி சோசியலிச முறையில் இந்தியா விடுதலை அடைவதை அவர்கள் கொள்கையாகக் கொண்டனர்.

## மறைவு

பெப்ரவரி 27, 1931 அன்று அலகாபாத் அல்ஃப்ரட் பூங்காவில் தன் இயக்கத்தவரான சுக்தேவுடன் பேசிக்கொண்டிருந்த போது பிரித்தானிய காவல்துறையினர் சுற்றி வளைத்தனர். சுக்தேவைத் தப்பிக்க விட்டுவிட்டு நீண்ட நேரம் காவல்துறையினரிடம் போராடினார். காலில் குண்டடிபட்டதால் ஆசாத்தால் அங்கிருந்து தப்பிக்க இயலாமல் போனது. தன் துப்பாக்கியில் ஒரு தோட்டா மட்டும் மட்டுமிருக்க காவல்துறையினரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டார். ஆனால் பிரித்தானிய காவல்துறையினர் அவரை என்கவுண்டரில் சுட்டுக் கொன்றதாகவே கூறினர். அவர் பயன்படுத்திய துப்பாக்கி அலகாபாத் அருங்காட்சியகத்திலும் அதன் ஆவணங்கள் லக்னோ சி.ஐ.டி. தலைமையகத்திலும் உள்ளது.

## பிரபலம்

ஆசாத் கொல்லப்பட்ட இடமான அல்ஃப்ரெட் பூங்கா அதன் பிறகு சந்திரசேகர ஆசாத் பூங்கா என்றே அழைக்கப்பட்டது. மேலும் அவரது பெயரில் பள்ளிகள், கல்லூரிகள், வீதிகள் மற்றும் பொதுக்கழகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

# 25 நாட்களை கடந்து வசூலில் அள்ளி கொடுத்த தாய் கிழவி



பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான நிலையில், தாய் கிழவி படத்திற்கு ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. வசூல் ரீதியிலும் இந்தப் படம் வெற்றி பெற்றுள்ளது. தாய் கிழவி படத்தை பார்த்துவிட்டு ரசிகர்கள், பிரபலங்கள் பாராட்டு தெரிவித்தனர். இந்தப் படம் வெளியான சில நாட்களில் ரூ. 50 கோடிக்கும் அதிக வசூல் செய்தது.

இந்த நிலையில், தாய் கிழவி திரைப்படம் வெளியான 25 நாட்களில் ரூ. 75 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளது. இதனை படக்குழு சிறப்பு போஸ்டர் வெளியிட்டு தெரிவித்துள்ளது. வசூலுடன் சேர்த்து இந்தப் படம் திரையரங்குகளில் 25 நாட்களை நிறைவு செய்துள்ளதையும் படக்குழு போஸ்டரில் குறிப்பிட்டுள்ளது.



நடிகை தமன்னாவுக்கு இந்தியா முழுவதும் ஒரு பெரிய ரசிகர் கூட்டம் இருக்கிறது. அவர் கவர்ச்சியாக ஒரு பாடலுக்கு நடனம் ஆடினாலே அது மிகப்பெரிய அளவில் வைரல் ஆகி விடுகிறது. மேலும் அவர் விருது விழா, பட நிகழ்ச்சிகள் என வெளியில் வந்தால் அணிந்து வரும் கவர்ச்சி உடையும் ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கிறது. தற்போது அவர் பட விழாவுக்கு சேலையில் தாராள கவர்ச்சியான் லுக்கில் வந்திருக்கும் ஸ்டில்கள் வைரல் ஆகி இருக்கிறது.

# மீண்டும் ஒரு 1000 கோடி? மாஸ் காட்டும் 'துரந்தர் 2'



ஆதித்யா தார் இயக்கத்தில் நடிகர் ரன்வீர் சிங் நடிப்பில் கடந்தாண்டு வெளியான படம் துரந்தர்.

இப்படம் நல்ல வரவேற்பை பெற அதன் இரண்டாம் பாகமான 'துரந்தர்: தி ரிவெஞ்ச்' உருவாகி 19ம் தேதி வெளியானது.

இப்படத்தில் மாதவன், சஞ்சய் தத், அர்ஜுன் ராம்பால், ராகேஷ் பேடி, டேனிஷ் பாண்டோர், சாரா அர்ஜுன் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில் இப்படம் வெளியான நான்கு நாட்களில் உலகளவில் ரூ.761 கோடி வசூலித்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ரூ.550 கோடியும், உலக நாடுகளில் ரூ.211 கோடியும் வசூலித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.மேலும் விரைவில் 1,000 கோடி ரூபாய் வசூல் செய்த படங்களின் பட்டியலில் அதிரடியாக நுழையும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் பாகம் ரூ.1307 கோடி வசூலித்தது குறிப்பிடத்தக்கது.

# 49 ஆண்டுகால திரைப்பயணத்தை கேக் வெட்டி கொண்டாடிய 'HI' படக்குழு!

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகர்களில் முன்னணி இடத்தில் இருப்பவர் நடிகர் கவின்.

இவர் 'நட்புனா என்ன தெரியுமா'படத்தில் கதாநாயகனாக வெள்ளித்திரைக்கு அறிமுகமாகினார். கவின் பிக்பாஸ் மூன்றாம் சீசனில் பங்கேற்றார். பிக்பாஸ் கவினுக்கு பெரிய திருப்பு முனையாக அமைந்தது.

பிக்பாஸிற்கு பிறகு 'லிஃப்ட்' என்ற படத்தில் நடித்தார்.

ஓடிடி- யில் மட்டும் வெளியான 'லிஃப்ட்' திரைப்படம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனை தொடர்ந்து 'ஸ்டார்', 'கிஸ்', 'டாடா', 'ப்ளடி பக்கர்', 'மாஸ்க்' உள்ளிட்ட பல திரைப்படங்களில் நடித்துள்ளார். இதையடுத்து தற்போது விஷ்ணு எடவன் இயக்கத்தில் HI என்ற படத்தில் கவின் நடித்து வருகிறார்.

இப்படத்தில் நயன்தாரா மற்றும் சத்யராஜ், ராதிகா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றனர்.

வயதில் சிறியவன் தனக்கு மூத்த வயதுடைய ஒரு பெண்ணின் மீது காதலில் விழுகிறான் போன்ற கதைக்களத்தில் இப்படம் உருவாகி இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நடிகை ராதிகாவின் 49 ஆண்டுகால திரைப்பயணத்தை 'ஹாய்' படக்குழு கேக் வெட்டி கொண்டாடியுள்ளது. இது தொடர்பான புகைப்படங்களை படக்குழு வெளியிட்டுள்ளது.




# நடிகர் சூர்யா வெளியிட்ட பைக்கர் டிரெய்லர்





சார்மிங் ஸ்டார் ஷர்வானந்த் மற்றும் இயக்குநர் அபிலாஷ் ரெட்டி கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "பைக்கர்." யு.வி. கிரியேஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி இருக்கும் இந்தப் படம் தெலுங்கு, தமிழ் மற்றும் மலையாளம் என மூன்று மொழிகளில் வெளியாகிறது.

இந்தப் படத்தில் நடிகர் ராஜசேகர், பிரமாஜி மற்றும் நடிகை மாளவிகா நாயர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார்.

ஒளிப்பதிவு பணிகளை யுவராஜ் மேற்கொள்ள, படத்தொகுப்பாளராக அனில் பாசலா பணியாற்றியுள்ளார். இந்தியாவின் முதல் மோட்டோகிராஸ் திரைப்படமாக "பைக்கர்" உருவாகி இருக்கிறது.

வருகிற ஏப்ரல் 3-ஆம் தேதி உலகளவில் வெளியாகும் நிலையில், பைக்கர் திரைப்படத்தின் டிரெய்லரை நடிகர் சூர்யா தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். டிரெய்லரின் படி இந்தப் படம் மோட்டோகிராஸ் (ஆஃப்-ரோடு மோட்டார்சைக்கிள் ரேசிங்) பந்தயம் தொடர்பான கதையம்சம் கொண்டிருக்கும் என்று தெரியவந்துள்ளது.



சின்னத்திரையில் மிகவும் பிரபலமான தொகுப்பாளினிகளில் ஒருவர் மணிமேகலை. இவர் விஜய் டிவியில் பல ஆண்டுகளுக்கு பணியாற்றி வந்த நிலையில், அங்கிருந்து வெளியேறி தற்போது ஜீ தமிழில் தொகுப்பாளினியாக உள்ளார். இன்று ரம்ஜான் பண்டிகை என்பதால் தனது கணவருடன் சேர்ந்து கொண்டாடியுள்ளார். அந்த போட்டோஷுட் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மணிமேகலை வெளியிட்டுள்ளார். மேலும், அந்த பதிவில் "எனக்கே கடை பிரியாணிதான், என்கிட்ட பிரியாணி கேட்டா நோ யூஸ்" என பதிவிட்டுள்ளார்.

# பள்ளிச்சட்டம்பி படத்தின் டீசர் வெளியீடு



டொவினோ தாமஸ் நடிப்பில் கடந்தாண்டு ஐடெண்டிட்டி மற்றும் நரிவேட்டை திரைப்படம் வெளியானது.

இந்த இரண்டு திரைப்படமும் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

மேலும், கடந்தாண்டு வெளியாகி பட்டையை கிளப்பிய லோகா திரைப்படத்தில் சாத்தான் என்ற கதாப்பாத்திரத்தில் டொவினோ தாமஸ் நடித்திருந்தார் . லோகா 2 படத்தில் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்.

தற்போது டிஜோ ஜோஸ் ஆண்டனி இயக்கத்தில் 'பள்ளிச்சட்டம்பி' படத்தில் டொவினோ தாமஸ் நடித்து வருகிறார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக கயாடு லோகர் நடிக்கிறார்.

இப்படம் வரும் ஏப்ரல் 9ம் தேதி வெளியாகிறது. இந்நிலையில், இப்படத்தில் டீசர் வெளியாகியுள்ளது.


Happy
Anniversary
அ.பாலமுருகன்-ராமபாய்


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer
Sarees, Chudidhar,
Laganga, Choli &
Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
TELECALLERS
• Work at Home
• Fulltime or Parttime
Salary Rs. 20000 to 50000/-
Call / Whatsapp:
7789941009
9337501889


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com






## உறவுகள் மேம்பட

மனப்பூர்வமாக பேசுங்கள்
மற்றவர்கள் சொல்வதை
கவனமாக கேளுங்கள்
சிறு தவறுகளை மன்னித்து
அன்பு செலுத்துங்கள்
உறவின் அடித்தளம்
இதுதான்!

எல்லையில்லா அன்பு ,
இனிமையான சொல் ,
புரிதலின் மௌனம்
இவைகளின் இடத்தில்
உறவுகள் என்றும் பூக்கும் !

உண்மை பேச்சும்,
பொறுமையும் உறவுகளை
வலுப்படுத்தும் !

அன்புடனும் பொறுமையுடனும்
பேசுங்கள் !

மற்றவர்கள் கருத்துக்கு மதிப்பு
கொடு எதிர்பார்ப்புகளைக்
குறைத்துக் கொள்ளுங்கள்
மன அமைதிக்கான பெரிய
ரகசியம் !

குறைகளை சுட்டி காட்டாமல்
நிறைகளை பாராட்டுங்கள்
உறவை மலரச் செய்யும்
மனப்பான்மை!

தவறுகளை மன்னிக்கும்
மனப்பான்மை
நீடித்த பிணைப்பை
உருவாக்கும்!

பாராட்டுவதற்கும் நன்றி
கூறுவதற்கும் தயங்காதீர்கள் !

உங்கள் கருத்துகளை
அன்புடன்
வெளிப்படுத்துங்கள்!

வார்த்தைகள் இன்றிப் பேசும்
கண்கள் மன்னிக்கும் மனமும்,
செவி சாய்க்கும் பண்பும்,
உறவின் பாலமாய் நம்மை
இணைக்கும் ! விடியும் என்று
இருளை நம்புவெற்றி உன்னை
வந்து சேரும்!

கரை தேடி ஓடும் அலைகள்
கவிதை பாடும் கடற்கரைகள்!

சிதறி விழும் முத்துக்கள்
போல சிதறிடும் எண்ணங்கள்
மனதில் மேலேசொல்லாத
சொல்லுக்கு செவி சாய்க்கும்!

இதயம் தாங்கும் பெரும் பாரம்
நட்பின் கரம் தொட்டால்
மலரும் மலர் ஒன்று பூக்கும்
மனம் எங்கும் வீசும்!

தேடல் உள்ளவரை வாழ்க்கை
இனிக்கும் !

மழைத்துளி மண்ணைத்
தொடும் உயிர்கள் எல்லாம்
துளிர்விடும்
குளிரும் காற்றும் வீசும் !

மனம் அமைதியாய் வசிக்கும்
விட்டுக் கொடுக்கும் உறவை
வளர்ப்போம்!

மௌனம் பேசட்டும்
மகிழ்ச்சி கூடட்டும் உறவை
பேணுவோம்!
வார்த்தைகளைக்
கடந்து செல்லும்
உண்மை!



**பெ.திருமுகம்**
மணமேல்குடி



## தொன்மைத் தொலைக்காட்சி!

தொலைக்காட்சி
தோன்றிய காலம்
தெருவெங்கும் மக்கள்
கோலம் பலரும்தான்
பார்க்கும் காட்சி
பாங்கான நற்தொலைக்
காட்சி!
காலைமிளிரும் கருவியே
தானே காண்பதற்கு
ஒளிர்மையே தானே
உளமாரப் பார்த்து
மகிழ்ந்து உன்னதமாய்க்
காண்கிறதகவே!

கண்ணுக்கும் செவிக்குமே
இன்பம் காட்சிகளைக்
காட்டிடும் அன்பு
எண்ணுகையில் இன்பமே
கூடும் ஏற்றமாகப் பாட்டுப்
பாடும்! பண்ணோடு பாட்டுமே
உண்டு
பளிங்காகக் காட்சிகள்
கொண்டு விண்புகழ்
நிகழ்வுகள் தோன்றும்
வீறுடனே தரவுகள் கூறும்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## கலங்காதே மனமே

" உழைப்பால் உயர்ந்து
பேச்சால் மடக்கி மயக்கி
மேடையில் நின்று விட்டால்..."

மாலையும் மரியாதையும்
தானாய் முன்
வந்து வரவேற்க்கும் ..."

எவரும் சலைத்தவர்
இல்லை படிப்படியான
உழைப்பும் முயற்சியும்
உயர்த்திவிடும் ..."

போராடினால் வெற்றி
நிச்சியம் பயந்தால்
வெற்றியும் கை நழுவிப்
போய்விடும் ... "

வரைய வரைய சித்திரமும்
கைவசப்படும் பேச பேச
முதிர்ச்சியம் அழகும்
வெளிப்படும் .... "

சபைக் கோழையாய்
இருந்து விடக்கூடாது
ஆணவமும் வந்து
விடக் கூடாது ....."

பட்டை தீட்ட தீட்ட
வைரம் ஜொலிக்கும்
அது போல தான்
வாழ்க்கையும் .... "

கைவசம் ஆகும் வரை
உழைப்பை போராட்டத்தை
நிறுத்தி விடக்கூடாது ....."



பந்தையத்தில்
ஓடி பரிசு பெறும்
குதிரைக்கு தானே
மரியாதை
அக்கறை ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## காதல் என்பது !.

காதல் என்பது இசை
அது.... இனிமையையும் தரும்
இரைச்சலையும் தரும்...

காதல் என்பது மழை
அது சாரலாகவும் பெய்யும்
சூறாவளியாகவும் மாறும்....

காதல் என்பது நெருப்பு..
விளக்கையும் பற்ற
வைக்கும், வீட்டையும்
பற்ற வைக்கும்...

காதல் என்பது மலர்
மணம் வீசும் மலரும்
உண்டு.. விஷம் கக்கும்
மலரும் உண்டு!

காதல் என்பது சுவாசம்...
சுவாசிக்க வைப்பதும் உண்டு
சுவாசத்தை நிறுத்திவிடுவதும்
உண்டு !


காதல் என்பது மாற்றம்...
சிலர் வாழ்வை
உயர்த்தியும் பலர்
வாழ்வைசிதைக்கவும்
செய்யும் சக்தி காதலில்
உண்டு !ஆக...காதலும்
கற்று மற !



**எம்.பி.தினேஷ்**கோவை

## மனித வாழ்வின் வரம்

(இயற்கை)



இரவும் நீ பகலும் நீ
அனலும் நீ குளிரும் நீ

வெயிலும் நீ நிழலும் நீ
மலைத்துப் பார்க்கும்
இல்லா இடங்களிலும்
எல்லாமும் நீ

என்று அறிகிற மனது
உணர தவறுகிறது
உண்மையை உணர்வை

நான் யார் ? என்று
அறிவதற்கு நீ தான்
விடையாவாய்

அனுபவம் வேறு
அறிவு வேறு பார்வையும் வேறு
பாதையும் வேறு

நம்பிக்கை வேறு செயல் வேறு
உணர்வது வேறு
இருப்பது வேறு புரிதல்
வேறு வேறு...
முரணெல்லாம் நீதான்
இருப்பினும் நீ அதிசயம்

எதிரானவைகளை
ஒன்றிணைக்கும் பாலம்

நீ யார் ?

வாழ்க்கை வரையறைக்குள்
அடங்குவதில்லை
மனம் காட்டுபவையும்
நீ இல்லை எத்தனை நற்பயன்
உந்தன் காலடியில்

உன்னை முழுமையாக
புரிந்து கொள்ள நினைப்பவர்
மறந்திடுவார் வாதங்களை,
சுய இலாபங்களை

சொர்க்கம் உண்டென
நம்பிக்கை இல்லாதவரெல்லாம்
ஒப்புக்கொள்ளும் தருணம்

இது வாழ்வின் வரம்.

**க.புராணாராம்**

## ஹைக்கூ

கூடுதலாக உண்டு
தாய்மண் பாசம்
புலம் பெயர்ந்தவர்களுக்கு

வெந்நீர் ஊற்றியபோதும்
வளரும் செடிகள்
புலம் பெயர்ந்தவர்கள்

பயன்பட்டது சாக்கடைநீரும்
தீ அணைக்க

கூடலின் அருமை
உணர்த்தியது ஊடல்

ஈடில்லா வேகம்
பின்னோக்கிப் பார்ப்பதில்
மலரும் நினைவுகள்

உடலின் மச்சமென
நீங்காத நினைவு காதல்

இனிமை இனிமை
சின்னத் தீண்டல்
சிந்தையில் கிளர்ச்சி

கோலமிட்டுச் சென்றது
சாலையில் தண்ணீர் லாரி

பிணமானபின்னும்
காசு ஆசை நெற்றியில் காசு

தடுக்கி விழுந்ததும்
தமிழ் பேசினான் அம்மா

வந்துவிட்டது சேலையிலும்
சைவம் சைவப்பட்டு

கொன்ற கோபம் இன்னும்
தீரவில்லை அதிரும் பறை

உயராத கூலி
உயரும் விலைவாசி
வேதனையில் ஏழைகள்

அயல்நாட்டில் ஊறுகாய்
நம்நாட்டில் சாப்பாடு
தொலைக்காட்சி

மழை வந்ததும்
உடன் வந்தது
மண்வாசைனை!

---------------------

ஆட்சியில் ஆள்பவர்களை
விட மனதை ஆண்டவர்கள்
மரித்த பின்னும் வாழ்கின்றனர்

சிற்பி வீட்டு
படிக்கல்லானாலும்
சிலையாவதில்லை

கோடிகள் கொள்ளை
அடித்தாலும் முடிவு

தற்கொலை கொலை

பொம்மை உடைந்த போது
மனசும் உடைந்தது
குழந்தைக்கு தடியால் அடித்து
கனிவதில்லை கனி
குழந்தைகளும்தான்

அனைவரும் விரும்புவது
அதிகாரம் அல்ல அன்பு

நிலம் விற்றுப்பெற்றப்
பணத்தில் அப்பாவின் முகம்



கால்களைத் தொட்டு
வணங்கிச் சென்றன
அலைகள்

சிற்பி இல்லைசிற்பம் உண்டு
நிலையானது எது ?

போட்டியில் வென்றது
புற அழகை அக அழகு

நான் கடவுள் என்பவன்
மனிதன் அல்ல விலங்கு

அவளுக்கும் உண்டு
மனசு மதித்திடு மனைவி

---------------------

மரணம் இல்லை
மக்களுக்காகப் போராடிய
போராளிகளுக்கு !

செலவற்ற வரவு புன்னகை !

வலிமை வாய்ந்தது
சிறந்த ஆயுதம் அன்பு !

கண்டுபிடிக்கவில்லை
மருந்து காதல் நோய் !

எங்கும் இல்லை தமிழகம்
தவிர பச்சைக் குத்தும்
தொண்டர்கள் !

ஓய்விலும் ஓய்வின்றி
உழைத்திடும் பெண்கள்
மாத விலக்கு !

வென்றவர்களுக்குப்
புரியவில்லை
தோற்றவர்களுக்குப் புரிந்தது

காதலின் அருமை !


ஏற்றத்தாழ்வு உழைப்பதில்
கடிகார முட்கள்

நேரம் பார்த்து தோல்வி
நேரம் பார்க்காது வெற்றி
மூடநம்பிக்கை !

ஒரே மாதிரி ஒருவரும்
இல்லை மனிதர்கள் !

அதிசயம் ஆனால் உண்மை
உடலின் இயக்கம் !

தேவை சிக்கனம்
பயன்பாட்டில் இக்கணம்
மின்சாரம் !



அழகுதான் கழுதை குட்டியில்!

ஊழல் உடன் பிறந்த நோய்
அரசியல்வாதிகள் !

இக்கரைக்கு
அக்கரைப் பச்சை
அரசியல்வாதிகள் !

மூலதனம் பொய் வாய்
அரசியல் !

ஊழல் ஒழிக்க வந்தவருக்கு
பண விருது ஊழல் ?

மக்கள் மறக்கவில்லை
இருவரையும்
காந்தி !கோட்சே !

பெரிய மனிதர்களின்
சின்னப் புத்தி ஊழல் !

தன்னலம் மறந்து அன்று
தன்னலம் ஒன்றே இன்று
அரசியல் !

இறங்காதோ ?
ஏக்கத்தில் ஏழைகள்
விலைவாசி !

**கவிஞர் இரா. இரவி!**

1.நேர்மை என்பது ஒரு
போதை பழகிவிட்டால் விட்டு
விடுவது சிரமம்

2. நிம்மதி என்பது வங்கி
கணக்கில் இல்லை உன்
எண்ணத்தில் தான்
இருக்கிறது

3.உன் ஓட்டு ஒரு
யோக்கியனுக்கு விழுந்தால்
உனக்கு நல்ல எதிர்காலம்
இருக்கிறது அது
அயோக்கியனுக்கு விழுந்தால்
அவனுக்கு எதிர்காலம்

4. வாக்கிங் கூட்டிட்டு
போகாத நாய்க்கும் ஷாப்பிங்
கூட்டிகிட்டு போகாத
பொண்டாட்டிக்கும்
கண்டிப்பாக ஒருநாள்
வெறிபிடிக்கும்

---------------------



1. துணிவு உங்களை
உழைப்பில் உயர வைக்கும்
பணிவு உங்களை பிறர்
மனதில் உயர வைக்கும்

2. வாழ்க்கையில் பிரச்சனை
வந்தால் கடவுளிடம் முறையிடு
பிரச்சனையே வாழ்க்கையாக
இருந்தால் கடவுளை
மாற்றிவிடு

3. தான் உழைத்த பணத்தை
வங்கியில் போடாமல்
உன் உணவுக்காக மண்ணில்
போடுகிறான் விவசாயி

4. எந்த ஆண் மகனையும்
பொய் சொல்ல வைக்கும்
மனைவியின் ஒரே கேள்வி
எங்க நான் அழகா
இருக்கேனா

5. உன்னுடைய குரலை
உயர்த்துவதற்கு பதிலாக
உன்னுடைய
தகுதியை
உயர்த்திக்
கொள்




**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# நூல் விமர்சனம்

**காதலுக்கு எண் 143–ஐ அழுத்தவும்**
**நூலாசிரியர்_ நௌஷாத் கான் . லீ. அவர்கள்**
**நூல் விமர்சனம்_ தயானி தாயுமானவன்**




தொடர்ந்து எழுத்துலகில் தடம் பதித்து வரும் தம்பி நௌஷாத் கான் . லீ. அவர்கள் 20 புத்தகங்களுக்கு மேல் எழுதிய அனுபவமிக்கவர். வெளிநாட்டில் வேலை என்றாலும் தமிழை மறக்காமல் வாழும் தமிழர். அவருடைய "துலுக்கப் பரதேசியின் ஜீவிதக் கதை" அனைவரின் கவனம் பெற்ற நூலாகும். அது விருதுகளையும் அவருக்கு வாங்கித் தந்தது.

அவரின் இடையுறாத முயற்சியை கண்டு வியந்திருக்கிறேன். இன்றுவரை தொடர்ச்சியாக எழுதி வரும் சகோதரர் மேலும் பல நூல்கள் தரவேண்டும்.புத்தகம் வந்ததோ 2017. இன்னும் இந்தத் தலைப்பு ஏற்படுத்தும் தாக்கம் எழுத்தாளர்கள் மத்தியில் கவனம் பெற்றதாகும். காகிதம் பதிப்பகம் இந்நூலை அழகுற வடிவமைத்துள்ளது. இதோ அவரின் கவிதைகள்

* காதலிக்கும் முன் மலர் கொடுத்தான் காதலித்த பின் மழலை கொடுத்ததால் மழையில் விற்கிறேன் வாடாத மலரை ... ! ஒரு காதலில் நுழையும் இளைஞன் எவ்வாறு தன் காதலிக்காக குடும்பத்தின் தலைவனாக மாறிய மாயம் இந்தவாழ்வு...

* மழையை பிடிக்கும் உன்விரல் பிடித்து நனை கையில்...! மழை பிடிப்பதே காதலில் விழுந்த பிறகுதான் எல்லா கவிஞர்களுக்கும் இந்த வரிகள் சமர்ப்பணம்.


*நன்றிசொல் நயவஞ்சகநட்புக்கு இலவசமாய் துரோகத்தை கற்றுதந்ததற்கு ...! வாழ்க்கைப்பாடம் அனல் மேல் வாழ்வு அதுவே அனுபவத் தீர்வு

*என்மேல் அன்புஇருக்கிறதா...? என்கிறாய் ... எப்படி சொல்வேனடி... பூட்டி வைத்த உன் இரும்பு இதயத்தை திறந்து பார் என்று...! இந்தவரிகள் காதலுக்கு ஒரே கதவுதான் . ஒரு புறம் தட்டுவதும் ஒரு புறம் அமைதி காப்பதும் காதலின் முரண் அல்லவா?

* முதல் உலகப் போர் நான் உன்னைப் பார்த்தது இரண்டாம் உலகப் போர் நீ என்னைப் பார்த்தது மூன்றாம் உலகப் போர் உன் அண்ணன் நம்மைப் பார்த்தது ...! இதுதான் ஆகச்சிறந்த அனுபவத்தையும் , திடுமென இயல்பில் எதிர்கொள்ளும் அந்த நிமிட அனுபவம் , இரசித்து சிரித்த கவிதையாகும்.

* உன்னைக் காணும் போதெல்லாம் என்னுள் வயலின் வாசிப்பது யார் ...! என்ற கவிதை ஒவ்வொரு காதலில் பூக்கும் பூக்களுக்கும் இசை சொந்தமானது.

* ஆழம் தெரிந்தும் காலை விடாதே... பொல்லாதது காதல் நதி...! உண்மைதான் அதுவே நம்மை அடித்துச் செல்லும் சாகரம். அனைவரும் கரையிருந்து வேடிக்கை பார்ப்பார்கள். காப்பாற்ற ஒருவரும் இல்லை.



** நீ வாசித்த புத்தகங்களில் கூட நீங்காத உன் வாசனை ...! உங்கள்புத்தகத்தின் வரிகளே அவளா கும் போது அவளின் வாசம் இல்லாமலா?

** உன் கண்கள் என்னும் தூண்டிலில் சிக்கிய சுறாமீன் "நான்" என்ற கவிதையில் காதலியின் கெண்டைக் கண்களில் சிக்கிக் கொண்டதே சுறா . சிறிய மீனின் கண்கள் சுறாவையே வேட்டையாடிய அதிசயம் கவிஞரின் கவிதையில்.

** சகுனம் பார்த்து சாலையில் சென்றான் சற்குணம் விபத்தில் பலி "குறுக்கே வந்த பூனை" போன்ற விகடகவியின் மனமும் வாய்த்திருக்கிறது கவிஞருக்கு.

ஹாஸ்யத்தின் உச்சமாக * மியாவ் சத்தம் போடும் எத்தனை பூனையை கண்டபோதும் ஏக்கம் என்னவோ பானு வைத்திருந்த முட்டைக் கண் டைகர்பூனையின் மீதுதான் .


விழுந்து விழுந்து சிரிக்கவும் வைக்கிறது இவரது இந்த கவிதைகள். காதல் மிகவும் உண்மையாகி விடும் தருணம் இதுதான் *காலமெல்லாம் காத்திருப்பேன் - உன் கரம்பிடிக்கும் ஒரு நொடிக்காக...! என்பது காதலின் உறுதிமொழி. வாழ்வின் காதல் நொடி.

* மௌனம் அழகானது நீ பேசாமல் என்னுள் பேசும்போது...! காதலில் மௌனமே ஒரு கடிதம் தான் உன்னைக் காணாத போதும் நிறைந்திருக்கிறது உன் மொழி.

***சொல்ல மறந்த கவிதை யென்று தலைப்பிட்டு ** புதிதாய் ஒரு கவிதை சொல் என்றவளிடம் எப்படி சொல்வேனடி....! இதயம் சொல்ல மறந்த உனக்கான கவிதையை உயிரின் உதிரத்திலிருந்து உருவாக்குவேன் என்ற வரிகள் இவரின் தீராத நேசத்தின் வரிகள்.

வாழ்க காதல் வளர்க தமிழ்



## அருட்பெரும் தெய்வம்.!

ஈயும் எறும்பும்..
எல்லாவுயிரும்
சேர்ந்து தொழுத
அருட்பெரும் தெய்வம்.!
நாயும் நரியும்
பறவையினமும்.. சேர்ந்து
வணங்கும் அருட்பெரும்
தெய்வம்.!

பச்சைப் பசுமை சூழ்ந்த
இவ்வுலகம்.. படைத்தவன்
ஒருவன் ஒளியின் வடிவம்..!
இச்சையினாலே.. இழந்தது
அதிகம்.. ஜீவகாருண்யம்
மோட்சத்தைத் திறக்கும்!

வாடியப் பயிரைக் கண்டிடும்
போதும்.. வாடிய இதயம்
வள்ளலின் இதயம்..! தேடியே
நடந்துப் பசியினைத்
தீர்க்கும்.. அணையா
அடுப்பை மூட்டிய தெய்வம்.!


அருப்பெரும் ஜோதி.. அருள்
தரும் தெய்வம்..! வடலூர்
வந்து.. இறங்கிய தெய்வம்..!
ஏழு திரைகளை விலக்கிய
போது.. இரக்க உணர்வாய்
தோன்றிடும் தெய்வம்!

இராமலிங்கம் என்கிற
மனிதன்.. வள்ளலாராய்
வாழ்ந்திடும் தெய்வம்!
அருட்பெரும் ஜோதியே
ஆட்கொண்ட தெய்வம்..!
எல்லா உயிர்களும்
தொழுதிடும் தெய்வம்.!

**வே.கல்யாண்குமார்.**

## சரணம் கச்சாமி

எண்பது வயது வரை
புத்தர் பெருமான்
நோய்நொடி இல்லாமல்
உயிர் வாழ்ந்து நீடித்த
உயர் இரகசியம்,
போதித்த படி அவர்
வாழ்வில் நடந்தார்
என்பது மட்டுமல்ல...
காடு, கழனி பாராமல்
கடும் பனி, சுடும் வெயில்
கருதாமல், கஷ்டம் என்று
துளியும் நினையாமல்,



கன ஆசைத்
தேடலில்,
காலாற
நடந்ததும்
தான்
காரணம்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

வாய்க்குமா வரம்?
கடுமையான கோடையில்
ஒரு குளிர்ந்த நதி
வானத்தரையில் நின்று
பூமியைப் பார்க்கும் வாய்ப்பு.
நொடியில் துரோகியை
மறக்கின்ற மனம்
சொல்வதைத் தட்டாமல்
கேட்கும் பிள்ளைகள்
மரணத்தின் வருகையைத்
தெரிந்து கொள்ளும்
பேரறிவு கடவுளை நேரில்
சந்தித்து கைக்குலுக்கிக்
கொள்ளும் அரிய தருணம்
இடையூறு இடையூறைத்
தீர்க்கும் கடவுள்
போக்குவரத்துக்கு
இடையூறாகத்
தார்ச்சாலை நடுவே!

## சுதந்திரம்

சுதந்திரம் பெற்ற
மகிழ்ச்சியில்
காந்தியோ ரூபாய் நோட்டில்
மக்களோ நடுரோட்டில்

**வே.திருஞானமூர்த்தி**
உமையாள்புரம் தஞ்சை(மா)

## காலம் தரும் பதில்

" வெறும் வார்த்தைகளால்
நல்லவனாக நடிக்க கூடாது
மனம் நிறைந்து குணம்
மாற வேண்டும் ..."

வார்த்தை ஜால விளையாட்டு
நெடு நாள் எடுபடாது ..."

ஒவ்வொரு அசைவையும்
கவனிக்கும் ஒருவனுக்கு
வார்த்தை ஜால விளையாட்டு
தூசுக்கு சமம் ....."

எண்ணங்களில் தூய்மை
வைத்து செயல்களில்
நல்லவை செய்து முன்னேறி
சென்றால் நாளும் நலமே ...."

மனிதனுக்கு மனிதன்
மரியாதையும் தன்மானமும்
குறையாது சமம் பட
பயணித்தால் நல்ல உறவு
மேம்படும் ...."

விரிசல் என்பது ஒரு
பக்கமாக ஒரு பக்கத்தை
மறைத்து வாழ்ந்து
காட்டுவதால் வருவது ..."

விரிசல் துளிர் விட்டால்
வெற்றியும் விவேகமும்
அடைக்கலம் தேடிவிடும் ..."

சமன்பாடு அறிந்து



பயணம்
நடந்தால்
பார்வைக்கும்
பக்குவதற்கும்
வெற்றி வரும்..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி



## இன்னும் கொஞ்ச தூரம்...

வாழ்க்கை ஒரு
சுவாரஸ்யமான புத்தகம்.

அதில் விடுகதை, மர்மம்
திகில், வியப்பு
மெய்யும், பொய்யும் என
நிறைந்து காணப்படும்.

விழியால்... மனதால் ரசித்து
மகிழ்ந்து மகிழ்விப்பதில்
பயணிக்கிறது...

இன்றைய பொழுதை
கணித்து விட முடியும்
நாளைய விடியலை
இத்தருணம்
புரட்டிப் பார்க்க இயலாது.

நில்லாது சுழலும் பூமியில்
நேற்றைய தவறுகளை
திருத்தி எழுதி விடமுடியாது.

பிடிக்கும் என்பார்கள்
பிடிக்காது கண்டிப்புடன்
பிடிக்காது என்பார்கள்
பிடித்துப் போய்விடும்...

வாழ்க்கைப் பாடத்தை
படிப்பது விருப்பமாக
வேண்டும் படிக்க பழகி
விட்டால் எளிதாகிவிடும்.



பிறருக்காக
கொஞ்ச நேரம்
செலவு
செய்யும்
போது
நமக்கான
வாழ்வின்
நேரம்
நீட்டிக்கப்படுகிறது.
இன்னும் கொஞ்சம் தூரம்...

**எறும்பூர் கை. செல்வகுமார்,** செய்யாறு.

1. படைத்தவனுக்கு பயந்து
வாழ்ந்தால் பார்க்கிறவனை
எல்லாம் கண்டு
பயப்பட வேண்டி இருக்காது

2. அனாதை குழந்தைகள்
காமத்தின் பிழைகள்
முதியோர் இல்லங்கள்
வளர்ப்பின் பிழைகள்

3. உறுப்புகள் ஓய்ந்து
விட்டது ஆனால்
பொறுப்புகள் இன்னும்
ஓய்ந்த பாடு இல்லை

4. சவால்கள் மீது சவாரி
செய்வதே வெற்றிக்கு வழி
வகுக்கும்



5. சோம்பேறி
களுக்கு
எல்லா
நாட்களும்
விடுமுறையே

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி




இன்று கவிதைகள் தினமாம்
இன்னும் ஏன்
உன்னை கொண்டாடமல்
இருக்கிறார்கள்!

நீ ஏனடி பெண்ணாய்
பிறந்தாய்? அந்த காதல்
எனை பாடாய் படுத்துகிறது!

இப்படியே எனை
பார்த்து கொண்டே இரு என
கடவுளிடம் வேண்டி
கொண்டது அவள் முகம்
பார்க்கும் கண்ணாடி


உனை கண்டதும்
ஏறி விட்டது?
மனதுக்குள் காதல்!

உனக்கும் வந்ததா என
என்னிடமே கேள்வி
கேட்கிறாய்?



எப்படி
சொல்வேனடி?
உன்னை
கண்டும்
காதல் வராமலா
போய் விடும்!

**லி.நௌஷாத் கான்**



## சிதைக்கின்றாய் என் மனதை

அமாவாசை நேரம் நிலவை
கானாம்... அன்றே அதை
உன் முகத்தில் கானோம்...!

விழுந்த மனசு தரையில்
கானாம்... அன்னார்ந்து
பார்த்து உன்னில்
கானோம்...!

பனித்துளி பார்க்க
பார்வையில் கானாம்...
புல்மேல் படுதுறங்க
கண்ணில் கானோம்...!

நீ வந்த ஓசை எப்பவும்
கானாம்...
அனுபவிற்கும்போது
அனைத்தையும் கானோம்...!

எந்த திசை தேடினாலும்
உன்னை கானாம்...
கர்ப்பனையில் தினம் தினம்
உன்னை கானோம்...!!

உறங்கும்போது தினம்
உன்னை கண்டேன்...



விழித்தபோது
விடியலை
மட்டுமே...
கண்டேன்....!!

**பொன். கருணா**
நவி மும்பை




ஒரு கனவின் நீட்சியாய்
நீ வந்தாய்
இலையுதிர்காலத்தின்
வசந்தம் நீ. இமைகளுக்கு
சாயம் பூச மறுத்துக்
கொண்டிருந்தேன்
அப்போது. வெள்ளைத்
திரையில் உன் உருவம்..
ஒரு புகை போலப் படரும்
உன்னை இறுக்கிக் கட்டிக்



கொள்ள
விழையும்
எனக்கு
பன்னிரண்டு
மாதங்களும்
பூச்சொரியல்
தான்.

**ரிஷபன்**



வலை வீசத் துடிக்கும்
எனக்கு உன் வாள் வீச்சு
மயக்கம் தர

புன்னகைக்கும் கண்
விளிம்பில் என்னை மறந்து
போனேன் என்பேன்

கண்ணசைவிற்கு
காத்திருக்கும் எனக்கு
எண்ணமெல்லாம் நிறைந்து
என்னுள்



வண்ணமயமாய்
வந்துவிடு
நீயும் வழியில்
விழிவைத்து
தடம்
பார்த்திருப்பேன்

**வி.பிரபாவதி,** மடிப்பாக்கம்



எண்ணக் கருவாகி
கற்பனையில் வளரும்

மொழி பிரசவிக்கும்
அழகுக் குழந்தை

கனவுகளுக்கு வடிகாலாகி
காகிதத்தில் ஊற்றெடுக்கும்

ஈடேறா எண்ணங்கள்
எழுத்தாகி உலாவரும்

சொற்களின் சுழற்சியில்
விற்களாய் வரிகள்
ஊடுருவும்

காணும் பொருள் யாவும்
கருவாகும் காட்சியில்
நிறைந்து கவியாகும்

தடையில்லாக் கற்பனையால்
விடை காணும் புதிர்கள்

நவரசமும் ஊற்றெடுத்து
நல்லதொரு கவியாக
உருப்பெறும்

விழிகள் கண்டு சிந்தை
பதிந்து அரிதாரம் ஏற்று
எழுதுகோல் வழி
எண்ணம் சொல்லும்

வடிவம் பலவாகி
வகையாய் தனைக் காட்டும்



உள்ளத்து
வலிகளை
மயிலிறகாய்
வருடி
வலி போக்கும்
நிவாரணி.

**தமிழ்நிலா**




## தினம் தினம் கவிதை தினம்!

எவ்வளவு வேடிக்கை பார்
என் பேரன்பே!
நினைத்த போதெல்லாம்
நாம் ஒருவரை ஒருவர்
படித்துக்கொண்டிருக்கிறோம்!
ஆனால் –இன்றொரு நாளை
கவிதை தினம்
என்கிறார்கள்!
ஆக – மற்ற நாட்கள்
அத்தனையும்
கவிதை(களு)க்கு
விடுமுறையா?!
எவ்வளவு விந்தை பார் இது!
கவிதை படிப்பவர்களை விட
எழுதுபவர்கள் அல்லவா
பன்மடங்கு அதிகரித்து
விட்டார்கள்!
எங்கு வேண்டுமானாலும்
எதைப் பற்றி
வேண்டுமானாலும்
சொல்லும் போது
ஒவ்வொருவரின் கவிதையும்
என்னமாய்ப் பிரமிக்க
வைக்கிறது! காதல்
ப்ரியன்களை விடக்
கவிப்ரியன்கள்
தானே நம்மைச் சுற்றி
இருக்கிறார்கள்!
ஒரு நாள் போதாது
இன்றொரு நாள் போதாது



தினம் தினம்
கவிதை
தினம்
வேண்டும்!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## பாட்டெழுதப் போனான்!

நாத்து நடும் சுப்பையா
பாட்டெழுதப் போனான்!
பாத்து யெழுத போனான்
பாடு பட்டான் பாரீர்!

நஞ்சை நிலம் வித்துபுட்டு
சினிமாவுக்குப் போனான்!
மாஞ்சு மாஞ்சு சுத்தி வந்து
காஞ்ச மாடு ஆனான்!

கையப் புடிச்சு காலைப்
புடிச்சு பாட்டெழுதலானான்!
பாட்டெழுதி முடிப்பதற்குள்
பாதிஉடம்பு ஆனான்.!

பாடிப்பாடி பறக்க நினைச்சு..
பாடிப் பத்தி எழுத.. பத்துப்
பாட்டு எழுத நினைச்சு
குத்துப் பாட்டு எழுத..
ஓடிவந்து பட்டிணத்தில்
பாட்டுக்காரன் ஆனான்!
ஒத்தஆளாய் பட்டணத்தில்
பித்துப் புடிச்சுப் போனான்!

டாப்பு டுக்கு டப்பா கிழிய
டப்பாங்குத்துப் பாட்டு!
தகர டப்பா சத்தத்துக்கு
ஏத்துதொருப் பாட்டு! இன்று
வந்து நாளை மறையும் இந்த
காலப் பாட்டு! எழுகின்ற
ஆசைவலையில் எகிறிப்
போச்சுப் டாப்பு.!

தமிழ் வளர்க்கப் போன
சுப்பு.. தகர டப்பா ஆனான்!
களை பறிச்ச கைகளாலே
கதையெழுதப் போனான்!
செலவழிஞ்சு போச்சு
காசு.! திருட்டு வண்டி
ஏறி... திரும்ப அவன்
வந்து... ஏரைப்பிடிச்சு
உழுதான்! திருந்தி வந்து
அன்னைத்தமிழை வாழ
வைக்கலானான!

**வே.கல்யாண்குமார்.**



## என் வாழ்வின் வசந்தம் ( மனைவி )

அறுபதிற்கும்
மேலான வயதில் கூட
அறுபதுநாள் முப்பதுநாள்
ஆசைமோகம்
நறுமணமாய் திருமணம்தான்
நடந்த அந்த
நாள்களிலே காட்டியபோல்
குறைந்திடாமல்
குறுந்தொகையின் இன்பம்போல் பாவேந்தர்தம்
குடும்பத்து விளக்கிலுள்ள முதியோர்போல
முறுவலுடன் தாயாகப் பெற்றெடுத்த
மூவருடன் நான்காகப் பேணு கின்றாள் !

எங்கிருந்தோ வந்தவள்தான் பெற்றோர் தம்மை
ஏந்திநின்ற சுற்றத்தை ஊரை யெல்லாம்
பொங்கிவந்த அழுகையுடன் புதைத்து விட்டுப்
பொறுப்புடனே வந்தபுது உறவை நெஞ்சுள்
தங்கவைத்துப் பிறந்தவீட்டுப் பண்பாட்டோடு
தழைக்கவைக்கப் புகுந்தவீட்டில் உறுதியேற்று
மங்கலத்தை என்வாழ்வில் ஏற்றி வைத்து
மகளென்றே என்பெற்றோர் புகழ நின்றாள் !

அருங்கவிதை நானெழுதக் கவலை வந்து
அண்டாமல் எனக்குவரும் வருவா யோடு
வருவாயைப் பெருக்குதற்கே தையல் வேலை



வண்ணமிகு பூவேலை கற்றுத்தந்து
பொறுப்புடனே மூவரினை வளர்த்தாளாக்கிப்
பொலிவுடனே பலநூல்கள் எழுதிப்பேரும்
பெருமையினை நான்பெறவே வேராய் நிற்கும்
பேரழகி என் மனைவி வசந்தா என்பேன் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## பயணம்..

மூட்டை முடிச்சைக் குறையுங்கள் வண்டிப் பயணம் சுகமாகும்.
ஒன்றோ இரண்டோ போதுமிங்கே வாழ்க்கைப் பயணம்
நலமாகும்.

விண்கலம் ஏறிச் செல்லுங்கள் நிலவின் பயணம் இதமாகும்.
வியர்வை நதியில் நீந்துங்கள் வெற்றிக்கொடிகள் நமதாகும்.

எறும்பினைக் கூர்ந்துப் பாருங்கள்.. எழுந்திடும் எண்ணம்
உருவாகும். . திரும்பிடும் காலம் உனதாகும் திசைகளும்
வாழ்த்தி உனைப்பாடும்.

பாரதிப் பாட்டைப் பாடுங்கள்.. பாய்ந்திடும் ரத்தம் சூடாகும்..
பாதையில் பயணம் நடத்துங்கள் பாரெல்லாம் நமக்கு வீடாகும்..

தடைகளை உடைக்கப் புறப்படுங்கள்.. தடைகளே நமக்குப்
படியாகும்.. விடியலைத் தேடிப் புறப்படுங்கள்.. துணிவுதான்
மின்னலில் பிறக்கும் இடியாகும்.

கடினமாய் தோன்றும் பயணத்தில்.. கடுகிநடப்பாய் ஊர்
தோன்றும். முடிவுகள் தேடும் பயணத்தில் முயற்ச்சியில் தானே
வேரூன்றும்..

**வே.கல்யாண்குமார்.**



## நெருப்பின் தாகம்

கும்பகோணத்தில் பிஞ்சுகளின் உயிர் குடித்தது
குரங்கணியில் பலரின் உயிர் குடித்தது!

பஞ்ச பூதங்களில் பயங்கரமான பூதம் நெருப்பு
பற்றி எரிந்தால் பிழைப்பது மிகக் கடினம்!

தீ விபத்து என்பது கோர விபத்து
தீயுடன் கவனமாக இருப்பது நல்லது!

சுடராக இருக்கையில் ஒளியினைத் தரும்
சூறாவளிக் காற்றோடு இணைந்தால் அழித்து விடும்!

நெருப்பும் காற்றும் தீ நட்பு ஆகும்
நெருங்கியவர்களின் உயிரைப் பறித்து மகிழும்!

வாழை இலை ஆடை வெப்பம் தணிக்கும்
விபத்து நேர்ந்தால் வலியால் துடிப்பர்!



கொடிது கொடிது தீ மிகவும் கொடிது
கூட இருந்தே குழியைப் பறித்து விடும்!

உணவு சமைக்க உதவுவது மட்டுமல்ல
ஊர எரிக்கவும் உதவிடும் நெருப்பு!

குடிசைகள் பற்றிட மிகவும் பிரியம்
குடிசைவாசிகளைத் துன்புறுத்தி மகிழும்!

சிக்கு முக்கி கல்லை உரசிக் கண்டுபிடித்தான்
சிக்கலில் மாட்டி வாட்டி வதக்கி விடுகின்றது!

நெருப்புடா நெருங்கடா வசனம் பிரபலம்
நெருப்பிடம் நெருங்குவது மடமையன்றோ அறிந்திடுக!

மலையேறும் சுற்றுலா சென்றவர்களின் உயிரை
மனசாட்சியின்றிப் பறித்திட்ட நெருப்பே குற்றவாளி!

வனத்தில் வசிப்பவர்களால் வனம் எரிவதில்லை
வனம் காணச் செல்பவர்களால் வனம் எரிகிறது!

கட்டுக்குள் இருந்தால் நன்மை தரும் தீ
கட்டுக்கடங்காவிட்டால் காட்டையும் அழிக்கும் தீ

நெருப்பின் தாகம் என்றும் தீராத தாகம்
நெருப்பை நெருங்காமல் என்றும்.

**கவிஞர் இரா. இரவி!**




























அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் **கோ கிரி** என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-08 ம் தேதி **22.03.2026 ஞாயிற்றுக்கிழமை**, சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் **மயூர துவஜாரோகணமும்** அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.


| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துவஜ அவரோகனம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

பிளாஸ்டிக் உபயோகிப்பதை தவிர்ப்போம். தாய்மண்ணை காப்போம்.

இங்ஙனம்.
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285



ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
- Residential Construction
- Commercial Construction
- Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெைப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com









































ஜெயஜெய சங்கரா!
ஹர ஹர சங்கர!
ஸதாசிவ ஸமாரம்பரம்!
சங்கராச்சார்ய மத்யமாம்!
அஸ்மதாசார்ய பர்யந்தாம்
வந்தே குருபரம்பராம்!

பச்சையே உன்றன் குறக்குலத் திருவாம் பத்தினி மேனியும் பத்தா
பச்சையே கேகயப் பரியும் பதக்கத்திலணி மரகதமும்
பச்சையே நீ வாழ் குன்றுகள் தோறும் பக்தர்பால் இறங்குமுன் மனமும்
பச்சையே உந்தன் மலையும் பசுமலை வாழும் பரமனே பாவநாசகனே
- அருட்கவி தவத்திரு. சாதுராம் சுவாமிகள்.

பசுமலை கிரிவலம் தருமே பலநலம்!
பசுமலை தரிசனம் பாபவிமோசனம்!
வள்ளி தெய்வானை வளர் இருபுறமும்
மெல்லியவள் பெற்றெடுத்த பாலா!
புள்ளி மயிலேறி வரும் புண்ணியனே
நண்பர்கள் தம் நற்றுயரைபோக்கு
பசுமலை முருகா!

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் *கோ கிரி* என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்–**08** ம் தேதி **22.03.2026 ஞாயிற்றுக்கிழமை,** சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் **மயூர துவஜாரோகணமும்** அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் – 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் – 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் – 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் – 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துவஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் – 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

பிளாஸ்டிக் உபயோகிப்பதை தவிர்ப்போம்.
தாய்மண்ணை காப்போம்.

இங்ஙனம்.
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285

# பல்சுவை களஞ்சியம்









## பூனைக்கு ஒரு காலம்

ஒரு காட்டில் சிங்கம் கல்யாணம் ரிஷப்ஷன் வைத்தது.

எல்லா விலங்குகளும் விருந்து சாப்பிட்டு விட்டு, சிங்கம் ஜோடியை நாலு அடி தள்ளி நின்னே வாழ்த்திட்டு போச்சு.

மாப்பிள்ளை சிங்கமோ கர்வம் தாங்கல. திடீர்னு ஒரு பூனை மட்டும் சரசரன்னு சிங்கம் கிட்ட போயி கைகொடுத்து வாழ்த்து சொல்லிடுச்சு.

மாப்பிள்ளை சிங்கத்துக்கு க்கு ஆத்திரம் வந்துடுச்சு. பூனையைப் பார்த்து 'ஏய் இத்தனை பேரு என்னைய தூரம் நின்னு




வாழ்த்திட்டு போறாங்க.. உனக்கு மட்டும் எவ்வளவு தைரியம் இருந்தா என் கிட்ட வந்து வாழ்த்து சொல்லுவ" நான் சிங்கம்டான்னு சொல்லுச்சாம்...

அந்த பூனையோ கெக்க பிக்கனு சிரிச்சிட்டே... அடேய் கிறுக்கு பயலே! நானும் கல்யாணத்துக்கு முன்ன சிங்கம்தான்டா-ன்னு சொல்லிட்டு ஓடி போச்சு..!

திருமணத்திற்கு பின் சிங்கம் கூட, பூனையாக மாறும்.

## காரணம்

சித்தார்த்தனுக்கு எந்த கலைப் பொருட்களைப் பார்த்தாலும் வாங்க ஆசை , அந்த ஆசையை மனைவியிடம் சொன்னான்.

”அதெல்லாம் வேணாங்க இப்பத்தான் கல்யாணமாகி மூணு மாசமாச்சு அதுக்குள்ளாற அதைக் காரணமா வைச்சு என்னை வெறுத்தீட்டீங்கன்னா”என்று மனைவி யசோதரா தடுத்து கொண்டிருந்தாள்

..... ஒரு நாள் ”என்னங்க ! ஒங்க ஆசையை விருப்பம் போல செய்யலாம் பச்சைக் கொடிக் காட்டி விட்டாள். காரணம் கையில் ஒரு குழந்தை

பழைய கலைப் பொருட்கள் விற்பனைக் கூடத்திற்கு போனான். அந்த அழகான சிலையை வாங்கி வந்து ஹாலில் டீ.வியின் முன்புற டேபிளில் வைத்தான்.

வீடு முழுவதும் அமைதியாய் இருப்பதை உணர்ந்தான். ஆனால் மூன்றே மாதம்... அவனுக்குள் மாற்றம்..

முதலில் மனைவியிடம் சிடுசிடுப்பு,. குழந்தையைக் கொஞ்சுவதில்லை. எந்நேரமும் பணம் பணம் பணம் என்று அலைந்து கொண்டிருந்தான். ஒரு ரூபாய் அதிகம் செலவழித்தாலும் வீடு போர்களமாக்கி விடுகிறான்.

எல்லாவற்றிற்கும் காரணம் அந்த சிலைதான் என்று நம்பி அதை வெறுப்போடு பார்த்து வந்தாள் .

ஒரு நாள் கவலையோடு டி.வீ- டேபிளை சுத்தப்படுத்தும் பொழுது கைத்தவறி அந்த சிலை கீழே விழுந்து. அதிலிருந்து தங்க நாணயங்கள் கலகலவென உருண்டோடியது.

”கணவன் மனமாற்றத்திற்கான காரணத்தை உணர்ந்து சிலையை ஒட்டுவேலை செய்து டேபிளில் வைத்து வணங்கினாள்..



## மீம்ஸ்







## விடுகதை




| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |

## அலங்காரம்

கல்யாணத்துக்கு நாள் நெருங்கி கொண்டே இருந்தது. சௌமியா அவசரமாக அவசரமாக பியூட்டி பார்லருக்கு கிளம்பினாள்.


"பொறுமையா எல்லாத்தையும் நல்ல பார்த்து பார்த்து அழகு பண்ணிட்டு வாம்மா, அவசரப்படாதே, அடுத்த வார கல்யாண வீடியோவிலேயும், ஃபோட்டோவிலேயும் நீ அழகா தெரியணும்" .

மெதுவா போயிட்டு வா". ஒன்பது கெஜ புடவையை மறக்காம எடுத்துண்டையா? என்றி சௌமியாவின் தாயார் சரோஜாவின் குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.



அலங்காரங்களை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய சௌமியாவை, ஒன்பது கெஜம் புடவையிலே நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா ? முகத்தையும் சிம்பிளா அலங்காரம் பண்ணிருக்காங்க, என் கண்ணே பட்டுடும் போல இருக்கு என்று அவளை ரசித்தாள் சரோஜா.

சரிம்மா, நான் போய் என் கூட வேலை செய்யும் ஆபீஸ்காரங்க எல்லாருக்கும் பத்திரிக்கை கொடுத்துட்டு வந்துடுறேன் என்று கூறியவாறு வெள்ளித்தட்டுடன் "அவளது பெற்றோர் 'சரோஜா நீலகண்டன்' இன் சஷ்டியப்தபூர்த்தி பத்திரிக்கையும்" எடுத்துக்கொண்டு கிளம்பினாள் சௌமியா.!!!



### தன்னம்பிக்கை வரிகள்

நீ தடுமாறி கீழே விழும் போது
யாரும் தூக்கி விட வரவில்லையே
என்று கவலைப்படாதே!
அது நிரந்தரம் இல்லை
உன் கைகளும் உன் விடாமுயற்சியும்
உன்னுள் இருக்கும் வரை
நீ எதையுமே வெல்லலாம்!

## ஜோக்ஸ்



காகா ஏன் கருப்பாக இருக்கு
அது வெயிலில் சுத்துது
அதனால்

##################################################

மரம் ஏன் பச்சையாக இருக்குது
அதுக்கு நாம் தினமும் பச்சை தண்ணீர் ஊற்றிறோம்

##################################################

ஒரு யானை வேகமாக ஓடுது இந்த பக்கம் கரும்பு கடை இந்த சைடு வாழைப்பழம் கடை முதலில் எதை வாங்கும்
ஓடி வந்ததால் மூச்சு வாங்கும்

##################################################

சிங்கம் பார்த்து யானை பயப்படது அதை பார்த்த கீழ் இருந்த எறும்பு யானை காதில் என்ன சொல்லும்
என் பிடி வந்து ஓலிஞ்சுகோன்னு எறும்பு சொல்லுசாம்

##################################################

காமெடி பீஸ்

தேர்தலுக்கு முன் வடிவேலுவிடம் கட்சிக்காரர்: “வைகைப் புயல் சார்..! நீங்கதான் இந்த தேர்தல்ல எங்களுக்கு பிரசார பீரங்கி..!”

தேர்தல் முடிவிற்குப் பின் வடிவேலு: இப்படி உசுப்பேத்தி உசுப்பேத்தியே உள்ள போட்டிருக்கிற ட்ரவுசர அத்து வுட்டுடானுங்களே!

##################################################




வடிவேலு: ஹலோ.. நான் வட்ட செயலாளர் வண்டு முருகன் பேசறேன்... எதிர்முனை: நீ வட்ட செயலாளரா இரு.. சதுர செயலாளரா இரு... இன்னும் கொஞ்ச நேரத்துல அட்ரஸ் இல்லா செயலாளரா ஆகப் போற...

வடிவேலு: மனதிற்குள்.. பாடி ஸ்ட்ராங்கு.. பேஸ்மெண்ட் வீக்குங்கறதை பயபுள்ள கண்டுபிடிச்சிட்டானோ...

##################################################

நண்பன் 1: எனக்காக நீ இருக்கன்னு எனக்கு முன்னமே தெரிஞ்சிருந்தா பொறக்கும் போது கூட நான் அழுதிருக்க மாட்டேன் மச்சி.

நண்பன் 2: விட்றா. ஃபீல் பண்ணாத

நண்பன் 1: இல்ல மச்சி. அவ்ளோ பெரிய காமெடி பீஸ்டா நீ. உனக்கு தெரியாது.
நண்பன் 2: கிர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்



# சமையல் அறை ஸ்பெஷல்



## உணவு சமைக்கும் போது...



பாகற்காய் பழுத்துவிடாமல் இருக்க பாகற்காயை வில்லைகளாக்கி உப்பைத் தூவி ஒரு பாத்திரத்தில் குலுக்கி வைத்துவிட்டால் இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் பாகற்காய் அப்படியே இருக்கும். ஃபிரிட்ஜில் வைத்தால் ஒரு வாரம் வரையில் பிரெஷ்ஷாக இருக்கும்.

கீரை மசியல் செய்யும்போது புளிக்கு பதிலாக பொடியாக அரிந்த மாங்காயைச் சேர்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

ஜவ்வரிசியைச் சாதம்போல் வேகவைத்து பிறகு மோரில் கரைத்து உப்பு போட்டுச் சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும். வயிற்றுப்போக்கும் நிற்கும்.

திரட்டுப்பால் செய்யும்போது சிறிய மெல்லிய எவர்சில்வர் தட்டை அதனுள் போட்டால் அடிப் பிடிக்காமலும், பால் பொங்காமலும் இருக்கும்.

பருப்பை குக்கரில் சமைக்கும் போது சிறிது மஞ்சள் தூளையும், ஒரு டீஸ்பூன் நெய்யையும் சேர்த்தால் மணமாகவும், சுவையாகவும் இருக்கும்.

ரசத்தை இறக்குவதற்கு முன் கறிவேப்பிலைப்பொடி தூவி இறக்கினால் மணமாக இருக்கும்.

சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் பட்டுவிட்டால் உருளைக்கிழங்கைச் சிறிது அரைத்துப் பூசினால் கொப்பளங்கள் ஏற்படாது.

ஜவ்வரிசி பாயசம் செய்வதற்கு முன், ஜவ்வரியை லேசாக வறுத்து பிறகு அதில் வெந்நீரை ஊற்றி அரை மணி நேரம் அப்படியே வைக்கவும். பிறகு பாயசம் செய்தால் சீக்கிரம் வெந்துவிடும்.

காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்க கூடாது. ஏன் என்றால் காய்கறிகளில் உள்ள வைட்டமின் சத்துகள் போய்விடும்.

காய்ந்த மிளகாயை வறுக்கும்போது நெடி வரும். அவை வராமல் இருப்பதற்கு சிறிது உப்பு போட்டு வறுத்தால் நெடி வராது.

பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.

முட்டைகோஸில் உள்ள தண்டை வீணாக்காமல் சாம்பாரில் போட்டு சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

கறிவேப்பிலை காயாமல் இருப்பதற்கு ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் காயாமல் இருக்கும்.

காய்கறிகளை அரிந்து பிரிட்ஜில் வைத்தால், காய்கறிகளில் உள்ள சத்து குறைந்து விடும்.

சமையலில் உப்பு அதிகமாகி விட்டால் உருளைகிழங்கை அரிந்து போட்டால் உப்பை எடுத்துவிடும்.

உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.

## முந்திரி பருப்பு கேக்



தினமும் முந்திரி சாப்பிடுவது உடலினை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் முக்கிய உணவுப்பொருளாகும். முந்திரி பருப்பில் மாங்கனீசு, பொட்டாசியம், தாமிரம், இரும்பு, மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் செலினியம் கனிம தாதுக்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது. முந்திரியை அப்படியே சாப்பிடுவதை விட குழந்தைகள் விரும்பும் கேக் போன்று செய்து கொடுப்பதால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள்.

தேவையானப் பொருட்கள் :
முந்திரிப் பருப்பு - 1ஃ2 கிலோ
சர்க்கரை - 1ஃ2 கிலோ
ஏலக்காய் பொடி - 2 ஸ்பூன்
நெய் - 100 கிராம்

செய்முறை:
முந்திரி கேக் செய்வதற்கு முதலில் ஒரு வாணலியில் நெய் விட்டு அதில் முந்திரிப் பருப்பைப் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொண்டு, ஆறிய பிறகு மிக்ஸியில் போட்டுப் பொடியாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு சர்க்கரையில் சிறிது நீர் விட்டுப் பாகுப்போல காய்ச்சவும். சர்க்கரைப்பாகானது கம்பிப்பாகு பதத்திற்கு வந்தவுடன் அதில் முந்திரிப்பருப்புப் பொடி, ஏலக்காய் பொடி ஆகியவற்றை கலந்து, அதனுடன் சிறிது நெய் சேர்த்து ஐந்து நிமிடம் வைத்திருந்தப் பிறகு ஒரு தட்டை எடுத்து அதில் நெய்யைத் தடவி அதில் இந்த கலவையைக் கொட்டி, ஆறியப் பிறகு விருப்பமான வடிவத்தில் சிறு சிறு துண்டுகளாகக் கட் செய்யவும். சுவையான சத்துக்கள் நிறைந்த முந்திரி கேக் ரெடி.

## பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி !!



ஆரோக்கியமான உணவை உட்கொண்டால், நாள் முழுவதும் நன்கு சுறுசுறுப்புடன் செயல்பட முடியும். அதிலும் தினமும் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இப்போது சத்து நிறைந்த பச்சைப்பயிறு வைத்து பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வது எப்படி

தேவையானப் பொருட்கள் :
முழு பச்சைப்பயறு - 100 கிராம்
கோதுமை மாவு - 5 கப்
பெரிய வெங்காயம் - 2
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - கால் டீஸ்பூன்
சீரகத்தூள் - அரை டீஸ்பூன்
பூண்டு - 5 பல்
பச்சை மிள்காய் - 2
தேங்காய் துருவல் - கால் கப்
நறுக்கிய கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு

செய்முறை :
பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வதற்கு முதலில் ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவை போட்டு, தேவையான அளவு தண்ணீர், எண்ணெய், உப்பு சேர்த்து நன்கு பிசைந்து வைத்துக்கொள்ளவும்.
பின்பு ஒரு பாத்திரத்தில் பச்சைபயறை போட்டு, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, குறைந்தது 5 மணி நேரம் ஊறவைக்கவும்.
பின்பு மற்றொரு பாத்திரத்தில் ஊறிய பச்சைப்பயறைப் போட்டு வேக வைத்து, அதில் உள்ள தண்ணீரை வடித்துவிடவும்.
அடுத்து வெங்காயத்தைப் பொடிப்பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். அடுத்து பூண்டை தோலுரித்து தட்டி வைத்துக்கொள்ளவும்.
அடுத்து தேங்காய் துருவல், பச்சை மிளகாய், மஞ்சள், சீரகத்தூள் ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். அடுத்து ஒரு வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், அதில் கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம், தட்டிய பூண்டு ஆகியவற்றைப் போட்டு தாளித்து, அதனுடன் அரைத்து வைத்துள்ள மசாலாவை சேர்த்து வதக்கவும்.

பின்பு அதனுடன் வேகவைத்த பச்சைப்பயறை சேர்த்து, அதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி இறக்கினால் பச்சைப்பயறு ஸ்டஃபிங் ரெடி.

அடுத்து பிசைந்து வைத்துள்ள கோதுமை மாவை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி, உருண்டைகளுக்கு நடுவில் குழி செய்து அதனுள் பச்சைப்பயறு ஸ்டஃபிங் வைத்து மூடி சப்பாத்திகளாக தேய்த்து, தோசைக்கல்லில் போட்டு இரண்டு புறமும் நன்கு வேக வைத்து எடுத்தால் பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி ரெடி.

A s Govinda rajan
Kodambakkam Chennai

## முட்டைக்கோஸ் சாலட்



பச்சை இலைக் காய்கறிகளில் முக்கியமான முட்டைக்கோஸ்ஸில் வைட்டமின் ஏ, இ, சோடியம், இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் புரதம், தாது உப்புக்கள் ஆகிய சத்துக்கள் உள்ளன. உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உறுதுணையாக இருப்பது முட்டைக்கோஸ்.

பயன்கள் :

முட்டைகோஸை பச்சையாக அரைத்து 60 மில்லி அளவுக்குக் சாறு எடுத்து குடித்து வர தொண்டைப் புண் குணமாகும்.

சர்க்கரை நோயாளிகள் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் சர்க்கரையின் அளவு குறையும்.

ஜலதோஷத்தினால் துன்பப்படுபவர்கள் முட்டைக்கோஸை நன்றாக வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் சளித்தொல்லையிலிருந்து விடுபடலாம்.

தினமும் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் நரம்புகளானது சீராக இயங்கும்.

முகப்பருக்கள் இருப்பவர்கள் வாரம் இருமுறை உணவில் சேர்த்து வந்தால் பருக்கள் நீங்கி முகம் பளபளப்பாகும்.

முட்டைக்கோஸை பொடிப்பொடியாக நறுக்கி, அதனுடன் தயிர், வெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துச் சாப்பிட்டால் இளைத்த உடல் பெருக்கும்.

புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் முட்டைக்கோஸ்ஸிற்கு உண்டு.

தேவையானப் பொருட்கள் :
முட்டைக்கோஸ் - 1
வெங்காயம் - 2
வெள்ளரிக்காய் - 1
பச்சை மிளகாய் - 2
பாசிப்பருப்பு - 1 கப்
தக்காளி -2
எலுமிச்சை சாறு - 1 டீஸ்பூன்
கொத்தமல்லி இலை - சிறிது
இஞ்சி - 1 துண்டு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :
முட்டைக்கோஸை முதலில் பொடிப்பொடியாக நறுக்கி வேகவைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்பை வாணலியில் வறுத்து 15 நிமிடம் ஊற வைத்துக்கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய் முதலியவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இஞ்சியை தோல் சீவி விட்டு, துருவி எடுத்துக்கொள்ளவும். பிறகு ஊற வைத்துள்ள பாசிப்பருப்புடன் வேகவைத்துள்ள முட்டைக்கோஸ் மற்றும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், துருவிய இஞ்சி, கொத்தமல்லி இலை, உப்பு, எலுமிச்சை சாறு ஆகிய அனைத்தையும் ஒன்றாக கலந்து பரிமாறவும். சூப்பரான முட்டைக்கோஸ் சாலட் தயார்.

## வீட்டில் கேஸ் சிலிண்டர் உபயோகிக்கும் போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்!




பொதுவாக நகரங்களில் அனைத்து வீடுகளிலும் கேஸ் அடுப்பு இருக்கிறது. அனைவருக்கும் கேஸ் அடுப்பை பயன்படுத்தும் விதம் நன்கு தெரிந்திருக்கும்.

சமையல் சிலிண்டருக்கு முதல் முறையாக இணைப்புப் பெறும் போது, சமையல் கேஸ் பாதுகாப்பாக பயன்படுத்தும் முறை பற்றி தெரியாவிட்டால் சிலிண்டர் வினியோகிக்கும் நபரிடம் செயல்முறை விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

வெப்பமான பிற பொருட்களில் இருந்து சிலிண்டரை சில அடிகள் தள்ளி வைத்திருக்க வேண்டும். சிலிண்டரை பயன்படுத்தும் போது அதன் அருகில் மண்ணெண்ணெய் அல்லது வேறு வித எரிவாயு சம்மந்தமான அடுப்புகளை வைத்து பயன்படுத்தக் கூடாது. சிலிண்டர் வால்வின் உள்புறத்தில் ரப்பர் டியூப் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

சிலிண்டரில் கசிவு இருப்பதாக உணர்ந்தால் உடனே சோப்பு நீர் கலந்து சிலிண்டர் மீது ஊற்றினால் நீர்க் குமிழ் உருவாகும். இதைக் கொண்டு எரிவாயு கசிவை பரிசோதிக்க வேண்டும். எரியும் தீக்குச்சி மூலம் பரிசோதிக்கக் கூடாது.

நைலான் கயிற்றுடன் இருக்கும் பாதுகாப்பு மூடி எப்போதும் சிலிண்டரிலேயே பிணைக்கப்பட்டு இருக்க வேண்டும். கேஸ் கசிவு இருப்பதை அறிந்தால் பாதுகாப்பு மூடியால் வால்வை மூட வேண்டும்.

## சமையலறையில் மறைந்திருக்கும் கிருமிகளை சுத்தம் செய்தல்!



சமையலறையில் தான் பெரும்பாலான பாக்டீரியா மற்றும் கிருமிகளின் பெருக்கம் அதிகமாக இருக்கும். அவ்வாறு மறைந்திருக்கும் நுண்ணுயிரிகள் சமையல் அறையில் காய்கறி வெட்டும் பலகைகள், அலமாரி கைப்பிடிகள் மற்றும் உணவு பாத்திரங்களில் எளிதில் பரவும்.

அதனால் நம் உடம்பில் உள்ள செரிமான மண்டலத்தின் செயல்பாட்டை குறைத்து, நோய் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

நோயில் இருந்து நம்மை பாதுகாக்க எந்த ஒரு வேலையை செய்தாலும், உணவு உட்கொள்ளுவதற்கு முன்பும், பின்பும் அவ்வப்போது கைகளை சுத்தமாக சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு கழுவுதல் வேண்டும்.

சுத்தமான குடிநீரில் சமையல் செய்ய வேண்டும். நல்ல தண்ணீர் பயன்படுத்த வேண்டுமானால், குறிப்பாக மழை காலங்களில் கிணற்று தண்ணீர் அல்லது மழை நீரை சமையலுக்கு பயன்படுத்துவதை தவிர்க்கவும், இல்லை என்றால் அந்த நீரை கொதிக்க வைத்து உபயோகிக்க வேண்டும்.

பாத்திரங்களை கழுவ பயன்படுத்தும் ஸ்பாஞ்சக்களில் கிருமிகள் தங்கும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. மேலும், சிங்க்கை கழுவ வேறு ஸ்பாஞ்சை பயன்படுத்த வேண்டும். பாத்திரம் கழுவிய ஒரே ஸ்பாஞ்சை சிங்க்கை கழுவ பயன்படுத்த கூடாது.

மேலும், இறைச்சிகளை குளிர்சாதன பெட்டியில் வைத்து பயன்படுத்துவதால், அதில் இருக்கும் நுண்ணுயிரிகள் எப்போதும் குளிர்சாதனப் பெட்டியில் ஏதாவது இடத்தில் படிந்திருக்கும். இறைச்சிகளுக்கு பயன்படுத்திய கத்தி அல்லது ஸ்பூன் போன்றவற்றால் அலமாரியில் உள்ள பாத்திரங்கள் மற்றும் இறைச்சி உள்ள பாத்திரத்தை நன்கு சுத்தம் செய்யாமல் இருப்பதால் கிருமிகள் நம்மை தாக்கும்.

அதுமட்டும் அல்லாமல் கரப்பான் பூச்சி, எறும்புகள் மற்றும் பாக்டீரியா போன்றவை ஈரப்பதம் மற்றும் இருட்டு நிறைந்த இடங்களில் அதிகமாக வர வாய்ப்புள்ளது. எனவே வீட்டில் உள்ள பைப்-களை அனைத்தும் வாரத்திற்கு ஒரு முறை சூடான நீரைக் கொண்டு கழுவினால் நுண்ணுயிர்கள் அழிந்து விடும்.

பொதுவாக ஆடைகளை மட்டுமே நாம் துவைத்து சுத்தமாக வைத்துகொள்வோம். ஆனால் நாம் சமையலறையில் பயன்படுத்தும் துண்டுகளை கவனத்தில் கொண்டு சுத்தம் செய்ய மறந்துவிடுவோம். அதுவும் அந்த துண்டுகள் ஈரத்தன்மை கொண்டு உலராமல் இருப்பதால், சமையல் அறையில் கிருமிகள் அதிகமாக பரவிவிடும். அதனால் தினமும் அந்த துண்டுகளை துவைத்து உலர வைத்து பின்பு பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு சுத்தம் செய்து வந்தால், நம்மை அறியாமல் பரவும் கிருமிகளை, சமையலறையை சுத்தம் செய்வதன் மூலம் நாம் ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும்.



# மார்ச் 30 முதல் ஏப்ரல் 1 வரை 3 நாட்கள் வசந்த உற்சவம்



**திருப்பதி,மார்ச் 24:**
திருப்பதி ஏழுமலையான் கோவிலில் மார்ச் 30 முதல் ஏப்ரல் 1 வரை 3 நாட்கள் வசந்த உற்சவம் விமரிசையாக நடைபெறவுள்ளது. மார்ச் 31-ல் மலையப்பசாமி தங்க தேரில் எழுந்தருளி நான்கு மாட வீதிகளில் உலா வரவுள்ள நிலையில், தினமும் மதியம் சிறப்பு ஸ்நாபன திருமஞ்சனம் நடத்தப்படவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு கல்யாணோற்சவம் உள்ளிட்ட பல்வேறு ஆர்ஜித சேவைகளைத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது.

# சீமான் முதல் பரப்புரை



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று (மார்ச் 23) முதல் பரப்புரையை தொடங்கியுள்ளார். முதற்கட்டமாக திருத்தணியில் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அப்போது பேசிய அவர், “தமிழ்நாட்டில் சாராயம் என்ற திரவப் போதை, கஞ்சா, மெத்தபெட்டமைன் போன்ற திடப் போதை புழக்கம் அதிகரித்துள்ளது. வீட்டை விட்டு வெளியே வர முடியுமா? என்ற அளவுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. வாக்கிற்கு காசு கொடுக்கும் இடத்தில் சேவை என்ற சொல் செத்து விடுகிறது” என்றார்.

# வாக்காளர் அளிக்கும் வாக்கினை சரிபார்க்கும் இயந்திரத்தை நேரில் ஆய்வு





**திருவண்ணாமலை மார்ச் 24:**
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு வைப்பறையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.
தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சீர்காழியில் தமிழக நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கம் சார்பில் 16-ம் ஆண்டு உலக நுகர்வோர் தின விழா கருத்தரங்கம்



**சீர்காழி , மார்ச் , 24:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தமிழக நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கம் சார்பில் 16 -ம் ஆண்டு உலக நுகர்வோர் தின விழா கருத்தரங்கம் பாண்டுரங்கன் பஜனைமடத்தில் நடைப்பெற்றது.
மாநில அமைப்பாளர் என். சி.ராஜா தலைமை வகித்தார். மாவட்ட துணை பொது செயலாளர் ஆர். சுரேஷ்குமார் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் ஜி. முனுசாமி, மாவட்ட ஆட்சி மன்ற குழு அமைப்பாளர் எம். அன்வர்சுல்தான், மாவட்ட துணை தலைவர் கே.செல்வமுத்துகுமணன், மாவட்ட துணை செயலாளர் ஜி.இராஜாராமன் முன்னிலை வகித்தார்கள். பட்டி மன்றம், பாட்டு மன்றம் நடுவர் டாக்டர் கே.ஆர். சரவணன், மாநில செயற்குழு உறுப்பினர் கீழக்கரை கே.ஆர். திருமேனி, மாவட்ட செயலாளர் எம். முத்துவேலு , மாவட்ட செயற்குழு உறுப்பினர் டாக்டர் பி.அக்ஷயா சிறப்புரையாற்றினார்கள். கொள்ளிடம் ஒன்றிய தலைவர் சுவாமிநாதன், மயிலாடுதுறை நகர செயலாளர் கோபால் , மாவட்ட செயற்குழு உறுப்பினர் கலி என்கிற கலியமூர்த்தி , கொள்ளிடம் நகர செயலாளர் மாதவன், சீர்காழி நகர செயலாளர் பன்னீர்செல்வம் , கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் செல்வராஜன் , சீர்காழி நகர பொருளாளர் சீத்தாராமன் , மயிலாடுதுறை நகர தலைவர் தர்மராஜன், கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் சிகாமணி மற்றும் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர் . கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவ,மாணவிகளுக்கு நோட்டு, எழுது பொருட்கள், பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. கடலூர் மாவட்ட அமைப்பாளர் வி.லட்சுமிகாந்தன் நன்றி கூறினார்.

# இரட்டை இலக்கத் தொகுதிகள் + ஒரு மாநிலங்களவை இடம்! விசிக தீர்மானம்



**சென்னை, மார்ச் 24:**
விடுதலைச்சிறுத்தைகள் கட்சி உயர்நிலைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து...
சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இரட்டை இலக்கத் தொகுதிகளை கேட்டுப் பெற வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் இன்று (மார்ச் 23) நடைபெற்ற உயர்நிலைக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இரட்டை இலக்கத் தொகுதிகளுடன் ஒரு மாநிலங்களவை இடத்தைப் பெற வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
சட்டபேரவைத்தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீட்டுப்பேச்சுவார்த்தையில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.
அந்தவகையில் திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மமக உள்ளிட்ட கட்சிகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
இன்று மாலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 இடங்கள் முடிவான நிலையில், விசிக மற்றும் புதிதாக இடம்பெற்றுள்ள தேமுதிகவுக்கு தொகுதிகள் இன்னும் இறுதியாகவில்லை.
இந்நிலையில், சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தனியார் விடுதியில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் நேற்று (மார்ச் 23) நடைபெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள ரவிக்குமார் உள்பட, கட்சிப் பொறுப்பில் இருக்கக் கூடிய நிர்வாகிகள் 32 பேர் பங்கேற்றனர்.
தொல். திருமாவளவன் தலைமையில், 3 மணிநேரத்துக்கும் மேலாக இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் திமுகவிடம் இரட்டை இலக்கத் தொகுதிகளை கேட்டுப்பெற வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், 2028 தேர்தலில் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் இடத்தைப் பெற வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
திமுக கூட்டணி பங்கீட்டுக் குழுவுடன் விசிக இதுவரை 2 முறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. தொகுதிப் பங்கீடு இன்னும் இறுதி செய்யப்படாததால், நாளை மீண்டும் திமுக குழுவைச் சந்திக்க வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# செங்கரைப்பாளையத் திலிருந்து பூந்துறைக்கு முளைப்பாரி



**ஈரோடு, மார்ச் 24:**
ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், பூந்துறையில் 25.03.2026 புதன்கிழமை நடைபெறும் மூன்று கோயில்களின் கும்பாபிஷேகங்களை முன்னிட்டு செங்கரை பாளையம் பொதுமக்கள் ஸ்ரீ மாகாளியம்மன் கோவிலில் முளைப்பாரி போட்டு வைத்தனர்.
எட்டு நாட்கள் கழிந்த பிறகு நன்கு வளர்ந்த முளைப்பாரிகளை ஆர்வத்துடனும் உற்சாகத் துடனும் பூந்துறை ஈஸ்வரன் கோவில் அங்காளம்மன் கோவில் மற்றும் பெருமாள் கோவில்களுக்கு எடுத்துச் செல்லும் செங்கரைப்பாளையம் பொதுமக்கள்.
நன்றி! வணக்கம்!
வாழ்க வளமுடன்



மேற்காசிய போர் சூழலால் ஹார்முஸ் ஜலசந்தி முடங்கியுள்ள நிலையில், எரிபொருளுடன் ’பைன் கியாஸ்’ மற்றும் ’ஜெக வசந்த்’ ஆகிய இரு இந்திய கப்பல்கள் பாதுகாப்பாக தாயகம் நோக்கி பயணத்தைதொடங்கியுள்ளன. ஈரானிய அதிகாரிகளின் உரிய அங்கீகாரத்துடன் இந்த பயணம் மேற்கொள்ளப்படுவதால், இக்கப்பல்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது. 28 கப்பல்களில் 4 கப்பல்கள் இந்திய துறைமுகங்களை வந்தடைந்துள்ள நிலையில், மீதமுள்ள கப்பல்களும் விரைவில் பாதுகாப்பாக வந்து சேரும் என குறைப்படுகிறது.

# சிம்ஹ வாகனத்தில் ஸ்ரீகோதண்ட ராமர்




ஸ்ரீ அலர்மேல் மங்கை தாயார் சமேதஸ்ரீ பிரசன்ன வெங்கட நரசிம்ஹ பெருமாள் கோவில், ராகுநாதபுரம் (மேற்கு சாய்டபெத்) ஸ்ரீகோதண்ட ராமர் சிம்ஹ வாகனத்தில் உள்-புறப்படுத்து, ஸ்ரீராம நவமி விழாவின் 4ஆம் நாள்.

# புதுச்சேரியில் 3 தொகுதிகளில் போட்டி – தொகுதி பங்கீடு குறித்து பேசிய பிரேமலதா



**சென்னை, மார்ச் 24:**
சென்னைகோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் நிர்வாகிகளுடன் பொதுச்செயலாளர் பிரேமலதா ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் கூட்டணியில் தே.மு.தி.க.வுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள், வெற்றிவாய்ப்புள்ள தொகுதிகள் என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.
இதன்பின் செய்தியாளர்கள் சந்திப்பில் பிரேமலதா கூறியதாவது:-
* தொண்டர்கள் விருப்பத்திற்கு ஏற்ப தே.மு. தி.க. கூட்டணி அமைத்துள்ளது. மகத்தான வெற்றி கிடைக்கும்.
* தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்கு எங்களை அழைக்கவில்லை என்பது கற்பனை செய்தி.
* தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பாக ஓரிரு நாட்களில் தே.மு.தி.க.வை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.
*தொகுதிகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை அறிவிப்பு வெளியாகும்.
* புதுச்சேரியில் 3 தொகுதிகளில் தே.மு.தி.க. போட்டியிடுகிறது. பிற்பகல் 3 மணிக்குள் வேட்புமனு தாக்கல் செய்வார்கள் என்றார்.

ரவுசு மணி

நம்மை நாமே
செதுக்கிக்
கொள்ள
எந்தவித உளியும்
தேவையில்லை...

பலர் செய்யும்
ஏளனமும்
சிலர் செய்யும்
துரோகமுமே
போதும்....

V.முத்து
ராமகிருஷ்ணன்



# லஜக நிறுவனர் ஜோஸ் சார்லஸ் மார்டின் சொத்து மதிப்பு என்ன?




**சென்னை, மார்ச் 24:**
லாட்டரி அதிபர் மார்டின் மகனான ஜோஸ் சார்லஸ் மார்டின் லட்சிய ஜனநாயக கட்சி தலைவராக உள்ளார். அவர் என்டிஏ கூட்டணியில் காமராஜர் நகர், நெல்லித்தோப்பில் இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அவரது சொத்து மதிப்பு முழு விவரம்: ஜோஸ் சார்லஸ் மார்டின் கையிருப்பாக ரூ.20.59 லட்சமும் அவரது மனைவி சிந்து ஸ்ரீசார்லஸிடம் ரூ.1.82 லட்சமும் உள்ளது. கார்களில் ரூ.66.15 லட்சம் மதிப்புள்ள பென்ஸ் காரும், ரூ.1.29 கோடியிலான டொயோட்டோ வெல்பயர் கார் ஆகியவை உள்ளன.
ஜோஸ் சார்லஸிடம் ரூ.25.67 கோடி மதிப்பிலான 17 ஆயிரத்து 525 கிராம் தங்கமும், ரூ. 44.87 கோடி மதிப்பிலான 1950.353 கேரட் வைரங்களும், ரூ. 3.77 கோடியிலான 134.98 கிலோ வெள்ளியும், ரூ.38. 53 கோடி வாட்சுகளும், ரூ.1.57 லட்சம் முத்துகளும் உள்ளன. மேலும் டிடிஎஸ் உரிமைக் கோரலில் ரூ. 1.95 கோடி வந்துள்ளன. அவரது மனைவியிடம் ரூ.5.35 கோடி மதிப்பிலான 3655 கிராம் தங்கமும், ரூ. 2.10 கோடி மதிப்பிலான 485.5 கேரட் வைரங்களும், ரூ. 1.68 கோடி மதிப்பிலான 60 கிலோ வெள்ளியும், ரூ.1.14 கோடி வாட்சுகளும் உள்ளன.
ஜோஸ் சார்லஸிடம் விவசாயம் அல்லாத நிலம் ரூ.192 கோடி மதிப்பில் உள்ளது. அவரது மனைவியிடம் ரூ. 60 லட்சம் மதிப்பிலும் உள்ளன. குடியிருப்பு கட்டடங்கள் ரூ.269 கோடி மதிப்பில் உள்ளன. அவரது மனைவியிடம் ரூ.60 லட்சம் மதிப்பில் உள்ளன. சொத்தில் ரூ.19.45 கோடி கடனும், கார் லோன் ரூ.1.28 கோடியும், கிரெடிட் கார்டு லோன் உள்ளூர் வங்கியில் ரூ.5.91 லட்சமும், வெளிநாட்டு வங்கியில் ரூ. 1.03 கோடியும் உள்ளன.கடந்த நிதியாண்டில் ஜோஸ் சார்லஸுக்கு ரூ.59.37 கோடி வருவாயும், அவரது மனைவிக்கு ரூ.16.63 லட்சம் வருவாயும் வந்தது. அசையும் சொத்துகள் ஜோஸ் சார்லஸிடம் ரூ.328 கோடியும், மனைவியிடம் ரூ.10.61 கோடி அளவிலும் உள்ளன. அதேபோல் அசையா சொத்துகள் ஜோஸ் சார்லஸிடம் சொந்தமாக வாங்கியது ரூ.102 கோடி அளவிலும், பரம்பரையாக வந்தது ரூ.167 கோடியும் உள்ளன. அவரது மனைவியிடம் 60 லட்சம் அளவிலும் உள்ளன. கடன்கள் மொத்தமாக ரூ. 210 கோடி அளவில் உள்ளன.பல்வேறு வங்கி டெபாசிட்டுகளில் ரூ. 200 கோடி அளவில் உள்ளன. அவரது மனைவி பெயரில்ரூ. 3.43 லட்சம் டெபாசிட்டுகள் உள்ளன.
ஜோஸ் சார்லஸ் ஷேர்களில் ரூ.14.28 கோடி அளவுக்கு முதலீடு செய்துள்ளார். அவரது மனைவி ரூ.3.6 லட்சம் மதிப்பு ஷேர்களில் முதலீடு செய்துள்ளார். ஜோஸ் சார்லஸ் அட்வான்ஸ் வாங்கிய வகையில் ரூ.195 கோடி அளவுக்கும் அவரது மனைவிக்கு ரூ.24.2 லட்சமாகவும் தொகையுள்ளது.

# விவசாயிகள் போதிய வருமானமின்றி தவிக்கின்றனர்



தமிழகத்தில் வாழை விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், அண்டை மாநிலங்களின் கொள்முதல் குறைவால் விவசாயிகள் போதிய வருமானமின்றி தவிக்கின்றனர். தங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வாழைத்தார்களுக்கான கொள்முதல் விலையை அரசே நிர்ணயிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தற்போது ஆந்திராவிற்கு மட்டும் மிக குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதால், நஷ்டத்தை தவிர்க்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சுற்றுலா: கொச்சியின் டாப் 7 சுற்றுலா இடங்கள்!

இயற்கை சூழல் நிறைந்த கட்டிடங்கள், டெய்லி தோட்டங்கள், கடற்கரைகள் இவற்றைப் பார்க்கவேண்டுமா? இதற்கு சரியான சுற்றுலா செல்ல வேண்டிய இந்த இடங்களை தேர்ந்தெடுத்து பார்க்கலாம். அதில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள்.



1. செராய் கடற்கரை – கொச்சி

இந்தியாவில் கேரளாவின் சிறந்த கடற்கரையில்ஒன்றாகசெராய்கடற்கரை விளங்குகிறது. எர்ணாகுளத்தில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் கிராம சூழலில் அமைந்துள்ள இந்த கடற்கரை மணல் பரப்பு நீச்சல் மற்றும் நீர் நடவடிக்கைகளுக்கும் சிறந்தது. இங்கு டால்பின் மீன்களை எளிதாக காணலாம். புகைப்படக் கலைஞர்கள் தங்களுக்கு பிடித்த விருப்பமான புகைப்படங்களை எடுக்கலாம். பசுமையான நெல் வயல்கள் மற்றும் தென்னந்தோப்புகள் உண்டு.

இங்கு சூரியன் உதிப்பதையும் மறைவதையும் பார்த்து உட்கார்ந்து ஓய்வெடுக்க இது ஒரு சிறந்த இடம் கேரளாவில் மிகவும் காதல் நிறைந்த கடற்கரையில் இதுவும் ஒன்று. இங்கு கடல் காற்று மட்டுமல்ல அமைதியான காதல் நிறைந்த இடமாகவும் விளங்குகிறது தேன் நிலவு கொண்டாடும் புது மணத் தம்பதியருக்கு ஏற்ற இடமாகும்.

2. கேரளா வரலாற்று அருங்காட்சியகம்

கேரளாவின் பழமையான கலை மற்றும்வரலாற்றுஅருங்காட்சியங்களில் இது ஒன்றாக கருதப்படுகிறது. கொச்சியின் பயணத்தில் முதலில் பார்க்க வேண்டிய இடங்களில் இதுவும் ஒன்றாகும். கேரளாவின் கொச்சின் வளமான வரலாற்று மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை காட்டும் கண்காட்சிகளில் அழகான கலப்பைப்புகளை இங்கு காணலாம். திங்கள் தவிர ஒவ்வொரு நாளும் காலை 10 மணிக்கு திறந்து மாலை 5 மணிக்கு மூடப்படுகிறது.

3. ஃபோர்ட் கொச்சி

ஃபோர்ட் கொச்சியில் ஒரு அற்புதமான சூரிய அஸ்தமனத்தைக் கண்டுமகிழலாம்.சூரியஅஸ்தமனத்தில் ஒரு சரியான நடைபயணமும் செய்யலாம். கடற்கரையில் குளித்தல் நீச்சல் நடவடிக்கைகள் இங்கு செய்ய அனுமதிக்கப் படுவதில்லை. சுவையான கடல் உணவுகள் ஷாப்பிங் கேரளாவின் பாரம்பரிய மற்றும் நடன வடிவமான கதகளி நிகழ்ச்சிகளை புத்தாண்டு தினத்தன்று கண்டுக்களிக்கலாம்.



4. டச்சு அரண்மனை

போர்த்துக் கீசியர்களால் கட்டப்பட்டு 1555 ஆம் ஆண்டு கொச்சின் முன்னாள் மன்னர் வீர கேரள வர்மாவுக்கு வழங்கப்பட்ட இந்த அரண்மனை 1633 ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் கடுமையாக வேலை செய்து கட்டிடத்தை புதுப்பித்ததால் இதுபுகழ்பெற்றது. கொச்சிமன்னர்கள் இந்த இரட்டை மாடி கட்டமைப்பின் மைய மண்டபத்தில்தான் தங்கள் முடி சூட்டு விழா சடங்குகளை செய்தனர்.

இங்குள்ள அறைகளில் பிற சிறந்த இந்திய இதிகாசங்களான ராமாயணம் மற்றும் மகாபாரதர் காட்சிகளை சித்தரிக்கும் ஓவியங்கள் உள்ளன. இந்த டச்சு அரண்மனை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். வெள்ளிக்கிழமைகளில் கிடையாது.

5. லோஃபர்ஸ் கார்னர் பிரின்சஸ் தெரு: ஃபோர்ட் கொச்சியில் கட்டப்பட்ட ஆரம்பகால தெருக்களில் ஒன்றாக ஐரோப்பிய நேர்த்தியுடன் கூடிய பிரின்சஸ் தெரு, பழைய கலாச்சார உலக அழகை வெளிப்படுத்துகிறது. இந்த அழகிய தெருவின் சிறந்த காட்சியை கார்னரிலிருந்து காணலாம்.

இது சிறிய கூட்டங்களை ஏற்பாடு செய்வதிலும், வேடிக்கை பார்ப்பதிலும் அதிக ஆர்வம் உள்ள இப்பகுதியில் உள்ள அந்த மக்களின் வழக்கமான ஒன்றுகூடும்இடமாகவும்ஓய்வெடுக்கும் இடமாகவும் இது அமைந்துள்ளது.

6. மங்கள வனம் பறவைகள் சரணாலயம்

மங்கள வனம் பறவைகள் சரணாலயம் ஒரு உணர்வு திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் இடமாகும் .இங்கு அலைகள் நிறைந்த ஏரி புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் சதுப்பு நில காடுகள் உள்ளன. மேலும் உலகம் முழுவதுமிலிருந்து பறவைகள் இங்கு இடம் பெயர்ந்து வந்து தங்கும் இங்கு வருவதற்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகும். ஏனெனில் மரங்கள் பசுமையாக பூத்து குலுங்குகின்றன உலகம் முழுவதிலிருந்து பறவைகள் வந்து தங்குகின்றன. இந்த சரணாலயத்தின் செழுமை நமக்கு பார்ப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கும்.

7. அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி

இந்த நீர்வீழ்ச்சி 80 மீட்டர் உயரத்திலிருந்து விழும் அதிசயம் பார்க்க ரம்மியமாக இருக்கும். இந்தியாவில் நயாகரா நீர்வீழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இந்த அருவிபால் வெள்ளை நிறத்தில் அடிவாரத்தில் நுரையுடன்கூடியதாககாட்சியளிக்கிறது. இது பார்வையாளர்களை மிகவும் வசீகரிக்கும். இது ஆனை முடி மலைகளில் இருந்துவெளிப்பட்டுகாடு முழுவதும்பாய்கிறது. இங்கு படுசவாரி செய்யலாம். ஒருநாள் கழிக்க நல்ல ரிசார்ட்சும் உண்டு.

## வேலைவாய்ப்பு கார்னர்

### சென்னை,கோவை,திருச்சியில் ராணுவத்திற்கு நேரடி ஆள்சேர்ப்பு

1. அக்னீவீர் (ஜெனரல் டியூட்டி): குறைந்தபட்சம் 45% மதிப்பெண்களுடன் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது: 17½ முதல் 22 வயதிற்குள் இருக்க வேண்டும். உயரம் மற்றும் மார்பளவு: குறைந்தபட்சம் 166 செ.மீ., உயரம் இருக்க வேண்டும். மார்பளவு சாதாரண நிலையில் 77 செ.மீ., அகலம் இருக்க வேண்டும். 5 செ.மீ., விரிவடையும் தன்மை பெற்றிருக்க வேண்டும்.

2. அக்னிவீர் (டெக்னிக்கல்): இயற்பியல், வேதியியல், கணிதப் பாடங்களைக் கொண்ட பிளஸ் 2 பாடத்தில் குறைந்தது 50% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் மெக்கானிக் மோட்டார் வெஹிக்கிள், மெக்கானிக் டீசல், எலக்ட்ரானிக் மெக்கானிக்கல், டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக் சிஸ்டம்ஸ், எலக்ட்ரீசியன், பிட்டர், இன்ஸ்ட்ருமென்ட் மெக்கானிக், டிராப்ட்ஸ்மேன் (ஆல்டைப்ஸ்), சர்வேயர், ஜியோ இன்பர்மேட்டிக்ஸ் அசிஸ்டென்ட், இன்பர்மேஷன் அண்ட் கம்யூனிகேசன் டெக்னாலஜி சிஸ்டம் மெயின்டெனன்ஸ் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றில் ஐடிஐ/டிப்ளோமா இன்ஜினியரிங் படித்திருக்க வேண்டும். வயது வரம்பு:17½ முதல் 22 வயதிற்குள் இருக்க வேண்டும்.

உயரம் மற்றும் மார்பளவு: குறைந்தபட்சம் 165 செ.மீ., உயரம் இருக்க வேண்டும். மார்பளவு சாதாரண நிலையில் 77 செ.மீ., அகலம் இருக்க வேண்டும். 5 செ.மீ விரிவடையும் தன்மை பெற்றிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளுக்கும் உயரத்திற்கேற்ற எடை இருக்க வேண்டும். ஆன்லைன் எழுத்துத் தேர்வு மதிப்பெண்கள், விண்ணப்பதாரரின் உடற்தகுதி, உடற்திறன் தகுதி, மருத்துவத் தகுதி அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். ஆன்லைன் எழுத்துத் தேர்வு ஜூன் 1ல் தொடங்கும். விண்ணப்ப கட்டணம்: ரூ.250/-. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு முதல் ஆண்டு ரூ.30 ஆயிரம், 2ம் ஆண்டு ரூ.33 ஆயிரம், மூன்றாம் ஆண்டு ரூ.36,500, நான்காம் ஆண்டு ரூ. 60 ஆயிரம் சம்பளம் தரப்படும்.

www.joinindianarmy.nic.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 02.04.2026.

## தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்: பொதுமக்களிடையே விழிப்புணர்வு

**திருப்பத்தூர், மார்ச் 24:**

திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 நடைபெற உள்ளதையொட்டி, வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் வாகன விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி கொடியசைத்து துவக்கி வைத்தார். தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 23 ஏப்ரல் 2026 அன்று நடைபெற உள்ளதையொட்டி, வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருப்பத்தூர் மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துவங்கி தூய நெஞ்ச கல்லூரி வரை சென்று "என் வாக்கு என் உரிமை" என முழக்கமிட்டு பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணி யில் 100 – க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு அலுவலர்களும் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 1 லட்சம் கச்சா எண்ணையுடன் சென்னை வந்த ரஷ்ய கப்பல்

**சென்னை, மார்ச் 24:**

ரஷ்ய துறைமுகத்தில் இருந்து 1 லட்சம் கச்சா எண்ணெய் ஏற்றிய கப்பல் சென்னை துறைமுகம் வந்துள்ளது. மற்றொரு கப்பல் வரும் 24-ந் தேதி வருகிறது என்று சென்னை துறைமுக அதிகாரிகள் கூறினர்.

ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் போரில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஈரானில் உள்ள ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியுள்ளதால் அந்த வழியாக பெரும்பாலான நாடுகளுக்கு கப்பலில் கச்சா எண்ணெய் எடுத்துச்செல்வது பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் நம்முடைய நாட்டின் தேவையை முழுமையாக நிறைவு செய்வதற்கு, மத்திய அரசு வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கொண்டு வரும் நடவடிக்ககைளில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் ரஷ்ய நாட்டு துறைமுகத்தில் இருந்து ஒரு லட்சம் டன் கச்சா எண்ணை ஏற்றிய கப்பல் சென்னை துறைமுகம் வந்தது.

இதுகுறித்து சென்னை துறைமுக அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை துறைமுகத்திற்கு வழக்கமாக மாதந்தோறும் கப்பல்களில் கச்சா எண்ணெய் வருகிறது. இவற்றில் 10 லட்சம் டன் கச்சா எண்ணெய் எடுத்து வரப்படும். தற்போதைய நிலவரப்படி சென்னை துறைமுகத்தில் 6.50 லட்சம் டன் கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. ரஷ்ய நாட்டு துறைமுகத்திலிருந்து ஒரு லட்சம் கச்சா எண்ணெய் ஏற்றி வந்த கப்பல் சென்னை துறைமுகம் வந்தது. அடுத்த கப்பல் வருகிற 24-ந் தேதி 1 லட்சம் டன் கச்சா எண்ணெயுடன் சென்னை வருகிறது.

இந்த மாதம் இறுதிக்குள் மேலும் 2 கப்பல்கள் அடுத்தடுத்து வரும். சென்னை துறைமுகத்தில் இருந்து கச்சா எண்ணெய் வினியோகத்தில் எந்த தட்டுப்பாடும் ஏற்படவில்லை.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 23.7 கிலோ குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல்

**சென்னை, மார்ச் 24:**

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின்பேரில், சென்னை பெருநகரில் போதைப் பொருட்கள் மற்றும் குட்கா புகையிலை பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு தீவிரமாக கண்காணித்து குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எழும்பூர் சட்டமன்ற தொகுதியின் செயல்துறை நடுவர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழு அதிகாரி தலைமையில் தேர்தல் பறக்கும்படை குழுவினர் மற்றும் காவல் ஆளிநர்கள் வேப்பேரி, ஜெர்மையா ரோடு, பெட்ரோல் பங்க் அருகே வாகனத் தணிக்கையில் இருந்தபோது, அவ்வழியே இருசக்கர வாகனத்தில் வந்த நபரை நிறுத்தி அவரது இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது, அவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகளை ஒரு பையில் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இது குறித்து தேர்தல் பறக்கும்படை அதிகாரி வேப்பேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதமாக குட்கா புகையிலை பாக்கெட்டுகளை இருசக்கர வாகனத்தில் கடத்தி வந்த திலீப்குமார் (71), என்பவரை கைது செய்தனர். விசாரணையில் இவரது மகன் வெளி மாநிலத்திலிருந்து குட்கா புகையிலை பாக்கெட்டுகளை வாங்கி வந்து, இருவரும் அண்ணா நகரிலுள்ள கடையில் வைத்து விற்பனை செய்ததும் தெரியவந்தது. அதைத் தொடர்ந்து திலீப்குமாரின் மகன் ஹீராலால் (35) கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவர்களிடமிருந்து மொத்தம் 23.7 கிலோ குட்கா புகையிலை பாக்கெட்டுகள் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## தேர்தல் ஆணையத்தை கண்டித்து 31ம் தேதி சென்னையில் மாபெரும் போராட்டம்: ஏ.எம். விக்ரமராஜா அறிவிப்பு

**சென்னை, மார்ச் 24:**



வியாபாரிகளிடம் பணம் பறிமுதல் செய்யும் தேர்தல் ஆணையத்தை கண்டித்து 31ம் தேதி சென்னையில் மாபெரும் போராட்டம் நடைபெறும் என்று வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்ரமராஜா தெரிவித்தார்.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23-ந்தேதி நடை பெற உள்ளது. தேர்தல் தேதியை கடந்த 15-ந்தேதி மாலை அறிவித்தது முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன.

இதன்படி ரொக்கமாக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படுவது தேர்தல் பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண மக்கள் அத்தியாவசிய தேவை, மருத்துவ செலவுக்கு கூட பணத்தை எடுத்து செல்வதில் கடும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

இதேபோல ஆட்டுச்சந்தை, மாட்டுச்சந்தைகளுக்கு ஆடுகள், மாடுகள் வாங்க பணத்தை ரூ.50 ஆயிரத்துக்கு மேல் ரொக்கமாக கொண்டு செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். இதேபோல உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் விலை மதிப்புமிக்க பொருட்களையும் தேர்தல் அதிகாரிகள் சோதனையில் பறிமுதல் செய்து வருகின்றனர். இந்த சோதனையானது தமிழகம் முழுவதும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தேர்தல் பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்படும் பணம், பொருட்களை உரிய ஆவணங்களை அதிகாரிகளிடம் காட்டி திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இருப்பினும் இந்த நடைமுறையில் பல சிக்கல்களை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அனுபவித்து வருகின்றனர்.

தேர்தலில் அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்களை கொடுப்பதை தடுப்பதற்காக தேர்தல் கமிஷன் இந்த அதிரடி சோதனையை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலானது முதல் நேற்று வரை ரூ.75 கோடி மதிப்பில் பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளதாக தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

31ந் தேதி போராட்டம்

இந்நிலையில் வியாபாரிகளிடம் பணம் பறிமுதல் செய்யும் நடவடிக்கையை தேர்தல் ஆணையம் கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் விக்ரமராஜா தெரிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக 27ம் தேதிக்குள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், 31ம் தேதி சென்னையில் மாபெரும் போராட்டம் நடத்துவோம் என்று அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

## தி.மலையில் நடிகர் சாமி தரிசனம்

**திருவண்ணாமலை, மார்ச் 24:**

பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலுக்கு கடந்த சில மாதங்களாகவே தமிழ், தெலுங்கு, ஆந்திரா உள்ளிட்ட மொழிகளை சேர்ந்த திரைப்பட நடிகர், நடிகைகள், இசையமைப்பாளர்கள், இயக்குனர்கள், மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் என அனைவரும் வருகை தந்து அண்ணாமலையாரை வழிபட்டு, பின்னர் கோவில் பின்புறம் உள்ள மலையை சிவனாக எண்ணி 14 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட கிரிவலப் பாதையில் கிரிவலம் மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று திருவண்ணாமலைக்கு வருகை தந்த அருண்விஜய் அண்ணாமலையாருக்கு நடைபெற்ற சிறப்பு அபிஷேகத்தில் கலந்து கொண்டு வழிபாடு செய்தார். முன்னதாக சம்பந்த விநாயகரை வணங்கி அவர், தொடர்ந்து உண்ணாமலை உடனாகிய அண்ணாமலையாரை சாமி தரிசனம் செய்தார்.

திருக்கோவில் நிர்வாகம் சார்பில் நடிகர் அருண்விஜய்க்கு பிரசாதம் வழங்கப்பட்டது. பக்தர்கள் பலர் செல்பி எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# ரூ.2 லட்சத்திற்கு முத்திரைத்தாள் வாங்க பான் கார்டு எண் கட்டாயம்: வருமான வரித்துறை அதிரடி

**சென்னை, மார்ச் 24:**




தமிழ்நாடு முழுவதும் ரியல் எஸ்டேட் துறை தற்போது கொடிகட்டி பறக்கிறது. அதிக அளவிலான நிலங்களை வாங்கி பிளாட்டுகளாக போட்டு விற்பனை செய்ய பெரிய நிறுவனங்கள் வந்துள்ளன. ஆனால், இதுபோன்று சொத்துகள் வாங்குவதில் கருப்பு பணப்புழக்கம் அதிகரித்து இருப்பதாக கூறப்படுகிறது. இதை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை வருமான வரித்துறை எடுத்து வருகிறது.

அந்த வகையில், சொத்து பரிமாற்றத்தில் ரொக்கமாக பணத்தை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளது. இதில், கையாளப்படும் தொகை முழுவதும், வங்கி கணக்குகள் வாயிலாக செல்ல வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பத்திரத்தில் குறிப்பிடப்படும் தொகையை மட்டுமே, வங்கிகள் வாயிலாக மக்கள் கைமாற்றுகின்றனர். அதற்கு மேற்பட்ட தொகையை ரொக்கமாக கொடுக்கின்றனர். அதாவது, பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிலத்தின் வழிகாட்டி மதிப்பு தொகையை மட்டுமே வங்கிகள் மூலம் கொடுக்கின்றனர். ஆனால், கூடுதலான மார்க்கெட் விலையை ரொக்கமாகவே கொடுக்கின்றனர்.

இதை கட்டுப்படுத்தும் வகையில், புதிய நடவடிக்கைகளை வருமான வரித்துறை எடுத்து வருகிறது. அந்த வகையில், புதிய வருமான வரி சட்டத்தின் அடிப்படையில், புதிய விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில், சொத்து பரிமாற்றம் விஷயத்தில் புதிய கட்டுப்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அதன்படி, ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புகளில் யார் முத்திரைத்தாள் வாங்கினாலும், அவர்களின் விவரங்களை ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் இந்தியா நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகிறது.

இதேபோல், ரூ.2 லட்சம் மற்றும் அதற்கு மேல் முத்திரைத்தாள் வாங்க பான் கார்டு எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உயர் மதிப்பு முத்திரைத்தாள்கள் வாங்குவோர் விவரங்கள் அனைத்தும் வருமான வரித்துறையின் பார்வைக்கு செல்லும் வகையில் விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் 1-ந் தேதி முதல் இந்த விதிமுறைகள் அமலுக்கு வருகின்றன. இதனால், முத்திரைத்தாள் வாயிலாகவும், சொத்து பரிமாற்றங்கள் குறித்த விவரங்கள் வருமான வரித்துறை பார்வைக்கு வர உள்ளன.

# க்ரைம் கார்னர்

## குருகிராமில் சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை: இரு வீட்டு பணிப் பெண்கள் உள்பட 3 பேர் கைது!

**குருகிராமம், மார்ச் 24:**

செக்டார் 54-இல் உள்ள குடியிருப்பு வளாகத்தில் கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமி, அவரது தாயிடம் கூறியதையடுத்து, காவல்நிலையத்தில் புகாரளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, பாரதிய நியாய சம்ஹிதா மற்றும் போக்ஸோ சட்டப் பிரிவுகளில் செக்டார் 53 காவல் நிலையத்தில் கடந்த பிப்.4-ஆம் தேதி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதனிடையே, இந்த வழக்கை சிபிஐ அல்லது சிறப்பு விசாரணை குழு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜாய்மல்யா பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன்பாக திங்கள்கிழமை விசாரணைக்கு வருகிறது.

இந்நிலையில், இந்தக் குற்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தர பிரதேசத்தின் எட்டாவைச் சேர்ந்த சங்கீதா, மேற்கு வங்கத்தின் நாதியாவைச் சேர்ந்த பகிலா; மற்றும் அவரது கணவர் கபீர் முல்லா என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இம்மூவரும் தற்போது குருகிராமின் காடா குடிசைப் பகுதியில் வசித்து வருகின்றனர். இந்நிலையில், அவர்கள் மூவரும் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர். முதல்கட்ட விசாரணையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒரு பெண் பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டில் வீட்டுவேலை பார்த்துவந்தார். மற்ற இருவரும் அருகில் உள்ள குடியிருப்பில் வீட்டுவேலை செய்து வந்தனர். இந்தக் காலகட்டத்தில் கைதுசெய்யப்பட்ட கபீர் முல்லா சிறுமியிடம் தவறாக நடந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பவன் கல்யாண் கட்சி எம்எல்ஏவிடம் ரூ. 12 லட்சம் சைபர் மோசடி

**திருப்பதி, மார்ச் 24:**

தெலுங்கு நடிகர் பவன் கல்யாண் தலைமையிலான ஜனசேனை கட்சியைச் சேர்ந்த எம்எல்ஏ சி. பாலராஜுவின் கைப்பேசிக்கு கடந்த மார்ச் 6-ஆம் தேதி ஒரு இணையதள முகவரியுடன் ஆண்ட்ராய்டு செயலி பதிவிறக்கம் செய்ய கோப்பு ஒன்று வந்ததாகக் கூறப்படுகிறது. அதில், அனுப்புநர் முகவரியாக 'சாலைப் போக்குவரத்து ஆணையரகம் (ஆர்டிஏ)' என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். அந்த லிங்க்-ஐ அவர் தொட்டு அதன் வழியாக பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆண்ட்ராய்டு செயலி ஒன்றின் வழியே அவரது வங்கிக்கணக்கிலிருந்து ரூ. 12 லட்சம் பணப்பரிவர்த்தனை செய்ப்பட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, அவர் தேசிய சைபர் க்ரைம் உதவி எண்ணைத் தொடர்புகொண்டு புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிந்துள்ள இணையதள குற்றச்செயல் தடுப்புப்பிரிவு காவல் துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்தக் குற்றச்செயலில் சர்வதேச மோசடி கும்பலுக்கு தொடர்பிருப்பதாகவும் அவர்கள் திட்டமிட்டு இத்தகைய செயலில் ஈடுபட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரூ. 12 லட்சம் போதைப் பொருள்கள் பறிமுதல்

**சென்னை, மார்ச் 24:**

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சென்னை வரும் ரெயிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளனன. அதன் ஒரு பகுதியாக சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையம் வந்துகொண்டிருந்த லால்பாக் விரைவு ரெயிலில் ரெயில்வே பாதுகாப்புப் படை அதிகாரிகள் நடத்திய சோதனையில், ஏ.தனிகைவேல் என்பவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்த போது அவரிடம் உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.4,98,400 ரொக்கப் பணம் மற்றும் சுமார் ரூ.13,16,000 மதிப்பிலான 94 கிராம் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. இதனுடன், எண்ணூர் திருவொற்றியூர் இடையே வந்துக்கொண்டிருந்த திருநெல்வேலி விரைவு ரெயிலில் ரெயில்வே பாதுகாப்புப் படை போலீசார் நடத்திய சோதனையில், உரிமையாளர் இல்லாத 4 பைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் 10 கட்டுகளாக போதைப் பொருட்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவற்றின மதிப்பு ரூ.12,25,000 ஆகும்.

# விளையாட்டு செய்திகள்

## டி20 கிரிக்கெட் போட்டிகளில் 14,000 ரன்களை எட்டும் விராட் கோலி

**பெங்களூரு, மார்ச் 24:**

டி20 கிரிக்கெட் போட்டிகளில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி வீரர் (ஆர்சிபி) விராட் கோலி விரைவில் 14 ஆயிரம் ரன்களை எட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 18 ஆண்டுகளாக ஐபிஎல் போட்டிகளில் பெங்களூரு அணிக்காக விராட் கோலி விளையாடி வருகிறார். கடந்த ஆண்டு ஐபிஎல் போட்டியில் முதன்முறையாக பெங்களூரு அணி கோப்பையை வென்றிருந்தது.

அவர் இதுவரை ஐபிஎல் போட்டியில் 267 ஆட்டங்களில் பங்கேற்று 8,661 ரன்களைக் குவித்துள்ளார். இதில் 63 அரை சதங்கள் அடங்கும். மேலும் 339 ரன்கள் சேர்த்தால் ஐபிஎல் போட்டிகளில் 9 ஆயிரம் ரன்களைக் குவிக்கும் முதல் வீரர் என்ற பெருமையைப் பெறுவார். ஐபிஎல், சாம்பியன் லீக் டி20 போட்டிகள் என 282 ஆட்டங்களில் ஆர்சிபி அணிக்காக பங்கேற்று மொத்தம் 9,085 ரன்களைக் குவித்துள்ளார் விராட்.

இன்னும் 2 சீசன்களில் அவர் விளையாடும்போது ஒரே ஒரு அணிக்காக 10 ஆயிரம் ரன்களை குவிக்கும் முதல் வீரர் என்ற பெருமையைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 414 டி20 போட்டிகளில் (ஐபிஎல், சாம்பியன்ஸ் லீக் டி20, சர்வதேச டி20 என அனைத்தும் சேர்த்து) விளையாடி 13,543 ரன்களை விராட் கோலி எடுத்துள்ளார்.

வரும் சீசனில் விளையாடும்போது அவர் விரைவில் 14 ஆயிரம் ரன்களை எட்ட வாய்ப்புள்ளது. அவ்வாறு அவர் 14 ஆயிரம் ரன்களை எட்டினால் டி20 போட்டிகளில் 14 ஆயிரம் ரன்கள் குவித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை விராட் கோலி பெறுவார்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெயில் 14,652 ரன்களுடன் முதலிடத்திலும், கைரன் பொல்லார்ட் 14,482 ரன்களுடன் 2-வது இடத்திலும், இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹேல்ஸ் 14,449 ரன்களுடன் 3-வது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னர் 14,028 ரன்களுடன் 4-வது இடத்திலும் உள்ளனர். கடந்த 2025-ம் ஆண்டு சீசனில் விராட் கோலி 15 ஆட்டங்களில் விளையாடி 757 ரன்கள் குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் 8 அரை சதங்களும் அடங்கும்.

## 2027 ஜனவரியில் இந்தியா - ஆஸி. டெஸ்ட் தொடர்

மெல்பர்ன்: இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதும் கிரிக்கெட் டெஸ்ட் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கும் என்று கிரிக்கெட் ஆஸ்திரேலியா (சிஏ) அறிவித்துள்ளது.

இரு நாடுகளிடையே 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடராக இது இருக்கும்.

மேலும் இந்தத் தொடர் மார்ச்சில் நிறைவடையும். வரும் ஆகஸ்டில் வங்க தேசத்துடன் 2 டெஸ்ட் போட்டிகளிலும், அக்டோபரில் தென் ஆப்பிரிக்காவுடன் 3 டெஸ்ட் போட்டிகளிலும், டிசம்பர் முதல் 2027 ஜனவரி வரை நியூஸிலாந்துடன் 4 டெஸ்ட் போட்டிகளிலும், ஜனவரி முதல் மார்ச் வரை இந்தியாவுடன் 5 டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி மோதும்.

# சேலம் வழியாக செல்லும் பெங்களூரு - திருவனந்தபுரம் சிறப்பு ரெயில் சேவை நீட்டிப்பு

**சேலம், மார்ச் 24:**




கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் இருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை போத்தனூர் வழியாக கேரளாவுக்கு சிறப்பு ரெயில்கள் இயக்கப் பட்டு வருகின்றன.

இதில், பெங்களூரு-திருவனந்தபுரம் வடக்கு இடையே வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்-06547 மற்றும் 06548) இருமார்க்கத்திலும் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த ரெயில் சேவையின் காலம் நடப்பு (மார்ச்) மாதம் இறுதியோடு முடிவடைய இருந்தது. ஆனால் இந்த சிறப்பு ரெயிலை மேலும் 2 மாதத்திற்கு அதாவது ஏப்ரல் மற்றும் மே மாதம் வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி, பெங்களூரு-திருவனந்தபுரம் வடக்கு வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்-06547) வருகிற ஏப்ரல் 1-ந் தேதி முதல் மே மாதம் 27-ந் தேதி வரை புதன்கிழமை தோறும் (9 சேவை) இயக்கப்படுகிறது. பெங்களூருவில் இரவு 7.25 மணிக்கு புறப்பட்டு கிருஷ்ணராஜபுரம், பங்காரு பேட்டை, ஜோலார்பேட்டை வழியாக சேலத்திற்கு நள்ளிரவு 12.05 மணிக்கு வந்தடையும். பின்னர் ஈரோடு. திருப்பூர், போத்தனூருக்கு அதி காலை 2.58- மணிக்கும். பாலக்காடு, திருச்சூர், ஆலுவா, எர்ணாகுளம், கோட்டயம், கொல்லம் வழியாக திருவனந்தபுரம் வடக்கு ரெயில் நிலை யத்திற்கு மதியம் 1.15 மணிக்கும் செல்லும்.

அதேபோல, மறுமார்க்கத்தில் திருவனந்தபுரம் வடக்கு-பெங்களூரு வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்-06548) வருகிற ஏப்ரல் 2-ந் தேதி முதல் மே 28-ந் தேதி வரை வியாழக்கிழமை தோறும் (9 சேவை) இயக்கப்படுகிறது.

திருவனந்தபுரம் வடக்கில் பிற்பகல் 3.15 மணிக்கு சிறப்பு ரெயில் புறப் பட்டு போத்தனூருக்கு நள்ளிரவு 12.15-மணிக்கும், திருப்பூர், ஈரோடு வழி யாக சேலத்திற்கு அதிகாலை 3.50 மணிக்கும் வந்தடையும். அதன்பிறகு சேலத்தில் இருந்து புறப்பட்டு பெங்களூருவுக்கு காலை 8.30 மணிக்கு சென்றடைகிறது.

இந்த சிறப்பு ரெயிலின் பெட்டிகளில் மூன்றடுக்கு ஏ.சி.பெட்டிகளை குறைத்து கூடுதலாக இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு ரெயில் சேவைகளை பயணிகள் பயன்படுத்தி கொள்ளுமாறு தெற்கு ரெயில்வே நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நிலையில் திடீர் திருப்பம்: புதுவையில் கூட்டணி அமைத்தது தவெக

**புதுவை, மார்ச் 24:**



விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) கட்சி, புதுச்சேரியில் அனைத்து தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுவதாக முதலில் அறிவித்திருந்தது. வேட்பு மனு தாக்கலுக்கு இன்றே கடைசி நாள் என்பதால், நேற்று இரவு 30 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை விஜய் வெளியிட்டார். இந்த நிலையில், திடீர் திருப்பமாக த.வெ.க.வுடன் 'நேயம் மக்கள் கழகம்' என்ற கட்சி கூட்டணி அமைத்துள்ளது. இதுதொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர் என். ஆனந்த் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி மாநிலத்தில் 2026-ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். மேலும், புதுச்சேரி மாநில வளர்ச்சியை கருத்தில் கொண்டு, 'நேயம் மக்கள் கழகம்' நிறுவனத் தலைவர் நேரு (எ) குப்புசாமி, தமிழக வெற்றிக் கழகத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளில் 'உருளையன்பேட்டை' மற்றும் 'தட்டாஞ்சாவடி' ஆகிய இரண்டு தொகுதிகள், கூட்டணியில் இணைந்துள்ள நேயம் மக்கள் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# வணிகச் செய்திகள்

## பவுனுக்கு ரூ.5,360 குறைந்தது வெள்ளியும் கிலோவுக்கு ரூ.15 ஆயிரம் குறைவு

**சென்னை, மார்ச் 24:**

நேற்று (மார்ச் 23) அது 93.954 ஆக உயர்ந்து வர்த்தகமாகி வருகிறது. இந்த மாத தொடக்கத்தில் 91.585 ஆக இருந்த ஒரு டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு கடந்த 20 நாட்களில் இரண்டு முறை மட்டுமே ஏற்றம் கண்டது. மற்றபடி அது தொடர் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் காரணமாக, தங்கத்தின் விலை குறைந்து வருவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

அந்த வகையில் நேற்று காலை வர்த்தகம் தொடங்கியதும் தங்கம் விலை சரிந்தது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.670 குறைந்து, ஒரு கிராம் ரூ.12,950-க்கும், பவுனுக்கு ரூ.5,360 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,03,600-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.5,848 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,13,016-க்கு விற்பனை ஆகிறது.

இதேபோல் வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.15 குறைந்து, ஒரு கிராம் ரூ.235-க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிலோ கட்டி விலை கிலோவுக்கு ரூ.15,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,35,000-க்கு விற்பனை ஆகிறது.

# நடப்பு ஆண்டில் மாம்பழ சீசன் தள்ளிப்போகிறது: மாம்பழ பிரியர்கள் அதிர்ச்சி

**சேலம், மார்ச் 24:**



பொதுமக்கள் பயன்பாட்டிற்கு போக, மீதமுள்ள மாம்பழங்கள்

முக்கனிகளில் முதல் கனியான மாம்பழ சீசன், தமிழ்நாட்டில் மார்ச் மாத இறுதியில் தொடங்கி ஜூலை மாதம் வரை நீடிப்பது வழக்கம். அந்த வகையில், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவள்ளூர், காஞ்சீபுரம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாவட்டங்களில் ஆண்டுதோறும் 10 லட்சம் டன் அளவுக்கு மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு மாம்பழக் கூழ் தயாரிக்கப்படுகின்றன. இந்த மாம்பழக் கூழ் குளிர் பானம் தயாரிப்புக்காக உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

கடந்த ஆண்டு மாம்பழ விளைச்சல் அதிகமாக இருந்ததால், மாம்பழக் கூழ் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு தேக்கம் அடைந்ததால், மா விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. ரூ.100 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நடைபெற்று வருவதால், கப்பல் போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற அசாதாரண சூழ்நிலையில் மாம்பழக் கூழ்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு இப்போதுதான் மாமரங்கள் பூக்கத் தொடங்கி இருக்கின்றன. எனவே, மாம்பழ சீசனும் இந்த ஆண்டு தாமதமாகவே தொடங்கும் என்று தெரிகிறது. இதனால், மாம்பழ பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# திருப்பதி தேவஸ்தான கோயில்கள் ஆன்மிக மையங்களாக வளர்ச்சி பெற வேண்டும்: சந்திரபாபு நாயுடு உத்தரவு

**திருப்பதி, மார்ச் 24:**

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தனது குடும்பத்தாருடன் திருப்பதி ஏழுமலையானை தரிசித்தார்.

அப்போது அவர் தனது பேரன் நாரா தேவான்ஷின் பிறந்த நாளையொட்டி, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் எஸ்.வி. அன்னதான அறக்கட்டளைக்கு ஒருநாள் அன்னதான செலவான ரூ.44 லட்சத்துக்கான காணிக்கையை வழங்கினார். சுவாமியை தரிசித்த பின்னர் அவருக்கு ரங்கநாயக மண்டபத்தில் அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தனர்.



அதன் பின்னர், சந்திரபாபு நாயுடு, தனது மனைவி புவனேஸ்வரி, மகனும் அமைச்சருமான நாரா லோகேஷ், மருமகள் பிராம்மனி மற்றும் பேரன் நாரா தேவான்ஷ் ஆகியோருடன் இணைந்து தரிகொண்டா வெங்கமாம்பாள் அன்னதான கூடத்திற்கு சென்றார். அங்கு, பக்தர்களுக்கு காலை சிற்றுண்டியை சந்திரபாபு நாயுடு மற்றும் அவரது குடும்பத்தினர் பரிமாரியதுடன், பக்தர்களுடன் இணைந்து உண்டனர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு , திருமலையில் 12 ஆயிரம் சதுர அடியில் ரூ.25 கோடியில் கட்டப்பட்ட அதிநவீன உணவு மற்றும் நீர் பரிசோதன மையத்தை திறந்து வைத்தார். திருமலையில் செயற்கை நுண்ணறிவு கமாண்ட் கண்ட்ரோல் மையத்தை அவர் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் பேசுகையில், "திருமலைக்கு ஏழுமலையானை தரிசிக்க வரும் பக்தர்கள் எதிர் கொள்ளும் சங்கடங்களை முன் கூட்டியே ஏஐ மூலம் கண்டறிந்து உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டும். திருப்பதி தேவஸ்தானத்தின் அனைத்து கோயில்களும் ஒரு அதிநவீன ஆன்மிக மையங்களாக செயல்பட வேண்டும்" என்றார்.

## தண்ணீர் பாதுகாப்பு, பொறுப்புமிக்க பயன்பாடு: பிரதமர் மோடி வலியுறுத்தல்!

**புதுடெல்லி, மார்ச் 24:**

நன்னீர் ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 22-ஆம் தேதி உலக தண்ணீர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மனித வாழ்க்கையின் அத்தியாவசிய மூலாதாரமான தண்ணீர்தான், பூமியின் எதிர்காலத்தை வடிவமைக்கிறது. நம்மை வாழ வைக்கும் தண்ணீரின் ஒவ்வொரு துளியையும் பாதுகாத்து பொறுப்புடன் பயன்படுத்தும் நமது லட்சியத்தை மீண்டும் உறுதி செய்ய வேண்டும். நீர் பாதுகாப்புக்கு நிலையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், விழிப்புணர்வை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை இந்த நாளில் பாராட்டுவோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆந்திரம்: கலப்பட பால் விவகாரம் - சிகிச்சை பலனின்றி மேலும் இருவர் உயிரிழப்பு!

**திருப்பதி, மார்ச் 24:**

ஆந்திர பிரதேசத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கலப்படமான பாலைக் குடித்ததால் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களில் மொத்தம் 16 பேர் உயிரிழந்ததாக அம்மாவட்ட மருத்துவ மற்றும் சுகாதார அதிகாரி கே. வெங்கடேஷ்வர ராவ் ஞாயிற்றுக்கிழமை(மார்ச் 22) தெரிவித்தார். மேலும், மூவர் ராஜமகேந்திரவரம் பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜமகேந்திரவரத்தில் வீடுகளுக்கே வந்து பால் விநியோகிக்கும் ஒரே வியாபாரியிடம்தான் பால் வாங்கி அருந்திய குடும்பங்களில் பலருக்கும் கடந்த பிப். 22-இல் உடல்நிலை மிகவும் மோசமாகி அப்பகுதியிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

அந்த வியாபாரி உள்ளூர் கால்நடை விவசாயிகளிடமிருந்தும் பால் கொள்முதல் செய்து வீடுகளுக்கு விநியோகித்து வந்துள்ளார் என்பதும், கலப்பட பாலை குடித்தோரின் சிறுநீரகம் முதலில் செயலிழந்ததும், பிறகு சிறுநீர் தடைபட்டு உயிரிழப்பு ஏற்பட்டதும் முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து, பால் மாதிரியை சேகரித்து, பல்வேறு ஆய்வு கூடங்களுக்கு உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

இதேபோல், பல குழுக்கள் சம்பந்தப்பட்ட இடத்தில் ஆய்வு நடத்தி வருகின்றனர். சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் மருத்துவக் குழுக்கள் ஆய்வு நடத்தி வருகின்றன என்று தெரிவித்தனர்.

## ஏழுமலையானுக்கு ரூ. 1 கோடி நன்கொடை!



**திருப்பதி, மார்ச் 24:**

சென்னையைச் சேர்ந்த சுப்பாராவ் அப்பர ல்ஸ் நிறுவனம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை திருமலை தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ பாலாஜி ஆரோக்கிய வரபிரசாதினி' திட்டத்துக்கு ரூ. 1 கோடி நன்கொடையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநிலம், சென்னையைச் சேர்ந்த சுப்பாராவ் அப்பரல்ஸ் நிறுவனத்தார் ஜெ. ராஜா ரமேஷ், ஞாயிற்றுக்கிழமை திருமலை தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ பாலாஜி ஆரோக்கிய வரபிரசாதினி'திட்டத்துக்கு ரூ.1 கோடி நன்கொடை அளித்தார். நன்கொடைக்கான வரைவோலையை திருப்பதியில் உள்ள திருமலை தேவஸ்தானத்தின் கூடுதல் செயல் அலுவலர் சி.எச். வெங்கையா சௌத்ரியிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் திருமலை தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் பானு பிரகாஷ் ரெட்டி கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் நன்கொடையாளருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

## சிறைகளின் நிலை: அறிக்கை சமர்ப்பிக்க மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

**திருவனந்தபுரம், மார்ச் 24:**



சிறைகளில் மனிதத்தன்மை யற்ற சூழல் நிலவுவதாக கடந்த 2023-இல் வெளியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் உள்ள சிறைகளின் நிலைகுறித்துஉச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் உச்சநீதிமன்றத்துக்கு உதவுபவராக மூத்த வழக்குரைஞர் கௌரவ் அகர்வால் செயல்பட்டு வருகிறார்.

இதுதொடர்பாக கடந்த 17-ஆம் தேதி நடைபெற்ற விசாரணையில் நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவில், 'சிறைகளின் உண்மை நிலை குறித்து அறிய பல்வேறு தரவுகள் தேவைப்படுகின்றன.

எனவே, ஒவ்வொரு சிறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது அங்குள்ள கைதிகளின் எண்ணிக்கை, ஒதுக்கப்பட்டதைவிட அதிக எண்ணிக்கையிலான கைதிகளைக் கொண்ட சிறைகள் மற்றும் அதை ஒழுங்குபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பெண் கைதிகள் மற்றும் பெண்களுக்கான சிறைகள், பெண்கைதிகளுக்குசிறையில் அளிக்கப்பட்டுள்ள வசதிகள், பெண் கைதிகளோடு உள்ள குழந்தைகளுக்கான கல்வி மற்றும் மருத்துவ வசதிகள், சிறை ஊழியர்களின் எண்ணிக்கை, காலிப் பணியிடங்கள் மற்றும் அவற்றை நிரப்ப மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் உள்பட சிறை நிர்வாகம் குறித்த அனைத்து அண்மைத் தகவல்களையும் மே 18-ஆம் தேதிக்குள் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாநிலத்தின் உள்துறைச் செயலர்கள் சமர்ப்பிக்கும் இந்த அறிக்கைகளை நீதிமன்றத்துக்கு அனுப்புவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை மே 26-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது

## கேரளத்தில் வாக்காளர் பட்டியலில் இணைக்க மார்ச் 15 வரை சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனை!

**புதுடெல்லி, மார்ச் 24:**



வாக்காளர் பதிவு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்களில் கடந்த மார்ச் 15-ஆம் தேதிக்குப்பின் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாநில தலைமை தேர்தல் நடத்தும் அலுவலர் யூ. ரத்தன் கேல்கர் ஞாயிற்றுக்கிழமை() மார்ச் 22 தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் இணைக்க, கேரளத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய வழங்கப்பட்ட கடைசி தேதியான மார்ச் 23 வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதன்பின் நடைபெறும் சரிபார்ப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் கால அவகாசமாக 10 நாள்கள் வரை தேவைப்படும் என்பதால் மேற்கண்ட முடிவை தேர்தல் ஆணையம் எடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், மார்ச் 15 வரை விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் உரிய சரிபார்ப்புக்குப்பின் தகுதியானவர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இணைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள், வரும் பேரவைத் தேர்தலில் வாக்கு செலுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களும் மார்ச் 15க்குபின் விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களும் தேர்தல் நடைமுறைகள் முடிந்த பின்னரே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக பயங்கரவாத குறியீட்டில் முதல் இடம் பிடித்த பாகிஸ்தான்

**புதுடெல்லி, மார்ச் 24:**

உலக அளவில் 163 நாடுகளில் பயங்கரவாத தாக்கம் தொடர்பாக பொருளாதாரம் மற்றும் அமைதி மையம் விரிவான ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது.இது தொடர்பான உலகளாவிய பயங்கரவாத குறியீட்டில் பாகிஸ்தான் முதல் இடம் பிடித்துள்ளது.

இதில், ஆப்கானிஸ்தான் போன்ற அண்டை நாடுகளுடன் பகைமையுடனான உறவை வளர்த்தது, தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-இ-தலிபான் (டி.டி.பி.) மற்றும் பலூசிஸ்தான் ராணுவம் போன்றவற்றால் அதிகரித்து வரும் வன்முறை ஆகிய தாக்கங்களால் பாகிஸ்தான் முதன்முறையாக இந்த நிலைமைக்கு சென்றடைந்துள்ளது. இதனால், அந்நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பில் ஆபத்து ஏற்பட்டு உள்ளது. இதேபோன்று, 2013-ம் ஆண்டில் இருந்து இதுவரையில், பாகிஸ்தானில் பயங்கரவாதம் தொடர்பான மரண எண்ணிக்கையும் பெரிய அளவில் அதிகரித்து உள்ளது. 2025-ம் ஆண்டில் 1,139 பயங்கரவாதம் தொடர்பான மரணங்களும், 1,045 பயங்கரவாத சம்பவங்களும் நடந்துள்ளன என அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இதில், டி.டி.பி. அமைப்பானது, அந்நாட்டில் கொடிய பயங்கரவாத குழுவாக தன்னை நிலைநிறுத்தி கொண்டதுடன், உலக அளவில் 3-வது கொடிய பயங்கரவாத அமைப்பாகவும் உள்ளது. அதனுடன் கடந்த ஆண்டில், உலகளவில் உள்ள 4 பெரிய பயங்கரவாத குழுக்களில் தன்னுடைய செயல்பாட்டை அதிகரித்த ஒரேயொரு இயக்கம் ஆகவும் இந்த டி.டி.பி. உருவெடுத்து உள்ளது என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## கொலீஜியம் முறை இந்தியாவுக்கு மிகவும் பொருத்தமானது:

### முன்னாள் நீதிபதி பி.ஆர்.கவாய்!

**புதுடெல்லி, மார்ச் 24:**

கர்நாடக மாநிலம் பெங்களூரில் உச்சநீதிமன்ற வழக்குரைஞர் சங்கத்தின் முதல் தேசிய மாநாடு-2026-இன் நிறைவு நிகழ்ச்சியில் அவர் ஞாயிற்றுக்கிழமை பேசியதாவது:

கொலீஜியம் முறை முற்றிலும் பிழையற்ற முறை என்று நான் கூறமாட்டேன். குறைகளே இல்லாத முறை என்பது இல்லவே இல்லை. ஒவ்வொரு முறைக்கும் அதற்கே உரிய சாதகங்களும் பாதகங்களும் உள்ளன. எனினும் எனது பல ஆண்டுகால பணி அனுபவத்தின் அடிப்படையில், தற்சமயம் இந்தியாவுக்கு கொலீஜியம் முறை மிகவும் பொருத்தமானது. கொலீஜியம் தன்னிச்சையாகச் செயல்படுவதில்லை. பதவி உயர்வு மற்றும் பணியிடமாற்றம் செய்ய வேண்டிய நீதிபதிகளின் பெயர்களை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் இரு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் பரிந்துரை செய்கிறது. அதன் பின்னர் அந்தப் பெயர்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. அதுகுறித்து மத்திய அரசு, உளவுத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் கருத்துகள் மற்றும் தகவல்களைத் திரட்டி, அதன் அடிப்படையில் உச்சநீதிமன்ற கொலீஜியம் முடிவு எடுக்கிறது. பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட பிறகும் கூட, அதில் அரசுக்கு ஏதேனும் ஆட்சேபம் இருந்தால், அவை கொலீஜியத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. அந்த ஆட்சேபங்களை கொலீஜியம் பரிசீலித்து இறுதி முடிவை மேற்கொள்கிறது என்று தெரிவித்தார்.

## போரால் பாதிக்கப்பட்டுள்ள ஈரானுக்கு காஷ்மீர் மக்கள் நன்கொடை

**புதுடெல்லி, மார்ச் 24:**


ரமலான் பண்டிகைக்குப் பின்னர், காஷ்மீர் பள்ளத்தாக்கில் முஸ்லிம் மதத்தின் ஷியா பிரிவு மக்கள் அதிகமுள்ள பகுதிகளில் இளைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை வீடு வீடாக சென்று நன்கொடை வசூலித்தனர். இதுகுறித்து அந்தப் பகுதியைச் சேர்ந்த ஐஜாஸ் அகமது கூறுகையில், 'இஸ்ரேலால் ஈரான் மீது திணிக்கப்பட்டுள்ள போரால் அங்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்கு துன்புறத்தலை அனுபவித்து வரும் மக்களுக்கு நாகரிக உலகம் குறைந்தபட்சம் உதவி செய்ய வேண்டும்' என்றார்.

இதுகுறித்து அங்குள்ள அதிகாரிகள் கூறுகையில், 'நன்கொடை அளித்தவர்கள், குறிப்பாக பெண்கள் தங்க ஆபரணங்கள், செம்பு பாத்திரங்கள் மற்றும் பிற வீட்டு உபயோக பொருள்களை அளித்தனர். சில குடும்பங்கள் கால்நடைகளையும் அளித்தன. சிறார்களும் தாங்கள் சேமித்து வைத்திருந்த பணத்தை அளித்தனர். பட்காம், பாரமுல்லா பகுதிகளில் இருந்து நன்கொடை அளிக்கப்பட்டது' என்று தெரிவித்தனர். காஷ்மீர் மக்கள் அளித்த நன்கொடையின் புகைப்படங்களை 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்து, இந்தியாவில் உள்ள ஈரான் தூதரகம் வெளியிட்ட பதிவில், 'மனிதாபிமான உதவி மூலம் ஈரான் மக்களுக்கு உறுதுணையாக நிற்கும் காஷ்மீர் மக்களுக்கு நன்றி. அவர்களின் அன்பு மற்றும் மனிதாபிமானத்தை எப்போதும் ஈரான் மறக்காது. இந்தியாவுக்கு நன்றி' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருவாயூரில் 50 ஆண்டுகளாக ஹிந்து எம்எல்ஏ இல்லை! பாஜக வேட்பாளர் சர்ச்சை பேச்சு

**திருவனந்தபுரம், மார்ச் 24:**

கேரளத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புனித தலங்களில் குருவாயூர் முக்கியத்துவம் வாய்ந்து திகழ்கிறது. அங்குள்ள கிருஷ்ணர் கோவிலுக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வழிபடுகின்றனர்.



இந்நிலையில், ஹிந்துக்கள் அதிகமுள்ள குருவாயூர் சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து இதுவரை ஒரு ஹிந்து எம்எல்ஏகூட தேர்ந்தெடுக்கப்படாதது ஏன்? என்று அத்தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் பி. கோபாலகிருஷ்ணன் பேசி விடியோ வெளியிட்டு வாக்காளர்களிடம் வாக்கு சேகரித்தார்.

அவர் பேசிய அந்த விடியோவில், சுமார் ஐம்பது ஆண்டுகளாக குருவாயூர் தொகுதியிலிருந்து ஒரு ஹிந்து எம்எல்ஏ கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும், இடதுசாரி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான முன்னணிகள் இத்தொகுதியில் தங்கள் கூட்டணிகள் சார்பில் ஹிந்து வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்றும் பேசியிருக்கிறார். மேலும் அவர், குருவாயூர் ஒரு சர்வதேச புனித தலம். குருவாயூரப்பனின் நிலம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக கோயில் திருடர்களின் கைகளில் உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்கண்ட காணொலி கேரள தேர்தல் களத்தில் சர்ச்சையை கிளப்பியுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி பாஜக வேட்பாளர் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக எதிர்கட்சிகள் தரப்பிலிருந்து கோபாலகிருஷ்ணன் மீது கண்டனக் குரல்கள் வலுத்துள்ளன. இதையடுத்து, வகுப்புவாத பிரிவினையைத்தூண்டும் விதத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக கோபாலகிருஷ்ணன் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காங்கிரஸ் தரப்பில், கேரள மாணவர்கள் யூனியன் (கேஎஸ்யூ) காவல் துறையிடம் புகார் அளித்துள்ளதுடன் உயர்நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், அந்த வேட்பாளரை தகுதிநீக்கம் செய்ய கோரப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் தேர்தல் அதிகாரிகளிடமும் அவர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து பேசிய மாநில தலைமை தேர்தல் நடத்தும் அலுவலர் யூ. ரத்தன் கேல்கர், சர்ச்சைப் பேச்சு விவகாரத்தில் அம்மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## லண்டனில் யூதர்களுக்குச் சொந்தமான ஆம்புலன்ஸ்களுக்கு தீவைப்பு!

**லண்டன், மார்ச் 24:**

லண்டனில் யூத அமைப்புக்குச் சொந்தமான 4 ஆம்புலன்ஸ்களுக்கு மர்ம நபர்கள் தீவைத்ததாக செய்தி வெளியாகியுள்ளது.

லண்டனில் யூதர்கள் அதிகமாக வசிக்கும் கோல்டர்ஸ் க்ரீன் பகுதியில் அவசரநிலை மருத்துவ உதவிக் குழுவான ஹட்ஸோலா நார்ட்வெஸ்ட் எனும் யூத அமைப்புக்குச் சொந்தமான 4 ஆம்புலன்ஸ்களுக்கு தீவைக்கப்பட்டுள்ளது.


ஆம்புலன்ஸ்களில் இருந்த பல சிலிண்டர்கள் வெடித்ததால் அருகிலிருந்த வீடுகளின் ஜன்னல்கள் உடைந்துள்ளன. இதில், யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவத்திற்குக் காரணமான மர்ம நபர்கள் யாரென்று தெரியாத நிலையில் தீவைப்பு தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இதனை, யூத வெறுப்புக் குற்றமாகக் கருதுவதாக காவல்துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பாகப் பேசிய காவல்துறையினர், “இந்தச் சம்பவம் சமூகத்தில் பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக அவசர நடவடிக்கை எடுக்க விசாரணை நடத்தி வருகின்றோம். இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. குற்றவாளிகளைத் தேடிக் கொண்டிருக்கிறோம். சிலிண்டர் வெடித்ததால் அருகிலிலுள்ள வீடுகளில் மக்களை காலி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளோம்” என்று கூறினார்.

யூத சமூகப் பாதுகாப்பு அறக்கட்டளை தெரிவித்துள்ள தகவலின்படி, இஸ்ரேல் – ஹமாஸ் போர் காரணமாக கடந்த 2023 முதல் யூதர்களுக்கு எதிரான குற்றங்கள் பிரிட்டனில் அதிகரித்து வருகின்றன. யூதர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் குற்றங்கள் கடந்த 2022 இல் 1,662 ஆக இருந்த நிலையில் 2025-ல் அது 3,700 ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

யோம் கிப்பூர் என்னும் யூதப் பண்டிகை கொண்டாட்டம் பிரிட்டனில் மான்செஸ்டர் சினகோக் என்ற இடத்தில் கடந்த அக்டோபர் 2025-ல் நடைபெற்றது. அப்போது, மக்கள் கூடியிருந்த இடத்தில் காரை வேகமாக ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்திய நபர் அங்கிருந்த ஒருவரைக் கத்தியால் குத்தினார். தாக்குதலின்போது காவல்துறையினர் தவறாகச் சுட்டத்தில் மேலும் ஒரு நபர் பலியானார். இந்த விபத்து யூதர்கள் பாதுகாப்புத் தொடர்பாக பெரிய விவாதமாக மாறியது.

## தீ அணைப்பு வாகனம் மீது விமானம் மோதி விபத்து: பயணிகள் காயம்




**நியூயார்க், மார்ச் 24:**

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள லாகார்டியா விமான நிலையத்தில் ஏர் கனடா நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் விபத்தில் சிக்கியது.

தரையிறங்கும் போது ஏற்பட்ட கோளாறால், விமானம் ஓடுதளத்தில் இருந்த தீ அணைப்பு வாகனத்தின் மீது மோதியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.இந்த விபத்தில் விமானத்தின் முன்பகுதி சேதமடைந்தது. விமானத்தில் இருந்த சில பயணிகள் காயமடைந்ததாக கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் நடந்த உடனே அவசர மீட்பு குழுக்கள் விரைந்து வந்து உதவி பணிகளில் ஈடுபட்டன. தீ அணைப்பு படையினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.இந்த விபத்தினால் லாகார்டியா விமான நிலையத்தில் விமான சேவைகள் தற்காலிகமாக பாதிக்கப்பட்டன. சில விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டதுடன், சில சேவைகள் மாற்று விமான நிலையங்களுக்கு மாற்றி இயக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. விபத்து குறித்து விமான நிலைய அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் விசாரணை நடத்தி வருகின்றன.

# “அமெரிக்கா எங்களை தாக்கினால் இந்தியாவை குறிவைப்போம்” பாக். முன்னாள் அதிகாரி கருத்தால் சர்ச்சை

**இஸ்லாமாபாத், மார்ச் 24:**

பாகிஸ்தானின் அணு சக்தி வளங்களை அமெரிக்கா தாக்கினால் இந்தியாவின் டெல்லி மற்றும் மும்பையை நாங்கள் தாக்குவோம் என இந்தியாவுக்கான பாகிஸ்தானின் முன்னாள் தூதரக அதிகாரி அப்துல் பாசித் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா, இஸ்ரேல் படைகள் கூட்டாக இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதற்கு பதிலடி தரும் வகையில் ஈரானும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மேற்காசியாவில் கடுமையான போர் மூண்டுள்ளது.

இந்தச் சூழலில் ஒருவேளை அமெரிக்க தேசம் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினால் என்ன நடக்கும் என்பது குறித்து பாகிஸ்தானின் முன்னாள் தூதரக அதிகாரியான அப்துல் பாசித் கருத்து தெரிவித்துள்ளார். அது இப்போது சர்ச்சையாகி உள்ளது.

“பகைமை கண்ணோட்டத்தில் அமெரிக்கா நமது அணு சக்தி தளங்களை அழிக்கும் முயற்சியை மேற்கொண்டால் அதன் விளைவு மிக மோசமாக இருக்கும். முதலில் அது போல ஒன்று நடக்காது. அதற்கு சாத்தியம் இல்லை. ஏனெனில், நமது பாதுகாப்பு திறன்பாடு மீது நம்பிக்கை உள்ளது. இருப்பினும் அது மாதிரியான சூழல் நடந்து, அமெரிக்கா நமது ஏவுகணை வீச்சின் தொலைவுக்கு அப்பாற்பட்ட எல்லையில் இருந்தால் நமது பதிலடி தாக்குதலை மேற்கொள்ள இந்தியா மட்டுமே இருக்கும்.

மும்பை, டெல்லி என எங்கு வேண்டுமானாலும் எந்தவித யோசனையும் இன்றி தாக்குதல் நடத்த கூடும். அதன் பிறகு என்ன நடக்கிறது, அதன் விளைவு என்ன என்பது குறித்தெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை. கல்வி அறிவு பெற்றவரோ, பெறாதவரோ, பணம் படைத்தவரோ, பணம் இல்லாதவரோ என யாராக இருந்தாலும் பாகிஸ்தானில் உள்ள ஒவ்வொருவரும் ‘ஜிஹாதி’தான்” என அப்துல் பாசித் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்து வெறும் அனுமானம்தான் என்றாலும் சமூக வலைதளத்தில் கவனம் பெற்றுள்ளது. புவிசார் அரசியல் அசாதாரண சூழல் உலக அளவில் நிலவி வரும் வேளையில் அப்துல் பாசத்தின் கருத்து மேலும் மோசமடைய செய்துள்ளது.

கடந்த ஆண்டு பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிறகு ‘ஆபரேஷன் சிந்தூர்’ ராணுவ நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புகளின் புகலிடங்களை இந்தியா தாக்கியது. அதைத்தொடர்ந்து எல்லையோர மாநிலங்கள் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலை இந்தியா முறியடித்தது. இதன் பின்னர் இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் ஒப்பந்தமானது. இந்நிலையில், அப்துல் பாசித் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் லஷ்கர் தீவிரவாதி கொலை: சொந்த குடும்பத்தினரே தீர்த்துக் கட்டியதாகத் தகவல்

**இஸ்லாமாபாத், மார்ச் 24:**

பாகிஸ்தானில் லஷ்கர் -இ-தொய்பா தீவிரவாத அமைப்பின் முக்கியத் தளபதியான பிலால் ஆரிப் சராபி சனிக்கிழமை ஈத் தொழுகைக்குப் பிறகு அவரது குடும்ப உறுப்பினர்களாலேயே கத்தியால் குத்தப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.



முரிட்கே பகுதியில் உள்ள லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் உருக்குலைந்த தலைமையகத்திற்கு அருகிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குடும்பத் தகராறு காரணமா ?: இந்தக் கொலைக்கான துல்லியமான காரணம் இன்னும் வெளிவராத நிலையில், இது சொந்த குடும்பத் தகராறால் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. கொலையில் தொடர்புடைய நபர்களைப் பாகிஸ்தான் காவல்துறையினர் கைது செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தீவிரவாதி சராபி உயிரிழந்து கிடக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வந்தாலும், அதன் நம்பகத்தன்மை இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

பிலால் ஆரிப் சராபி, முரிட்கே மையத்தில் இளைஞர்களை தீவிரவாத பாதையில் திருப்புவதையும், அவர்களுக்குத் தீவிரவாதக் கொள்கைகளைப் போதித்து மூளைச்சலவை செய்வதையும் வாடிக்கையாக வைத்திருந்தார். எனினும், இவர் இந்தியாவில் தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## டிரம்ப் உருவம் பதித்த தங்க நாணயம்: அமெரிக்காவில் புதிய சர்ச்சை




**வாஷிங்டன், மார்ச் 24:**

அமெரிக்காவின் 250வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, அதிபர் டொனால்ட் டிரம்பின் உருவம் பதித்த 24 காரட் தங்க நாணயத்தை வெளியிடத் அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவின் 250 வது சுதந்திர தின நாளில் இந்த நாணயம் வெளியிடப்பட உள்ளது.

ஒருபுறம் டிரம்ப் மேசை மீது சாய்ந்து நிற்கும் உருவமும், மறுபுறம் அமெரிக்கக் கழுகு சின்னமும் கொண்ட இந்த நாணயம், பொதுப் பயன்பாட்டிற்கு இன்றி ஒரு நினைவுப் பொருளாக மட்டுமே அமையவுள்ளது. பொதுவாக உயிருடன் இருக்கும் அதிபர்களின் உருவத்தை நாணயங்களில் பொறிப்பதில்லை என்ற மரபு உள்ளதால், இந்த முடிவு தற்போது அந்நாட்டில் பெரும் அரசியல் மற்றும் சட்ட ரீதியான விவாதங்களைக் கிளப்பியுள்ளது.

## பயங்கரவாதத்தை ஒழிப்பதில் உறுதியாக உள்ளோம்: பாகிஸ்தான்

**இஸ்லாமாபாத், மார்ச் 24:**

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பாகிஸ்தான் உறுதியாக இருப்பதாக பாகிஸ்தான் தினமான இன்று பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதாக ஆப்கன் மீது பாகிஸ்தான் குற்றம்சாட்டிய நிலையில் கடந்த சில மாதங்களாக இரு நாடுகளும் எல்லை தாண்டிய தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கனில் உள்ள மருத்துவமனை ஒன்றின் மீது கடந்த வாரத் தொடக்கத்தில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் 400-க்கும் மேற்பட்ட ஆப்கன் மக்கள் கொல்லப்பட்டனர்.

போர்நிறுத்தம் தொடர்பாக சீனா மற்றும் வளைகுடா நாடுகள் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்ற நிலையில் அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் போர் காரணமாக அமைதி பேச்சுவார்த்தை மேலும் நடத்தப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, ரமலான் பண்டிகை காரணமாக கடந்த மார்ச் 18 முதல் மார்ச் 23 நள்ளிரவு வரை இரு நாடுகளும் தற்காலிகமாகப் போர்நிறுத்தம் செய்வதாக ஒப்புக்கொண்டன.

தற்காலிக போர்நிறுத்தம் இன்றுடன் முடிவடையும் நிலையில், பாகிஸ்தான் தினமான இன்று பாக். வெளியுறவுத் துறை அமைச்சர் வாழ்த்துகளைத் தெரிவித்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில், “பயங்கரவாத அச்சுறுத்தலை ஒழிப்பதில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது. ஆப்கனில் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் அதனை நோக்கியதே” என்று குறிப்பிட்டுள்ளார்.

பாக். பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வெளியிட்டுள்ள செய்தியில், “ஆப்கானிஸ்தானுக்குள் எடுக்கப்பட்ட நமது ராணுவ நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய உறுதிபாட்டின் சின்னம்.

நமது தேசத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்த நாம் அனுமதிக்க மாட்டோம்” என்று அதில் குறிப்பிட்டுள்ளார். இதனால், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே மீண்டும் போர் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஹார்முஸ் ஜலசந்தியை கடக்கும் கப்பல்களிடம் ரூ.18 கோடி கட்டணம் வசூலிக்க ஈரான் முடிவு

**தெஹ்ரான், மார்ச் 24:**

ஹார்முஸ் ஜலசந்தியை 48 மணி நேரத்தில் திறக்க வில்லை என்றால், ஈரானின் மின் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று டிரம்ப் எச்சரித்தார்.

நாட்டின் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தாக்குதல் நடத்தினார். இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி மற்றும் அவரது குடும்பத்தினர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளை குறிவைத்து ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை மேற்கொண்டது. இதன் விளைவாக ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் நூற்றுக்கணக்கான கப்பல்கள் முடங்கின.

இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் பல கப்பல்கள் தீப்பற்றி எரிந்தன. ஈரான் மீது தாக்குதலை தீவிரப்படுத்திய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், ஆயிரக்கணக்கான இலக்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது

ஹார்முஸ் ஜலசந்தி பகுதி ஈரானை ஒட்டியுள்ளதால், எதிரி நாடுகளின் எண்ணெய் கப்பல்களை ஈரான் தாக்கி வருகிறது. உலகளவில் சுமார் 5-ல் ஒரு பங்கு கச்சா எண்ணெய் போக்குவரத்து இந்த ஜலசந்தி வழியாக நடைபெறுவதால், ஈரானின் தாக்குதலால் சர்வதேச அளவில் எண்ணெய் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியை 48 மணி நேரத்திற்குள் திறக்கவில்லை என்றால், ஈரானின் மின் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று டிரம்ப் எச்சரித்தார். இந்த நிலையில், ஹார்முஸ் ஜலசந்தி மீதான தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் வகையில் ஈரான் புதிய முடிவு எடுத்துள்ளது. அதன்படி, ஜலசந்தியை கடந்து செல்லும் கப்பல்களிடம் சுமார் 18 கோடி ரூபாய் சுங்கக் கட்டணம் வசூலிக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து ஈரானின் நாடாளுமன்ற தேசிய பாதுகாப்புக் குழு உறுப்பினர் அலாயுதீன் புருஜெர்டி கூறுகையில், “இது ஈரானின் பலத்தை வெளிப்படுத்துகிறது. இந்த கட்டணம் நாட்டின் சக்தியை காட்டுவதோடு, போர் காரணமாக அதிகரித்துள்ள அரசுச் செலவுகளை சமாளிக்கவும் உதவும். அதே நேரத்தில், இது ஈரானின் அதிகாரத்தையும் பிரதிபலிக்கிறது” என்று தெரிவித்தார். ஈரானின் இந்த அறிவிப்பு தொடர்பாக அமெரிக்கா இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை.

# கார்க் தீவை கைப்பற்ற அமெரிக்கா வியூகம்: மத்திய கிழக்கு பகுதியில் புதிதாக 3 போர்க் கப்பல்கள், 2,500 வீரர்கள் நிறுத்தம்!

**வாஷிங்டன், மார்ச் 24:**

ஈரானின் கார்க் தீவை கைப்பற்ற அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது. இதற்காக புதிதாக 3 போர்க்கப்பல்கள், 2,500 கடற்படை வீரர்கள் மத்திய கிழக்கு பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.



அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்ரவரி 28 ஆம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவத்தினர் சேர்ந்து நடத்திய கூட்டுத்தாக்குதலில் ஈரானின் உச்சத்தலைவரும் மதகுருவுமான அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். அதன்பின்னர், வளைகுடா நாடுகள் மீது ஈரானும், ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் மாறி மாறி தாக்குதலைத் தொடர்ந்து வருகின்றன.

தந்தையின் படுகொலைப் பிறகு பதவியேற்ற உச்சத் தலைவர் அயத்துல்லா மொஜ்தபா கமேனி, ஈரானியர்களின் மனவுறுதியைப் பாராட்டினார். மேலும், எதிரிகளின் தாக்குதல்களை ஆட்சியை கவிழ்ப்பதற்கான பயனற்ற முயற்சிகள் என்று நிராகரித்தார்.

23 ஆவது நாளாக நீடித்து வரும் இந்த போரில், ஈரானின் ராணுவ தளங்கள், அணுசக்தி தளங்கள், எண்ணெய் வயல்கள் என 8,000-க்கும் மேற்பட்ட இடங்களை அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் தரைமட்டமாக்கி உள்ளன. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள 20 அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் ராணுவம் தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஐக்கிய அரபு அமீரகம், சவுதி, கத்தார் உள்ளிட்ட நாடுகளின் எண்ணெய் வயல்கள் மீது ஈரான் ட்ரோன்கள் மூலமும் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ஈரானின் நடான்ஸ் நகரில் உள்ள அணு சக்தி தளத்தின் மீது அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் சக்திவாய்ந்த குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் அணு சக்தி தளம் கடுமையாக சேதமடைந்தது. இருப்பினும் அங்கு அணு கதிர் வீச்சு ஏற்படவில்லை என்று ஈரான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், ஈரான் கடற்கரையில் இருந்து 26 கி.மீ. தொலைவில் கார்க் தீவு அமைந்துள்ளது. ஈரான் முழுவதும் இருந்து குழாய்கள் மூலம் இந்த தீவுக்கு கச்சா எண்ணெய் கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து உலகம் முழுவதும் 90% கச்சா எண்ணெய், எல்பிஜி, எல்என்ஜி வாயு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஈரான் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கருதப்படும் கார்க் தீவை கைப்பற்ற அதிபர் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு பகுதியில் ஏற்கெனவே 16 போர்க்கப்பல்கள் முகாமிட்டு உள்ள நிலையில் யுஎஸ்எஸ் ட்ரிபொலி, யுஎஸ்எஸ் சான் டியாகோ, யுஎஸ்எஸ். நியூ ஓர்லியன்ஸ் ஆகிய 3 அமெரிக்க போர்க்கப்பல்களையும், 2500 கடற்படை வீரர்களையும் நிறுத்தியுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் பெயர் குறிப்பிடாமல் உறுதிப்படுத்தினர். இந்தக் கப்பலில் அதிநவீன போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் உள்ளன. இதில் உள்ள வீரர்கள் கடல், வான், தரை வழி போரில் திறன் வாய்ந்தவர்கள்.



# நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது

## அ.தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு



# சாத்தான்குளம் வழக்கு: 9 பேரும் குற்றவாளிகள்!

## தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனை: இதுவரை ரூ.151 கோடி பறிமுதல்

## ரூ.2 லட்சத்திற்கு முத்திரைத்தாள் வாங்க பான் கார்டு எண் கட்டாயம்

## "அமெரிக்கா எங்களை தாக்கினால் இந்தியாவை குறிவைப்போம்"


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 24.03.2026 செவ்வாய்கிழமை இலவச இ–பேப்பர்